# வருடாந்த அறிக்கை

# 2019

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**இலக்கம் 117, சுபத்ராராம வீதி,**

**கங்கொடவில, நுகேகொட**

# உள்ளடக்கம்


- அறிக்கையை கௌரவ செயலாளரிடம் சமர்ப்பித்தல் 03
- தலைவரின் செய்தி 04
- நிறுவனத்தின் நோக்கும் அரும்பணியும் 06
- பணிப்பாளர் சபை 07
- நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு 09
- முன்னுரை 10

**பிரிவுகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களின் அறிக்கைகள்**

- நெறிப்படுத்தல் பிரிவு 15
- காப்புறுதிப் பிரிவு 23
    - கமத்தொழில் காப்புறுதி அலுவல்களும் கால்நடைக் காப்புறுதி அலுவல்களும்
- கமக்காரர் ஓய்வூதியப் பிரிவு 32
    - கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் மற்றும் கடற்றொழிலாளர்ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

- நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவு 40
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு 47
- திட்டமிடல் பிரிவு 52
- நிதிப் பிரிவு 57

**கணக்குகள்**

- முந்திய ஐந்து வருடங்களுக்கான நிதிசார் தகவல்கள் 59
- ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்குமான ஒருங்கிணைந்த கணக்குக் கூற்றுகள் 63
- கமத்தொழில் காப்புறுதித் திட்டம் 66
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 97
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 116

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள்**

- கமத்தொழில் காப்புறுதித் திட்டம் 135
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 144
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 153

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுக்கான பதில்கள்**

- கமத்தொழில் காப்புறுதித் திட்டம் 160
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 164
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 169

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
**AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD**

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams – රක්ෂණ / ரக்ஷன / Rakshana
117, සුභද්‍රාරාම පාර, ගංගොඩවිල, නුගේගොඩ
117, Subadrarama Rd., Gangodavila, Nugegoda

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No. 4/5/மு/ர/11 ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No. ........ දිනය / திகதி / Date 2021-10-15

செயலாளர்,

விவசாய அமைச்சகம்,

80/5, “உழவர் வீடு”,

ராஜமல்வத்த லேன்,

பத்தரமுல்ல.

<u>வருடாந்த அறிக்கை - 2019</u>

2019 ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நிருவாக, தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் அலுவல்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் மற்றும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய 2019 ஆம் ஆண்டுக்கான சபையின் வருடாந்த அறிக்கையை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

දුරකථන / தொலைபேசி / Telephones
ෆැක්ස් / பெக்ஸ் / Fax

සභාපති / தலைவர் / Chairman
011-2812571
011-2812572
011-2812573

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General
011-5732397
011-2812574

ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office
011-5384000

## கௌரவ தலைவரின் செய்தி

2018 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் இருந்து அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைரீதியான தீர்மானத்தின் பேரில் நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் ஆகிய பிரதான ஆறு வகைப் பயிர்களுக்காக கமக்காரர்களிடமிருந்து காப்புறுதித் தவணைப் பணம் அறவிடப்படாமல் ஒரு ஏக்கருக்கான ரூ. 3,600/- காப்புறுதித் தவணைப்பணம் அரசாங்கத்தினால் பொதுதிறைசேரியால் செலுத்தப்படுவதற்கு கட்டுப்பட்டதாக ஏக்கருக்கு ரூ. 40,000/- காப்புறுதிக் காப்பீட்டினை வழங்குகின்ற காப்புறுதி நிகழ்ச்சித்திட்டமொன்று 2018 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்பட்டது. அதனை 2019 ஆம் ஆண்டிலும் அமுலாக்கியமை மூலமாக கமக்காரர்களுக்கு இந்த 6 வகைப் பயிர்கள் தொடர்பில் இடம்பெறுகின்ற சேதங்களுக்கு காப்பீடு வழங்க இயலுமானதன்பேரில் அவர்கள் மத்தியில் மென்மேலும் பயிர்செய்வதற்கான ஆர்வத்தை ஏற்படுத்துல் மீது நேரடியாக தாக்கத்தை எற்படுத்திய காரணமாக எடுத்துக்காட்டப்பட முடியும்.

இலவசமாகஅமுலாக்கப்படுகின்றஇந்த பயிர்க்காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் சபையின் நிதிசார் வருமானத்தைப் பிறப்பிப்பதில் தாக்கமேற்படுத்துகின்ற ஒரு விடயமாக அமைந்தபோதிலும் உள்நாட்டு கமக்காரர்களை பாதுகாத்து அவர்களின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதன் அரசாங்க நோக்கத்திற்கு பங்களிப்புச்செய்ய இயலுமானமை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட சமூக நற்பணியெனக் கருதுகிறேன்.

இந்த நிலைமையின் கீழும் சபையினால் 2019 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதித் திட்டங்கள் மூலமாக 652.3மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியுள்ளதோடு இவ்வருடத்தில் ஈட்டியுள்ள தொழிற்பாட்டு இலாபம் 878.1மில்லியன் ரூபாவாகும். வருடத்தில் சபையின் ஏனைய காப்புறுதி வருமானம் 298.6மில்லியன் ரூபாவாக அமைந்தோடு அது 2018 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 53%வளர்ச்சியாகும்.

பாதிப்புற்ற கமக்காரர்களுக்காக துரிதமாக இழப்பீட்டுத் தொகைகளை செலுத்துதல் சபையின் முதன்மை செயற்பொறுப்பாக அமைவதோடு 2019 ஆம் ஆண்டிலும் தீவின் பிரதானமாக விவசாய மாவட்டங்கள் பலவற்றில் மிகையான மழை, வெள்ளப்பெருக்கு காரணமாகவும் படைப்புழுவின் தொல்லை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக சபையின் கட்டாய பயிர்க் காப்புறுதிப் பொறுப்பு ஏறக்குறைய 2,155மில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது.

சபையினால் அமுலாக்கப்படுகின்ற கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் திருத்தத்திற்காக அமைச்சரவைத் தீர்மானத்தின்பேரில் நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழு கமக்காரர்களின் பொருளாதாரத்திற்கு சுமையேற்படாதவண்ணம் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக்கூடிய, விவசாயிகளின் முதுமைப்பருவத்தை சுகமாக கழிப்பதை பிரதான நோக்கமாகக்கொண்டு மிகவும் கவர்ச்சிகரமான ஓய்வூதியத் திட்டமொன்றை தயாரிப்பதற்காக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க புதிய செயற்றிட்டம் நிறுவப்படும்வரை செயற்றிட்டங்களின் உதவுதொகை செலுத்துனர்களுக்காக ஓய்வூதியமும் இறப்பு மற்றும் ஏலாமை நன்மைகளும்

2019 ஆம் ஆண்டிலும் உரிய வகையில் செலுத்தப்பட்டு கமக்காரர்களின் அவசியப்பாடுகள் நிவர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக விவசாயத் தரவு முறைமையொன்றை உருவாக்குகின்ற தேசிய வேலைத்திட்டத்திற்கு தனித்துவமான பங்களிப்பினை வழங்கும் பணிகளும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

# கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

- **நோக்கு**

**உள்நாட்டு விவசாயத்தின் உன்னதமான பாதுகாவலனாக மாறுவதன் மூலமாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாமாரணமாகத் திகழும் காப்புறுதி நிறுவனமாதல்.**

- **அரும்பணி**

கமத்தொழில் காப்புறுதி மற்றும் பாதுகாப்பினை வழங்குவதற்கான கூட்டு முயற்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இணைப்பாக்கம் செய்வதன் ஊடாக சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை வழங்குதல்.

# பணிப்பாளர் சபை - 2019

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. சுமித் வர்ணகுலசூரிய<br>தலைவர்<br>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை<br>நுகேகொட | தலைவர் |
| 02 | கலாநிதி திரு. டப்ளிவ்.எம். வீரக்கோன்<br>பணிப்பாளர் நாயகம்,<br>கமத்தொழில் திணைக்களம்,<br>பேராதனை | அங்கத்தவர் |
| 03 | திரு. டபிள்யு.எம்.எம்.பீ.வீரசேகர<br>கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்<br>கமநல அபிவிருத்தி திணைக்களம் | அங்கத்தவர் |
| 04 | திரு. எச்.ஏ.என்.எஸ். குமார<br>பணிப்பாளர்<br>பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்<br>கொழும்பு 01, - 2019 யூலை மாதம் வரை<br><br>செல்வி தர்ஷனீ த சில்வா - 2019ஒற்றோபர் தொடக்கம்<br>பணிப்பாளர்<br>தகவல், வளங்கள் இணைப்பாக்கம் மற்றும் கொள்கை ஆராய்ச்சிக்<br>கற்கைப் பிரிவு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | அங்கத்தவர் |
| 05 | செல்வி நிமல்கா டயஸ்<br>மேலதிக செயலாளர் (நிருவாகம் மற்றும் மனித வள அபிவிருத்தி)<br>கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை<br>அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள் அமைச்சு | அங்கத்தவர் |

| | | |
|---|---|---|
| 06 | கலாநிதி கே.டி. ஆரியபால<br>மேலதிக செயலாளர் (கால்நடை வளங்கள் திணைக்களம்)<br>கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை<br>அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள் அமைச்சு<br>- 2019 செத்தெம்பர் வரை<br><br>கலாநிதி கே.பி.ஜீ.கே. பத்ரலதா - 2019 ஒற்றோபர் தொடக்கம்<br>மேலதிக செயலாளர் (கால்நடை வளங்கள் திணைக்களம்)<br>கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமுதாய அபிவிருத்தி அமைச்சு | அங்கத்தவர் |
| 07 | திரு. என்.பீ.எம். ரணதுங்க<br>பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) கமத்தொழில், கிராமிய<br>பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம்,<br>கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள் அமைச்சு | அங்கத்தவர் |
| 08 | திரு. டி.எம். நெவில் திசாநாயக்க<br>மக்கள் வங்கி<br>மரதன்கடவல | அங்கத்தவர் |
| 09 | திரு. ஆர்.எம். புஞ்சிரால<br>(தேசிய கமக்காரர் சங்கத்தின் அங்கத்தவர்) | அங்கத்தவர் |

# தாபனக் கட்டமைப்பு

## கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை



# முன்னுரை

விவசாயத்தின் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக அமுலாக்கப்படுகின்ற தேசிய வேலைத்திட்டத்தில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை பிரமாண்டமான செயற்பொறுப்பினை ஈடேற்றி வருகின்றது.

அதன் முதன்மைப் பணியென்றவகையில் அபாயநேர்வு முகாமைத்துவத்தில் விவசாயிக்காக இடையீடு செய்கின்ற தரப்பினராக தொடர்புகொள்வது விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன்போது விவசாயியின் பயிர்களுக்கான அபாயநேர்வினை பொறுப்பேற்பதற்கு மேலதிகமாக விவசாயியின் வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் களஞ்சியங்களுக்காகவும் செயலாற்றிவருவதும் தனித்துவமானதாகும்.

விவசாயியைப் போன்றே விவசாயத்தினதும் நிலைபெறுதகு மேம்பாட்டுக்காக நாட்டின் உணவு உற்பத்திச் செயற்பாங்கினை மிகவும் உறுதியாகவும் துரிதப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு கமத்தொழில் அமைச்சினை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கத்தினால் விவசாயிகளுக்காக அமுலாக்கிய உர மானியம் போன்ற கமக்காரர்களுக்காக அமுலாக்கப்பட்ட வசதிகள் ஊக்குவித்தல்களின்கீழ் நாட்டில் பயிரிடப்படுகின்ற 06 வகைகளச் சேர்ந்த பயிர்களுக்காக 2018 சிறு போகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலவசமாக வழங்கப்பட்ட கட்டாயக் காப்புறுதித் திட்டத்தின் நடைமுறைச் செயற்பாட்டுக்கு இலக்காகிய ஒரு வருடமாக 2019 கருதப்பட இயலும்.

**வருடாந்த தவணைப்பண வருமானம் 2015 தொடக்கம் 2019 வரை**

| காப்புறுதித் திட்டம் (மில்.ரூ.) | 2015 (மில்.ரூ.) | 2016 (மில்.ரூ.) | 2017 (மில்.ரூ.) | 2018 (மில்.ரூ.) | **2019 (மில்.ரூ.)** |
|---|---|---|---|---|---|
| பயிர்க் காப்புறுதித் திட்டம் | 104.60 | 94.85 | 95.66 | 128.01 | **61.11** |
| கால்நடைக் காப்புறுதித் திட்டம் | 9.00 | 10.56 | 13.39 | 10.59 | **7.87** |
| கஞ்சிய விவசாய உபகரணங்கள் மற்றும் மூன்றாந் தரப்பு காப்புறுதித் திட்டம் | 1.08 | 7.82 | 42.11 | 137.85 | **220.15** |
| சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதித் திட்டம் | 16.43 | 15.61 | 5.31 | 6.34 | **9.42** |
| உர மானியக் காப்புறுதித் திட்டம் | 1,006.40 | 608.19 | - | - | - |
| **கூட்டுத்தொகை** | 1,137.51 | 737.03 | 156.47 | 282.79 | **298.55** |

**வருடாந்த தேறிய இலாபம் 2015 தொடக்கம் 2019 வரை**

| | 2015 (மில்.ரூ.) | 2016 (மில்.ரூ.) | 2017 (மில்.ரூ.) | 2018 (மில்.ரூ.) | **2019 (மில்.ரூ.)** |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 1,156.10 | 782.20 | 5735.10 | 4,398.50 | **3,365.10** |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | (1,116.10) | (404.50) | (5654.20) | (3,253.80) | **(2,487.00)** |
| தொழிற்பாட்டு மிகைநிலை | 40.00 | 377.70 | 80.90 | 1,144.7 | **878.10** |
| அரச கொடையும் பிற வருமானங்களும் | 100.80 | 122.50 | 130.10 | 4.00 | **9.10** |
| மொத்தச் செலவு (ஒதுக்கீடுகளையும் உள்ளடக்கியதாகும்) | (132.00) | (160.30) | (168.70) | (227.70) | **(234.90)** |
| **வருடாந்த தேறிய இலாபம் / நட்டம்** | 8.80 | 339.90 | 42.30 | 921.00 | **652.30** |

2019 ஆம் ஆண்டில் சபையின் வருமானம் முனைப்பாகத் தெரிகின்ற முன்னேற்றத்தை அடைய மூன்றாந் தரப்பு வாகன காப்புறுதித் திட்டத்திற்கு இயலுமாயிற்று. 2018 ஆம் ஆண்டில் 137.85 மில்லியன் ரூபாவாக விளங்கிய நிலைமையை 2019 ஆம் ஆண்டில் 220.15 மில்லியன் ரூபா வரை அதிகரித்துக்கொள்ள இயலுமானமை தனித்துவமானதாக அமைந்தது. மூன்றாந் தரப்பு வாகனக் காப்பறுதித் திட்டத்தின் சட்டமுறையான தடைகளை தீர்த்துக்கொள்ளல் மற்றும் மாவட்ட மட்டத்தில் விரிவான சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கல் மூலமாக சம்பந்தப்பட்ட செயற்றிட்டம் தொடர்பிலான நம்பிக்கையை விவசாயிகள் மத்தியில் எற்படுத்தியதன் விளைவாக இந்த முன்னேற்றத்தை அடைய இயலுமாயிற்று. அதனூடாக ஈட்டிய வருமானம் சபையின் நிதிசார் உறுதிநிலையை விருத்திசெய்து கொள்வதற்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

2018/19 பெரும்போகத்துடன் தொடர்புடையதாக பயிர்ச்சேதம் கணிசமான அளவில் இத்தடவை பதிவாகியது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் 2018 திசெம்பர் மாதத்தில் நிலவிய மோசமான வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக பயிர்ச்சேத பரிசீலித்தலுக்காக விசேடமான பல்வேறு நடமாடும் சேவைகளை அமுலாக்கவேண்டி நேர்ந்த வருடமாக 2019 ஆம் ஆண்டினை எடுத்துக்காட்ட இயலும். அதற்கிணங்க பெரும்போகத்திற்காக 946 மில்லியன் ரூபா பணத்தொகை இழப்பீடாக கமக்காரர்களுக்கு செலுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக அநுராதபுரம், மொணறாகல, அம்பாறை, பதுளை மாவட்டங்களை முதன்மையாகக்கொண்டு பரவிச்சென்ற படைப்புழுக்களின் தொல்லையால் சேதமுற்ற 4,711 சோளச் செய்கை காணிக்காக 4,265 கமக்காரர்களுக்கிடையில் 168 மில்லியன் ரூபா பணத்தைச் செலுத்த அவசியமான நடவடிக்கைகளும் அனைத்துவிதமான மதிப்பீடு செய்தல்களும் இழப்பீடு கணிப்பிடப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டன. அதைப்போலவே

இந்த தொல்லை காரணமாக பகுதியளவிலான மற்றும் சிறிய அளவிலான சேதங்களாக பதிவாகிய கமக்காரர்களுக்காகவும் இழப்பீட்டுத் தொகைகளை செலுத்துதல் இக்காலப்பகுதிக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்டது.

2019 ஆண்டின் இறுதியில் மூன்று பயிர்ச்செய்கைப் போகங்களில் அதாவது 2018 சிறுபோகம், 2018/19 பெரும் போகம் மற்றும் 2019 சிறு போகங்களில் இடம்பெற்ற சேதங்களுக்காக இழப்பீட்டினைக் கணிப்பிட்டு பணத்தை விடுவிக்க இயலுமாயிற்று.

2019 சிறு போகத்திற்காக தேசிய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்குகின்ற அனைத்துப் பயிர்ச்செய்கைகளுக்காகவும் மறு காப்புறுதி வசதிகள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பெறப்பட்டு காப்புறுதிக் காப்பீட்டினைஉறுதிசெய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கமத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின்கீழ் உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிசார் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்கான கருத்திட்டத்தின் பணிகள் 2019 ஆம் ஆண்டில் தீவின் பல மாவட்டங்களை முதன்மையாகக்கொண்டு அமுலாக்கப்பட்டதோடு அதற்கு மேலதிகமாக விவசாயத் தரவுகளை உள்ளடக்கிய முகாமைத்துவ தரவு முறைமையொன்று (MIS) சகிதம்Cloud Based வெப் / நடமாடும் உள்ளீட்டினைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றும் 2019 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டது. இதன் மூலமாக விவசாய நிலங்களை வரைபடமாக்கல் மற்றும் விவசாய நிலங்களின் தரவுகளை உள்ளீடுசெய்யும் பணிகள் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் அமுலாக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக பாரியளவில் சேதமடைந்த பயிர் நிலங்கள் செய்மதி புகைப்படங்கள் மற்றும் ட்றோன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மதிப்பீடுசெய்தல் புதிய தொழில்நுட்பத்துடன் கலக்கின்ற சபையின் செயற்பாட்டின் பாராட்டத்தக்க மாற்றமெனக் குறிப்பிப்பட இயலும்.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை மூலமாக அமுலாக்கப்படுகின்ற பிரதானமான சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டமான கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் பங்களிப்புச் செய்துள்ள ஒட்டுமொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை 959,254 ஆக அமைந்ததோடு இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் நன்மைகள் வழங்கப்படுகின்ற கமக்காரர்களின் எண்ணிக்கை 159,425 ஆகும்.

இதற்கு மேலதிகமாக மீனவர் சமுதாயத்தின் நன்மை கருதி அமுலாக்கப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தின் கீழ் 60,049 ஆக அமைந்த மீனவர்கள் அங்கத்துவம் வகிப்பதோடு 4,755 கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலான நடப்புப் பொறுப்பு 70.2 பில்லியன் ரூபாவாக அமைந்தது. இந்த பொறுப்பிற்கு முகங்கொடுப்பதற்காக கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்காக திறைசேரி முறிகளை விநியோகித்தல் அப்போது மேற்கொண்ட தீர்மானத்திற்கிணங்க வருமதியான 05 பில்லியன் ரூபா நிதியம் இவ்வாண்டிலும் சபைக்கு கிடைக்கவில்லை என்பதோடு, ஒவ்வோராண்டிலும் ஓய்வூதியம் செலுத்துவதற்காக அவசியமான ஏற்பாடுகள் அரச வரவுசெலவுத் திட்டம் மூலமாக ஒதுக்கப்படுகின்றது.

தற்போது அமுலாக்கப்படுகின்ற இந்த கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்காக பெறுபேறுமிக்க புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை கமத்தொழில் அமைச்சினதும் வழிகாட்டலின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையின்பேரில் தயாரித்து முடித்துள்ளதோடு 2020 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட அங்கீகாரங்களைப் பெற்று புதிய ஓய்வூதியத் திட்டத்தை அமுலாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகத்தை உள்ளிட்ட 07 உத்தியோகத்தர்கள் பல சந்தர்ப்பங்களில் இந்திய அரசாங்கத்தினால் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த பயிற்சி செயலமர்வுகள் மற்றும் விசேட கமத்தொழில் காப்புறுதி மாநாடுகளில் பங்கேற்கச் செய்வித்தமை இவ்வருடத்தின் தனித்துவமான வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக அமைந்தது. அதற்கு மேலதிகமாக அனைத்து மாவட்ட வெளிக்களப் பணியாளர்களுக்கும் விடயத்துறைசார்ந்த முகாமைத்துவ உதவியாளர்களக்குமான பிராந்திய மட்டத்திலான சபையின் செயற்றிட்டங்கள் தொடர்பான நிதிசார், கணினித்துறை மற்றும் மேம்பாட்டினை முதன்மையாகக்கொண்ட ஒரு நாள் செயலமர்வுத் தொடரினை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு மாவட்டப் பணியாளர்களுடன் நேரடியாக தொடர்புபடுதலின் ஊடாக அவர்களின் பெரும்பாலான நடைமுறை அலுவலகச் சிக்கல்களுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க அதன் மூலமாக இயலுமாயிற்று. இந்த பயிற்சி செயலமர்வுகள் தலைமையகத்தின் பிரிவுத் தலைவர்களின் நெறிப்படுத்தலின் பேரில் இடம்பெற்றன.

2019 ஆம் ஆண்டில் இளைப்பாறியமை மற்றும் இறந்தமை காரணமாக சபையின் 24 உத்தியோகத்தர்கள் நீங்கியதோடு 21 வெளிவாரி ஆட்சேர்ப்பும் ஒரு பதவியுயர்வும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இன்றளவில் சபையின் ஒட்டுமொத்த ஊழியர் எண்ணிக்கை 282 ஆக அமைவதோடு 421 ஆக அமைகின்ற அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 139 வெற்றிடங்கள் நிலவுகின்றன.

தேசிய விவசாய, கால்நடை உற்பத்திச் செயற்பாங்கின்போது விரிவான பங்களிப்பினை வழங்கி அபாயநேர்வினைக் குறைப்பதற்கான பலத்தை விவசாயியை முதன்மையாகக்கொண்ட தேசிய விவசாய உற்பத்திச் செயற்பாங்கிற்கு வழங்கி நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்திச் செயற்பாங்கின் முதன்மைப் பணியை ஈடேற்றி வருகின்ற நிறுவனமென்றவகையில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை தனது பொறுப்பினை 2019 ஆம் ஆண்டிலும் ஈடேற்றியது.

# நெறிப்படுத்தல் பிரிவு

# நெறிப்படுத்தல் பிரிவு - 2019

அபாயநேர்வு முகாமைத்துவ முறையியலென்ற வகையில்உள்நாட்டு விவசாயத்துறைக்கு கமத்தொழில் காப்புறுதியை அறிமுகஞ்செய்து உள்நாட்டு விவசாய உற்பத்தியை அதிகரிப்பதையும் விவசாயியை பாதுகாப்பதையும் முதன்மைப் பணியாகக்கொண்டு கமத்தொழில் காப்புறுதிச்சபை இயங்கிவருகின்றது. வறட்சி, வெள்ளப்பெருக்கு, காட்டு யானைகளின் சேதங்களை உள்ளிட்ட இயற்கை அனர்த்த நிலைமைகளின்போது கமக்காரர்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார சிக்கல்களுக்கான சிறந்த தீர்வாக கமத்தொழில் காப்புறுதித் திட்டம் முக்கியத்துவம் வகிக்கின்றது. அத்துடன் கமத்தொழில் காப்புறுதி பாங்கு மூலமாக உள்நாட்டுப் பொருளாதாரத்தை பலப்படுத்துகையில் விவசாய அபாயநேர்வு முகாமைத்துவத்தை நடைமுறைச் சாத்தியம் மிக்கதாக பிரயோகத்தலானது உள்நாட்டு விவசாயப் பொருளாதாரத்தையும் வாழ்க்கைப் பாங்கினையும் நிலையான மட்டத்தில் பேணி வருவதில் பாரிய உறுதுணையாக அமைந்துள்ளது. குறிப்பாக கமக்காரர்களுக்கு மிகவும் நெருக்கமான பயிர்க்காப்புறுதி செயற்றிட்டம், கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம், சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்பறுதி, விவசாய உபகரணக் காப்புறுதி, களஞ்சியக் காப்புறுதி மற்றும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி போன்ற அதிக நன்மைகளைக்கொண்ட பல காப்புறுதி செயற்றிட்டங்கள் கமக்காரர்களுக்காக சபை ஊடாக அமுலாக்கப்பட்டு வருகின்றது.

கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபையின் சேவைகளை கமக்காரர்கள் மத்தியில் விரிவாக்குகையில் மிகவும் முக்கியமான செயற்பொறுப்பினை ஈடேற்றுகின்ற பொறுப்பு நெறிப்படுத்தல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சபையினால் அமுலாக்க உத்தேசித்துள்ள எதிர்கால வேலைத்திட்டத்தை உள்ளிட்ட கூட்டுத் திட்டத்திற்கு அமைவாக அனைத்துவிதமான தாபனஞ்சார் திட்டங்களையும் தயாரித்தல், மேற்படி திட்டங்களை அமுலாக்குவதற்காக தீவடங்கிலும் வியாபித்துள்ள எமது மாவட்ட அலுவலகங்களை நெறிப்படுத்துதல், அதற்கான மனிதவள மற்றும் பௌதீக அவசியப்பாடுகளை நிறைவுசெய்தலை உள்ளிட்ட தனித்துவமான செயற்பொறுப்பு நெறிப்படுத்தல் பிரிவினால் ஈடேற்றப்பட்டு வருகின்றது.

- கமத்தொழில் காப்புறுதித் துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்குகின்ற பிரதானமான அரச நிறுவனம் என்றவகையில் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்துதல்

தொடர்பில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பினை உச்ச அளவில் ஈடேற்றுவதை நோக்கமாகக்கொண்டு 2019 ஆம் ஆண்டிலும் பல கமத்தொழில் காப்புறுதித் திட்டங்களை நாடளாவியரீதியில் அமுலாக்க நெறிப்படுத்தல் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1. பயிர்க் காப்புறுதித் திட்டம்
   - நெற் பயிர்க் காப்புறுதித் திட்டம்
   - சோளச் செய்கை காப்புறுதித் திட்டம்
   - பெரிய வெங்காயக் காப்புறுதித் திட்டம்
   - உருளைக் கிழங்கு காப்புறுதித் திட்டம்
   - மிளகாய் செய்கை காப்புறுதித் திட்டம்
   - சோயா செய்கை காப்புறுதித் திட்டம்
   - உப உணவுச் செய்கை காப்புறுதித் திட்டம் (எள்ளு, குரக்கன், கொள்ளு, பயறு, கவ்பி, உழுந்து)
   - கரும்புச் செய்கை காப்புறுதித் திட்டம்
   - ஏற்றுமதிப் பயிர்க் காப்புறுதித் திட்டம் (மிளகு, கறுவா)
   - பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை காப்புறுதித் திட்டம் (தேயிலைச் செய்கை)
   - தெங்குச் செய்கை காப்புறுதித் திட்டம்
   - மலர்ச் செய்கை காப்புறுதித் திட்டம்
   - இஞ்சி செய்கை காப்புறுதித் திட்டம்
   - மரக்கறிச் செய்கை காப்புறுதித் திட்டம்
   - வாழைச் செய்கை காப்புறுதித் திட்டம்
   - பழச் செய்கை காப்புறுதித் திட்டம்
2. களஞ்சியக் காப்புறுதித் திட்டம்
3. விவசாய உபகரண காப்புறுதித் திட்டம்
4. கால்நடைக் காப்புறுதித் திட்டம்
   - மாடுகள்
   - ஆடுகள்
5. திடீர் விபத்து காப்புறுதித் திட்டம்
6. சுவசெத சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

7. மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம்
8. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்
    - கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்
    - கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளால் ஏற்படுகின்ற அனர்த்தங்களிலிருந்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு தோன்றக்கூடிய சேதங்கள் காரணமாக கமக்கார சமுதாயத்திற்கு எதிர்நோக்க நேரிடுகின்ற சிரமங்களுக்கான தீர்வாக நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் செய்கைகளுக்காக கமக்காரர்களினதும் அரசாங்கத்தினதும் பங்களிப்புடன்கூடிய கட்டாயக் காப்புறுதித் திட்டத்தில் கமக்காரர்களை பங்கேற்கச் செய்வித்தல் இடம்பெற்றதோடு 2018 சிறு போகத்திலிருந்து கமக்காரர்களிடமிருந்து தவணைப்பணம் அறவிடப்படாமல் அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்தின் பேரில் ஒரு ஏக்கருக்காக ரூ. 40,000 ஐ உச்ச எல்லையாகக்கொண்டு காப்புறுதிக் காப்பீட்டினை வழங்க அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கமத்தொழில் அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், மகாவலி அபவிருத்தி அதிகார சபை, அரச மற்றும் அரசதுறையல்லாத வங்கிகளை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களினதும் இணைப்பாக்கத்துடன் இந்த காப்புறுதித் திட்டம் 2018 சிறு போகத்தில் இருந்து சபையினால் நாடளாவியரீதியில் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

**<u>நெறிப்படுத்தல் பிரிவினால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் :</u>**

- 2018/19 பெரும் போகத்தின் நெல் விளைச்சல் அறுவடை செய்யப்பட்ட பின்னர் அநுராதபுரம் ஜயஶ்ரீ மகா போதிக்கருகில் புத்தரிசி விழா 2019.04.06 மற்றும் 07 ஆகிய திகதிகளில் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்றதோடு பிரித் கூடத்தை அமைத்தல், ஒலிபெருக்கி வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட பல பணிகள் சபையின் அனுசரணையுடனும் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட்டன.

- 2018/19 பெரும் போகத்தில் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட மிகையான மழை காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும்பாலான செய்கைகள் சேதமடைந்தன. குறிப்பாக கிளிநொச்சி

மாவட்டத்தின் இரணைமடு குளத்திற்கு எற்பட்ட சேதத்தின் விளைவாக ஏறக்குறைய 27,000 ஏக்கர் வயற்காணிகள் சேதமடைந்ததாக பதிவாகியது. அதன்போது கமத்தொழில் அமைச்சரும்சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளை உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின்போதும் வெளிக்கள அவதானிப்பின்போதும் சேதமடைந்த விளைநிலங்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கான முறையியலொன்றை தயாரிக்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2019.01.07 ஆந் திகதி தொடக்கம் 03 வாரங்களுக்குள் சபையின் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள், கமநல சேவைகள் உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் கூட்டாக அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அவ்விதமாக வடக்கு மாகாணத்தில் சேதமுற்ற விளைநிலங்களை இனங்கண்டு மிகவும் சரியான முறையியலைக் கடைப்பிடித்து கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக மிகவும் நடைமுறைச் சாத்தியமானதும் சரியானதுமான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- 2018/19 பெரும் போகத்தில் சோளச் செய்கைக்கு படைப்புழுத் தொல்லை காரணமாக அதிகளவிலான தாக்கம் ஏற்பட்ட அம்பாறை, மொணறாகல மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் முதலாவது படிமுறையாக முழுமையான சேதமேற்பட்ட கமக்காரர்களின் விளைநிலங்கள் பரிசோதிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் மார்ச்சு மாதத்தில் இருந்து ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதிவரை இந்த வெளிக்கள பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு இனங்காணப்பட்ட கமக்காரர்களுக்கு மிகவும்சரியான முறையியலொன்று கடைப்பிடிக்கப்பட்டு இழப்பீடு செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- 2019 சிறுபோகத்தில் குருநாகல், கம்பஹாமற்றும் மாத்தறை மாவட்டங்களில் வறட்சி மற்றும் மிகையான மழை காரணமாக சேதமடைந்த விளைநிலங்களை அவதானிப்பதற்காக தலைமையக மற்றும் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர் பங்கேற்புடன் வெளிக்கள அவதானிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது அதிகமான பயிர்ச்சேதம் பதிவாகியுள்ள கமநல சேவைகள் நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவதானிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் விவசாயத்தின் சேவைகளைப் புரிந்து பிரதம அமைச்சர் அலுவலகத்திலும் நிதி அமைச்சிலும் Enterprises Sri Lanka – 2025 கண்காட்சி2019 யூலை மாதம் 24 ஆந் திகதி தொடக்கம் 27 ஆந் திகதி வரை அநுராதபுர

மாவட்டத்தின் வலிசிங்க ஹரிஸ்சந்திர பூங்கா வளாகத்தில் நடாத்தப்பட்டதோடு அங்கு சபையை பிரதிநிதித்துவம் செய்து கண்காட்சிக் கூடமொன்று பேணிவரப்பட்டது. அதன்போது துண்டுப் பிரசுரங்கள், பெனர்கள், போஸ்டர்கள்மற்றும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சபை மூலமாக அமுலாக்கப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் கண்காட்சியை பார்வையிட வருகின்ற அனைத்துப் பார்வையாளர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- 2018 சிறுபோகத்தில் பயிர்ச்சேதம் ஏற்பட்ட கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கான வைபவத் தொடர்கள் 2019 ஓகத்து மாதத்தில் கௌரவ பிரதம அமைச்சர் ரனில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலும் ஏனைய அமைச்சர்கள் பிரமுகர்களின் பங்கேற்புடன் மொணறாகல, பொலநறுவை, அநுராதபுரம், அம்பாறை, குருநாகல், மாத்தளை, தம்புத்தேகம, யாழ்ப்பாணம், கம்பஹா, புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை மையமாகக்கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கைள் எடுக்கப்பட்டன.

- 2018/19 பெரும் போகத்தில் சோளச் செய்கைக்கு ஏற்பட்ட படைப்புழுவின் சேதம் காரணமாக நிர்க்கதி நிலையுற்ற கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கான வைபவம் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் பிரமுகர்களின் பங்கேற்புடன் 2019.07.31 ஆந் திகதி திருகோணமலை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட ஆவன செய்யப்பட்டன.

- சபையின் சேவைகளை வினைத்திறனுடனும் சரியாகவும் ஈடேற்றியமைக்காக தலைமையகத்திலும் மாவட்டத்திற்குப் பொறுப்பான அனைத்து நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன்2019.10.25 மற்றும்26 ஆகிய இரண்டுநாள் செயலமர்வினை கண்டி, நில்லம்பவில் அமைந்துள்ள சமுர்த்தி பயிற்சி நிலையத்தில் நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்போது நிலவுகின்ற சுற்றறிக்கைகளின் பிரகாரம் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற விதம் பற்றியும் நிலவுகின்ற நடைமுறைச் சிக்கல் பற்றிக் கலந்துபேசி அவற்றுக்கான தீர்வுகளை வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டதோடு உத்தியோகத்தர்களின் ஆக்கமுறையான சிந்தனைகளை ஏற்படுத்துவதற்கன விசேட விரிவுரைகளும் நடாத்தப்பட்டன.

- பயிர்க் காப்புறுதி, மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி மற்றும் கால்நடைக்காப்புறுதி தொடர்பான அலுவலக முறையியல் பற்றி

விழிப்புணர்வூட்டுவதற்காக மாவட்ட மட்டத்தில் விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

| திகதி | நிகழ்ச்சியில் பங்கேற்ற மாவட்ட அலுவலகங்கள் | நிகழ்ச்சி நடைபெற்ற இடம் |
|---|---|---|
| 2019.12.17 | கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி | தலைமையக கேட்போர் கூடம் |
| 2019.12.19 | மொனறாகல, பதுளை, அம்பாறை, எம்பிலிபிட்டிய | NAQDA நிறுவனம் – மொணறாகல |
| 2019.12.23 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, வவுனியா | கமநல சேவைகள் கேட்போர் கூடம் – வவுனியா |
| 2019.12.24 | அநுராதபும், பொலநறுவை, தம்புத்தேகம, மாகோ, குருநாகல், தெஹிஅத்தகண்டிய, மன்னம்பிட்டி | மாவட்ட செயலகம் – அநுராதபுரம் |

- மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தை கமக்காரர்களிடையே பிரபல்யப்படுத்துவதற்காக மாவட்ட மட்டத்திலான முகவர்களை (அரச பிரிவு) நியமித்தல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கேகாலை, மாத்தறை, மாகோ, கம்பஹா, அநுராதபுரம், மொணறாகல, பதுளை, இரத்தினபுரி மாவட்டங்களில் காப்புறுதி முகவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படுகின்ற பிரச்சார மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான போஸ்டர், பெனர் மற்றும் துண்டுப் பிரசுரங்களை மாவட்ட அலுவலகங்கள் மூலமாக தயாரித்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளும் ஈடேற்றப்பட்டதோடு கம்பஹா, அநுராதபுரம், தம்புத்தேகம, கண்டி, களுத்துறை, குருநாகல், கொழும்பு, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்ட அலுவலகங்களிலிருந்து கிடைத்த கோரிக்கைகளுக்கு அமைவாக ஏற்புடைய அவசியப்பாடுகள் நெறிப்படுத்தல் பிரிவினால் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- மூன்றாந்தரப்பு காப்புறுதி சம்பந்தமான விசேட சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் சந்தைப்படுத்தல் பிரிவின் இடையீட்டுடனும் மாவட்ட அலுவலகங்களின் நெறிப்படுத்தலின் கீழும் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டன.

# காப்புறுதிப் பிரிவு

## கமத்தொழில் காப்புறுதித் திட்டமும்

## கால்நடைக் காப்புறுதித் திட்டமும்

# காப்புறுதிப் பிரிவு - 2019

காப்புறுதித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் காப்புறுதித் திட்டங்களின்கீழ்கிடைக்கின்ற பொறுப்புகளுக்காக இழப்பீடுகளை விடுவித்தலுடன் தொடர்புடைய கடமைகளை புரிதல் காப்புறுதிப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். குறிப்பாக பயிர்க்காப்புறுதி, கால்நடைக்காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதிப் பணிகள் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

**2018 சிறு போகம்**

2018சிறுபோகத்திற்காக தேசிய காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையானதாக அமைச்சினால் பயிர்க் காப்புறுதி திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதால் பயிர்க் காப்புறுதி இழப்பீடு செலுத்துகின்ற முறையியலை இற்றைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க 6 வகைகளைச் சேர்ந்த பயிர்களுக்காக இழப்பீடு செலுத்துவதற்கான பின்னணி தயாரிக்கப்பட்டது. 2018 சிறுபோகத்திற்காக பயிர்க்காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தொகைகளை விடுவிக்கும் பொருட்டு பல நடமாடும் நிகழ்ச்சிகள் அமுலாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2018 சிறு போகத்தில் பரியளவில் பயிர்ச்சேதம் ஏற்பட்ட நுவரெலியா, கண்டி, கம்பஹா போன்ற மாவட்டங்களுக்காக குழுக்களை ஈடுபடுத்தி அதன் மூலமாக பயிர்ச் சேதங்கள் தொடர்பான எழுமாறான அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. நடமாடும் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படாத மாவட்டங்களில் 2018 சிறுபோகத்திற்கான இழப்பீடு கணித்தல் மாவட்ட மட்டத்தில் மாவட்ட அலுவலர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு 2019.06.20 ஆந் திகதியளவில் சிறுபோகத்தின் பயிர்ச் சேதத்திற்காக இழப்பீடு கணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

2018 சிறு போகத்திற்காக 2019 ஆம் ஆண்டில் இழப்பீட்டுத் தொகை செலுத்துதல் பற்றிய பொழிப்பு பின்வருமாறு அமையும்.

**2018 சிறுபோக இழப்பீடு செலுத்துதல் பொழிப்பு அறிக்கை**

| இலக்கம் | மாவட்ட அலுவலகம் | கமக்காரர் எண்ணிக்கை | ஏக்கர் அளவு | இழப்பீட்டுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | கம்பஹா | 1,571 | 1,829.79 | 23,236,958.00 |
| 2 | புத்தளம் | 1,282 | 2,153.74 | 43,694,540.00 |
| 3 | கேகாலை | 206 | 116.60 | 1,787,515.00 |
| 4 | மன்னம்பிட்டி | 994 | 1,141.50 | 35,721,200.00 |
| 5 | குருநாகல் | 5,036 | 4,067.49 | 101,763,986.00 |
| 6 | மாகோ | 1,623 | 1,490.22 | 39,200,308.00 |
| 7 | மொணறாகல | 713 | 997.55 | 25,908,050.00 |
| 8 | இரத்தினபுரி | 82 | 46.25 | 685,950.00 |
| 9 | வவுனியா | 5 | 25.00 | 500,000.00 |
| 10 | பொலநறுவை | 2,165 | 4,407.50 | 111,896,650.00 |
| 11 | பதுளை | 570 | 689.70 | 17,676,024.25 |
| 12 | தெஹிஅத்தகண்டிய | 152 | 193.19 | 3,591,050.00 |
| 13 | அம்பாந்தோட்டை | 600 | 709.76 | 17,920,207.00 |
| 14 | அம்பாறை | 372 | 726.81 | 16,418,172.00 |
| 15 | அநுராதபுரம் | 1,839 | 2,335.38 | 54,716,450.00 |
| 16 | களுத்துறை | 349 | 321.92 | 3,835,141.00 |
| 17 | கண்டி | 64 | 37.95 | 868,870.00 |
| 18 | மாத்தளை | 1,091 | 1,052.36 | 27,345,485.00 |
| 19 | மாத்தறை | 398 | 362.95 | 7,578,570.00 |
| 20 | தம்புத்தேகம | 969 | 870.58 | 21,026,984.00 |
| 21 | நுவரெலியா | 334 | 153.58 | 3,376,896.00 |
| 22 | காலி | 57 | 54.50 | 1,114,450.00 |
| 23 | திருகோணமலை | 175 | 313.50 | 7,579,600.00 |
| 24 | முல்லைத்தீவு | 8 | 20.00 | 364,000.00 |
|  | கூட்டுத்தொகை | 20,655 | 24,117.82 | 567,807,056.25 |

### 2018/19 பெரும் போகம்

2018/19 பெரும் போகத்துடன் தொடர்புடைய பயிர்ச்சேதம் 2018.12.07 ஆந் திகதியளவில் கணிசமான அளவில் பதிவாகியது. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே சேதமுற்ற நிலங்களை பரிசீலனை செய்வதற்காக உத்தியோகத்தர்களை இணைக்கவும் இழப்பீடு கணிக்கும் பணிக்காகவும் பல நடமாடும் நிகழ்ச்சிகளை நடாத்தவேண்டி ஏற்பட்டது. அத்துடன் இவ்வாண்டில் 2018 திசெம்பர் மாதத்தில் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக ஏற்பட்ட சேதத்திற்காக இழப்பீட்டுத் தொகையை விடுவிக்க

அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் வடக்கு மாகாணத்தின் கடமைக்காக ஈடுபடுத்தப்பட்டனர்.

2018/19 பெரும்போகத்தில் வெள்ளப்பெருக்கினால் சேதமுற்ற பயிர்ச் சேதத்திற்காக இழப்பீட்டுத் தொகைகளை விடுவிப்பதற்காக பல நடமாடும் நிகழ்ச்சிகள் 2019 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டன. அதற்கிணங்க கீழ்க்காணும் குறிப்பின் பிரகாரம் இழப்பீட்டுத் தொகைளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**2018-19 பெரும்போக இழப்பீடு செலுத்துதல் பொழிப்பு அறிக்கை**

| இலக்கம் | மாவட்ட அலுவலகம் | கமக்காரர் எண்ணிக்கை | ஏக்கர் அளவு | இழப்பீட்டுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 5,183 | 8,648.24 | 163,311,988.00 |
| 2 | அநுராதபுரம் | 3,078 | 5,442.39 | 111,408,850.00 |
| 3 | பதுளை | 684 | 874.63 | 18,766,294.00 |
| 4 | மொனறாகல | 1,720 | 1,748.89 | 39,493,800.00 |
| 5 | மட்டக்களப்பு | 1,087 | 3,439.98 | 43,996,602.00 |
| 6 | கம்பஹா | 479 | 473.78 | 6,343,760.00 |
| 7 | அம்பாந்தோட்டை | 380 | 348.39 | 8,707,967.00 |
| 8 | நுவரெலியா | 52 | 25.17 | 458,700.00 |
| 9 | தம்புத்தேகம | 478 | 406.44 | 11,337,640.00 |
| 10 | திருகோணமலை | 1,959 | 3,235.04 | 69,861,739.00 |
| 11 | யாழ்ப்பாணம் | 1,039 | 939.84 | 15,565,813.00 |
| 12 | கிளிநொச்சி | 3,605 | 8,904.00 | 187,381,060.00 |
| 13 | பொலநறுவை | 960 | 2,039.30 | 37,228,000.00 |
| 14 | மன்னம்பிட்டி | 640 | 625.40 | 16,303,150.00 |
| 15 | மாத்தறை | 609 | 517.06 | 14,168,923.00 |
| 16 | மாத்தளை | 451 | 483.03 | 9,918,961.00 |
| 17 | நுவரெலியா | 193 | 135.82 | 2,540,815.00 |
| 18 | மாகோ | 500 | 438.02 | 9,676,725.00 |
| 19 | கேகாலை | 158 | 76.62 | 1,437,581.00 |
| 20 | இரத்தினபுரி | 47 | 29.38 | 443,700.00 |
| 21 | மன்னார் | 833 | 1,740.50 | 21,610,200.00 |
| 22 | வவுனியா | 88 | 144.75 | 2,515,910.00 |
| 23 | காலி | 122 | 140.68 | 3,413,924.00 |
| 24 | குருநாகல் | 278 | 182.63 | 4,299,608.00 |
| 25 | புத்தளம் | 518 | 1,076.45 | 15,103,910.00 |
| 26 | தெஹிஅத்தகண்டிய | 439 | 358.13 | 7,249,950.00 |
| 27 | முல்லைத்தீவு | 3,747 | 7,790.35 | 124,301,750.00 |
| | **கூட்டுத்தொகை** | **29,327** | **50,264.91** | **946,847,320.00** |

**சோளச் செய்கையில் ஏற்பட்ட படைப்புழுச் சேதம்**

அத்துடன் 2018/19 பெரும் போகத்துடன் தொடர்புடையதாக சோளச் செய்கையில் ஏற்பட்ட படைப்புழு சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கவும் இவ்வாண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதற்கான நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்து முழுமையாக சேதமேற்பட்ட செய்கைகளுக்கு இழப்பீட்டுத் தொகைகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கீழே Aகுறிப்பில் இழப்பிட்டுத் தொகைகளைவிடுவித்தலுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடங்குகின்றன. அத்துடன் B குறிப்பில் பகுதியவிலான மற்றும் சிறிய அளவிலான சேதங்களின் கீழ் மொத்த பொறுப்புகள் காட்டப்பட்டுள்ளன.

**2018/19 படைப்புழு சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகை**

**A. பூரணமான சேதத்திற்காக இழப்பீடு செலுத்துதல்**

| **இலக்கம்** | **மாவட்டம்** | **கமக்காரர் எண்ணிக்கை** | **ஏக்கர் அளவு** | **இழப்பீட்டுத் தொகை (ரூ.)** | |
|---|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 302 | 409.19 | 16,367,400.00 | அமைச்சரலவை அங்கீகாரம் மூலமாக முழுமையான இழப்பீடு செலுத்தப்பட்டுள் ளது. நிருப இலக்கம் 19/0166/118/010 |
| 2 | அநுராதபுரம் | 56 | 55 | 2,200,000.00 | |
| 3 | தம்புத்தேகம | 87 | 86.38 | 3,455,000.00 | |
| 4 | மொணறாகல | 3101 | 5879.92 | 127,952,200.00 | |
| 5 | மட்டக்களப்பு | 613 | 477.25 | 19,090,000.00 | |
| 6 | அம்பாந்தோட்டை | 79 | 52.18 | 2,087,200.00 | |
| 7 | இரத்தினபுரி | 51 | 32.83 | 1,313,107.00 | |
| 8 | பதுளை | 388 | 529.13 | 21,165,000.00 | |
| 9 | மாகோ | 97 | 92.12 | 3,684,800.00 | |
| 10 | குருநாகல் | 6 | 4.5 | 180,000.00 | |
| 11 | பொலநறுவை | 94 | 68.25 | 2,730,000.00 | |
| 12 | மன்னம்பிட்டி | 95 | 69.25 | 2,770,000.00 | |
| 13 | திருகோணமலை | 325 | 258 | 10,320,000.00 | |
| 14 | கம்பஹா | 7 | 3.6 | 147,200.00 | |
| 15 | கண்டி | 62 | 33.17 | 1,326,000.00 | |
| 16 | மன்னார் | 10 | 13 | 520,000.00 | |
| 17 | முல்லைத்தீவு | 24 | 27.75 | 1,090,000.00 | |
| 18 | வவுனியா | 22 | 21.5 | 860,000.00 | |
| 19 | கிளிநொச்சி | 3 | 4 | 40,800.00 | |
| 20 | யாழ்ப்பாணம் | 3 | 0.79 | 31,600.00 | |
| 21 | புத்தளம் | 32 | 28.25 | 1,090,000.00 | |
| 22 | நுவரெலியா | 4 | 1 | 40,000.00 | |
| | **கூட்டுத்தொகை** | **5,461** | **8,147** | **218,460,307.00** | |

**B. பகுதியளவிலான மற்றும் சிறிய அளவிலான சேதத்திற்காக கணிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை**

| இலக்கம் | மாவட்டம் | கமக்காரர் எண்ணிக் கை | ஏக்கர் அளவு | இழப்பீட்டுத் தொகை (ரூ.) | |
|---|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 14,677 | 19,600.00 | 226,886,846.00 | அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கவில்லை. நிருப இலக்கம் 19/2633/118/010-II |
| 2 | மொணறாகல | 11,068 | 21,766.57 | 180,407,646.00 | |
| 3 | மட்டக்களப்பு | 2,690 | 1,770.90 | 19,232,126.00 | |
| 4 | அம்பாந்தோட்டை | 30 | 20.64 | 178,092.00 | |
| 5 | இரத்தினபுரி | 68 | 11.77 | 437,978.00 | |
| 6 | பதுளை | 7,568 | 14,166.39 | 105,663,733.90 | |
| 7 | மாகோ | 789 | 878.34 | 5,965,459.00 | |
| 8 | குருநாகல் | 34 | 4.81 | 68,086.43 | |
| 9 | பொலநறுவை | 80 | 76.75 | 915,705.00 | |
| 10 | மன்னம்பிட்டி | 883 | 1,641.60 | 25,218,480.00 | |
| 11 | திருகோணமலை | 814 | 938.28 | 8,104,436.78 | |
| 12 | கண்டி | 57 | 16.87 | 126,547.58 | |
| 13 | கிளிநொச்சி | 1 | 2.50 | 15,300.00 | |
| 14 | புத்தளம் | 96 | 99.95 | 1,234,225.50 | |
| 15 | யாழ்ப்பாணம் | 4 | 1.19 | 47,500.00 | |
| | **கூட்டுத்தொகை** | **38,859** | **60,996.56** | **574,502,162.19** | |

அதற்கிணங்க 2019 இறுதியளவில் 2018/19பெரும்போகத்தின் அனைத்துவிதமான சேதங்களுக்காகவும் இழப்பீட்டுத்தொகை கணிப்பீடுசெய்தல் நிறைவுசெய்யப்பட்டது.

அத்துடன் பயிர்க் காப்புறுதிக்கு மேலதிகமாக ஏனைய காப்புறுதிகளின்கீழ் முன்வைக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளுக்காக வழமைபோல் இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க நடடிக்கைகள் எடுக்கப்பட்டன. அது பின்வருமாறு அமையும்.

**கால்நடைக் காப்புறுதி**

கால்நடைக் காப்புறுதியின்கீழ் 2019ஆம் ஆண்டில் 2800விலங்குகள் காப்புறுதி செய்யப்பட்டதோடு அதன் மூலமாக ஈட்டப்பட்டுள்ள மேலதிக தவணைப்பண வருமானம் 7.7 மில்லியன் ரூபாவாகும். கீழே குறிப்பிட்டவாறு காப்புறுதித் தவணை அறிவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதைப்போலவே கால்நடைக்காப்பறுதியின் கீழ் 2019 ஆம் ஆண்டில் இழப்பீடு செலுத்துதல் பற்றிய பொழிப்பு பின்வருமாறு அமைந்தது.

**2019ஆம் ஆண்டில் கால்நடைக் காப்பறுதி இழப்பீடு செலுத்துதல் (சன – திசெ)**

| மாதம் | மாடுகள் | | ஆடுகள் | | கேரளா | | கூட்டுத்தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த பணத்தொகை (ரூ.) | விலங்குகளின் எண்ணிக்கை | மொத்த பணத்தொகை (ரூ.) | விலங்குகளின் எண்ணிக்கை | மொத்த பணத்தொகை (ரூ.) | விலங்குகளின் எண்ணிக்கை | மொத்த பணத்தொகை (ரூ.) | விலங்குகளின் எண்ணிக்கை |
| சனவரி | 317,228.50 | 5 | - | | | | 317,228.50 | 5 |
| பெப்புருவரி | 502,477.50 | 6 | - | | | | 502,477.50 | 6 |
| மார்ச்சு | 187,000.00 | 4 | - | | | | 187,000.00 | 4 |
| ஏப்பிறல் | 903,694.50 | 13 | 82,125.00 | 6 | | | 985,819.50 | 19 |
| மே | 308,125.00 | 7 | 11,745.00 | 1 | | | 319,870.00 | 8 |
| யூன் | 436,937.00 | 7 | - | | | | 436,937.00 | 7 |
| யூலை | 541,450.00 | 7 | 13,500.00 | 2 | | | 554,950.00 | 9 |
| ஓகத்து | 457,937.50 | 6 | 13,950.00 | 3 | | | 471,887.50 | 9 |
| செத்தெம்பர் | 301,962.50 | 5 | 12,120.00 | 1 | | | 314,082.50 | 6 |
| ஒற்றோபர் | 92,208.00 | 2 | 4,500.00 | 1 | | | 96,708.00 | 3 |
| நவெம்பர் | 376,584.00 | 7 | 72,000.00 | 4 | | | 448,584.00 | 11 |
| திசெம்பர் | 1,244,145.00 | 19 | 122,580.00 | 12 | | | 1,366,725.00 | 31 |
| **கூட்டுத்தொகை** | **5,669,749.50** | **88** | **332,520.00** | **30** | **-** | **-** | **6,002,269.50** | **118** |

**சுவசெத/திடீர் விபத்துக் காப்புறுதி**

சுவசெத காப்புறுதியின்கீழ் கணிசமான அளவிலான இழப்பீடு பதிவாகவில்லை என்பதோடு மொத்த இழப்பீடு செலுத்துதல் ஒரு இலட்சம் ரூபாவைவிடக் குறைவானதாக அமைந்தது. திடீர் விபத்துக் காப்புறுதியின்கீழ் பொறுப்புகள் தோன்றவில்லை.

**காப்புறுதி நடவடிக்கைகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக எதிர்பார்த்த நடுத்தரகால நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமுலாக்கப்பட்டன.**

2019 ஆம் ஆண்டில் 2019 சிறுபோகத்தின் பயிர்ச்சேதங்களுக்காக இழப்பீடு கணிப்பதற்காகவும் பல நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டதோடு 2019.12.31 ஆந் திகதியளவில் 2019 சிறுபோகத்துடன் தொடர்புடைய பயிர்ச்சேதங்களுக்கான இழப்பீடு கணித்தல்களின் 90% அதாவது உயர் தோற்றுவாய்கொண்ட அனைத்து மாவட்டங்களிலும் வலயங்களிலும் பயிர்ச்சேத இழப்பீட்டுக் கணிப்பீடுகள் திசெம்பர் மாதமளவில் நிறைவு செய்யப்பட்டன. அதற்கிணங்க மேலே குறிப்பிட்டவாறு 2019 ஆம் ஆண்டில் 03 போகங்கள் அதாவது 2018 சிறுபோகம், 2018/19 பெரும்போகம் மற்றும் 2019 சிறுபோகம் என்பவை தொடர்பாக பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடுகள் கணிக்கப்பட்டதோடு பணத்தை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**மறுகாப்புறுதி நடவடிக்கைகள்**

2018மே மாதமளவில் 2019 சிறு போகத்திற்கு அவசியமான மறுகாப்புறுதி நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அது பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| நெல் உள்ளிட்ட ஏனைய ஆறு வகையான பயிர்கள் ( நெல், சோளம், உருளைக்கிழங்க,பெரிய வெங்காயம், மிளகாய், சோயா) பயிர்செய்துள்ள விஸ்தீரணம் மில். ஏக்கர்) | 450,000 |
| வெளிப்படுத்தப்பட்ட காப்புறுதிசெய்த முழுப் பணத்தொகை (ரூ.) | 1,232,876,701.00 |
| மறுகாப்புறுதிசெய்த தொகை (Excess of loss sum Insured) (ரூ.) | 873,796,276.00 |
| காப்புறுதியாளரின் மொத்த தடுத்துவைத்தல் (Total Retention) (ரூ.) | 359,080,425.00 |
| செலுத்தவேண்டிய தவணை (MDP 80%) (ரூ.) | 148,380,848.00 |
| காப்பீடு செய்யப்படுகின்ற அபாயநேர்வு | வெள்ளப்பெருக்கு, வறட்சி, காட்டு யானை, பிற இயற்கை அனர்த்தங்கள் |

அதற்கிணங்க 2019 சிறு போகத்திற்காக தேசிய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்குகின்ற அனைத்துச் செய்கைகளுக்காகவும் மறுகாப்புறுதி வசதிகளும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பெறப்பட்டு காப்புறுதிக் காப்பீடு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அமுலாக்கப்பட்ட எதிர்கால காப்பறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சபை உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வளப்பங்களிப்பினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிர்ச்சேதத்துடன் தொடர்புடைய கடமைகளுக்கு மேலதிகமாக திருத்தப்பட்ட சுற்றிக்கைகளுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அத்துடன் கட்டாய பயிர்க் காப்புறுதியின்கீழ் இழப்பீடு பெறுனர்கள் உள்ளடங்கத்தக்கவகையில் திடீர் விபத்துக் காப்புறுதிப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டது. மேற்படி காப்புறுதிப் பத்திரம் 2019/20 பெரும்போகத்தில் இருந்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் கரும்புச் செய்கையைக் காப்புறுதி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட சுற்று நிருபத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு அந்த செயற்றிட்டமும் 2020 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் 2019/20 மற்றும் 2020 சிறு போகத்திற்காக காப்புறுதி செய்யப்படுகின்ற செய்கைகளுடன் சம்பந்தப்பட்டதாக மறுகாப்புறுதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக அவசியமான அனைத்து அறிக்கைகளையும் தயாரித்து தொழில்நுட்பக் குழுவின் விதப்புரை அமைச்சின் பெறுகைக் குழுவிடம் அனுப்பி வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.
அத்துடன் சபையின் ஒட்டுமொத்த பணியாட்டொகுதிக்காகவும் வழங்கப்படவுள்ள ஊக்குவிப்புப் படி முறையியலை இற்றைப்படுத்துவதற்காக அவசியமான வளப் பங்களிப்பினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# ஓய்வூதியப் பிரிவு

## கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

## மற்றும்

## கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

# கமக்காரர் ஓய்வூதியப் பிரிவு - 2019

## கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் 2019 ஆம் ஆண்டளவில் பங்களிப்புச் செய்துள்ள மொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை 959,254 ஆகும். 2019 ஆம் ஆண்டளவில் இந்த திட்டத்தில் இருந்து நன்மை பெறுகின்ற கமக்காரர்களின் எண்ணிக்கை 159,425ஆக அமைந்ததோடு அதற்கான ஓய்வூதியமாக 3,164,343,659மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.

கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மூலமாக அதிக வயதுடைய தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 60 வயதினை நிறைவுசெய்த பின்னர் கிடைக்கவேண்டிய ஓய்வூதியம் ரூ. 200 ஆக அமைந்தபோதிலும் அது சம்பந்தமாக 02 சந்தர்ப்பங்களில் எடுத்த அமைச்சரவை தீர்மானத்தின்படி கிடைக்கவேண்டிய ஓய்வூதியத்தை ரூ. 1000 வரை அதிகரித்தமை, ஓய்வூதியம் பெறுனர் இறந்த தினத்தில் இருந்து ஓய்வூதியம்பெறுனர் உயிருடன் இருந்திருப்பின் அவரது வயது 80 வரை வாழ்க்கைத்துணைக்கு ஒய்வூதியம் செலுத்துதல், வயது 45 தொடக்கம் 59 வயது வரையான வயதுத் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த ஒய்வூதியத் திட்டத்தில் பங்களிப்புச் செய்வதற்காக சட்டத்தினால் அளிக்கப்பட்டிருந்த 02 வருட காலப்பகுதியை 2007 ஆண்டுவரை நீடித்தல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் இந்த செயற்றிட்டத்தின் நிதியம் 2010 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் பூச்சியநிலையை அடைந்தது. இந்த காரணத்தின் பேரில் 2011 திசெம்பர் மாதம் வரை பொதுதிறைசேரி ஏற்பாடுகள் மற்றும் சபையினால் பேணிவரப்பட்ட வேறு நிதியங்களை ஈடுபடுத்தி 2011 திசெம்பர் வரை ஓய்வூதியம் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் நிதியங்கள் கிடைக்காமையால் 2012 ஆம் ஆண்டின் சனவரி மாத்தில் இருந்து 2013 திசெம்பர் வரை ஓய்வூதியம்செலுத்துதல் செயலற்றுப் போயிற்று. எனினும் இறப்பு மற்றும் ஏலாமை கொடுப்பனவு பெறுனர்களுக்கு மேற்படி கொடுப்பனவு இடையறாமல் செலுத்தப்பட்டது.

இந்த செயற்றிட்டத்தில் தோன்றியிருந்த நிதிசார் நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வினை வழங்கி திட்டத்தை இடையறாமல் அமுலாக்குவதற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தலைமையில் இந்த திட்டத்தில் மறுசீரமைப்பு அமுலாக்கப்பட்டதோடு, அதன் விளைவாக 2014 வரவுசெவு முன்மொழிவுகளுக்கிணங்க அதிக நன்மைகளைக்கொண்டதாக இந்த செயற்றிட்டத்தை புதிய செயற்றிட்டமென்றவகையில் சட்டமாக்கவும் 2014 ஆம் ஆண்டில் இருந்து புதிய செயற்றிட்டத்திற்கு நேரொத்ததாக அமையத்தக்கவகையில் அதிக நன்மைகளைக் கொண்டதாக ஓய்வூதியம் செலுத்துலை மீண்டும் அமுலாக்கவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2019ஆம் ஆண்டின் இறுதியளவில் கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் நடப்புப் பொறுப்பு 70.2 பில்லியன் ரூபாவாகும். இந்த பொறுப்பினை ஈடேற்றுவதற்காக கமக்காரர் ஒய்வூதிய

நிதியத்தை கட்டியெழுப்ப திறைசேரி பிணைமுறிகளை வழங்குவதற்காக மேற்கொண்ட தீர்மானத்திற்கிணங்க 2015 வரவுசெலவு மூலமாக 5 பில்லியன் ரூபா நிதியத்தை வழங்க முன்மொழியப்பட்டபோதிலும்மேற்படி பணம் சபைக்கு கிடைக்கவில்லை. ஒவ்வோராண்டிலும் ஓய்வூதியம் செலுத்துவதற்காக அவசியமான நிதியேற்பாடுகள் அரச வரவுசெலவுத் திட்டம் மூலமாக ஒதுக்கப்படுகின்றது.

## கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல்- 2019

| தொடரிலக்கம் | மாவட்ட அலுவலகம் | ஓய்வூதியம் பெறுகின்ற உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை | செலுத்திய பணத்தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | அம்பாறை | 4,063 | 77,681,691 |
| 2 | அநுராதபுரம் | 7,778 | 142,708,996 |
| 3 | பதுளை | 6,678 | 131,643,006 |
| 4 | மட்டக்களப்பு | 1,160 | 21,945,811 |
| 5 | கொழும்பு | 5,311 | 111,843,923 |
| 6 | காலி | 14,237 | 309,690,031 |
| 7 | கம்பறா | 11,244 | 228,113,535 |
| 8 | அம்பாந்தோட்டை | 8,946 | 168,183,184 |
| 9 | யாழ்ப்பாணம் | 2,554 | 51,472,113 |
| 10 | களுத்துறை | 8,712 | 183,688,458 |
| 11 | கண்டி | 16,098 | 327,165,961 |
| 12 | கேகாலை | 9,947 | 191,983,422 |
| 13 | குருநாகல் | 19,345 | 366,150,541 |
| 14 | மன்னார் | 95 | 1,493,470 |
| 15 | மாத்தளை | 4,874 | 91,720,094 |
| 16 | மாத்தறை | 10,055 | 207,387,964 |
| 17 | மொனறாகல | 5,404 | 103,288,047 |
| 18 | முல்லைத்தீவு | 137 | 2,900,208 |
| 19 | நுவரெலியா | 3,103 | 61,540,228 |
| 20 | பொலநறுவை | 5,140 | 101,915,142 |
| 21 | புத்தளம் | 5,557 | 107,065,687 |
| 22 | இரத்தினபுரி | 7,496 | 146,562,300 |
| 23 | திருகோணமலை | 914 | 17,867,073 |
| 24 | வவுனியா | 577 | 10,332,774 |
| | **கூட்டுத்தொகை** | **159,425** | **3,164,343,659** |

- கிளிநொச்சி மாவட்டத்துடன் தொடர்புடைய ஓய்வூதியம் செலுத்துதல் வவுனியா மாவட்டத்தின் ஊடாக செலுத்தப்படுகின்றது.

இறப்புப் பணிக்கொடை மற்றும் ஏலாமை நலன் செலுத்துதல்

2019 சனவரி – திசெம்பர்

| தொடரிலக்கம் | மாவட்ட அலுவலகம் | இறப்புக்களின் எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூ.) | ஏலாமை எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூ,) | இறப்பு /ஏலாமை மொத்த எண்ணிக்க | பணத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காலி | 22 | 393,837 | 2 | 59,759 | 24 | 453,596 |
| 2 | மாத்தறை | 12 | 204,217 | 1 | 38,497 | 13 | 242,714 |
| 3 | அம்பாந்தோட்டை | 22 | 404,746 | | | 22 | 404,746 |
| 4 | மொனறாகல | 22 | 454,084 | | | 22 | 454,084 |
| 5 | கம்பஹா | 14 | 255,626 | | | 14 | 255,626 |
| 6 | பதுளை | 10 | 233,587 | | | 10 | 233,587 |
| 7 | இரத்தினபுரி | 7 | 146,887 | | | 7 | 146,887 |
| 8 | களுத்துறை | 13 | 277,524 | | | 13 | 277,524 |
| 9 | அம்பாறை | 8 | 165,149 | | | 8 | 165,149 |
| 10 | கொழும்பு | 5 | 73,686 | | | 5 | 73,686 |
| 11 | எம்பிலிபிட்டிய | 2 | 44,452 | | | 2 | 44,452 |
| 12 | மன்னம்பிட்டி | 2 | 44,233 | | | 2 | 44,233 |
| 13 | கேகாலை | 22 | 396,756 | 1 | 28,400 | 23 | 425,156 |
| 14 | கண்டி | 17 | 390,740 | | | 17 | 390,740 |
| 15 | குருநாகல் | 27 | 531,751 | | | 27 | 531,751 |
| 16 | மாகோ | 22 | 451,596 | | | 22 | 451,596 |
| 17 | அநுராதபுரம் | 21 | 475,061 | | | 21 | 475,061 |
| 18 | பொலநறுவை | 16 | 356,668 | | | 16 | 356,668 |
| 19 | புத்தளம் | 7 | 139,772 | | | 7 | 139,772 |
| 20 | தம்புத்தேகம | 6 | 115,656 | | | 6 | 115,656 |
| 21 | நுவரெலியா | 21 | 393,756 | | | 21 | 393,756 |
| 22 | யாழ்ப்பாணம் | 10 | 193,581 | | | 10 | 193,581 |
| 23 | திருகோணமலை | 1 | 24,020 | 1 | 26,782 | 2 | 50,802 |
| 24 | மாத்தளை | 27 | 557,133 | | | 27 | 557,133 |
| 25 | வவுனியா | 2 | 29,155 | | | 2 | 29,155 |
| | **கூட்டுத்தொகை** | **338** | **6,753,673** | **5** | **153,438** | **343** | **6,907,111** |

## கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு 1996 செத்தெம்பர் 09 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரமாணங்களுக்கிணங்க அமுலாக்கப்பட்டு வருகின்றது. கடலில் அல்லது கடனீரேரியில்அல்லது உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடித்தல் அல்லது மீன்களை பரவச்செய்தல் மூலமாக தமது வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொள்கின்ற மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அமுலாக்கப்பட்டு வருகின்ற சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டமாகும்.

திட்டத்தின் குறிக்கோள்கள்

- தனது வயோதிப் பருவத்தில் அல்லது உடலியலாமையின்போது மீனவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.
- கடற்றொழிலாளரொருவர் இறக்குமிடத்து அந்த மீனவரில் தங்கிவாழ்பவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
- தனது வாழ்வாதாரத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்காக மீனவர்களை ஊக்குவித்தல்.
- இளைஞர்களை மீன்பிடித் தொழிலின்பால் ஆற்றுப்படுத்துதல்மற்றும்
- மீனவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதலும் சிக்கனப் பழக்கத்தை முன்னேற்றுதல் என்பனவாகும்.

2019ஆம் ஆண்டளவில் உறுப்பாண்மை பெற்றுள்ள மொத்த கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 69,049 பேர் ஆகும். 4,755 ஓய்வூதியம் பெறுனர்களுக்காக ரூ. 66,976,774ஓய்வூதியமாகசெலுத்தப்பட்டது. 390 தபால் நிலையங்கள் ஊடாக ஓய்வூதியம் செலுத்தப்பட்டது.

## கடற்றொழிலாளர் ஒய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

## கடற்றொழிலாளர் ஒய்வூதியம் செலுத்துதல் பற்றிய அறிக்கை - 2019

| தொடரிலக்கம் | மாவட்டக் கடற்றொழில் விரிவாக்கப் பிரிவு | ஒய்வூதியம் செலுத்துதல் | |
|---|---|---|---|
| | | உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை | பணத் தொகை ரூ. |
| 1 | களுத்துறை | 113 | 1,577,212.00 |
நிதிக்கூற்றுகளில் வகையினங்களை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும் பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பண அளவுகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(ஈ) நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பிக்கப்படுகின்ற புழக்கத்திலுள்ள பண அலகு**

இந்த நிதிக்கூற்றுகள் சபையின் நடைமுறைசார்ந்ததும் புழக்கத்தில் உள்ளதுமான பண அலகான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(உ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பாவனை**

இ.நி.அ.நி./இ.க.நி. க்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கை செய்யப்பட்ட சொத்துக்கள்,பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவுகளின் பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தை பணிக்கின்றன. ஈடுபடுத்தப்பட்ட இந்த மதிப்பீடுகளும் தீர்மானங்களும் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட எடுகோள்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளை திருத்தியமைத்தல் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் மாத்திரம் தாக்கமேற்படுத்துமாயின் அந்த மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் ஏற்பிசைவுசெய்யப்படுவதோடு நடப்பு மற்றும் ஏதேனும் எதிர்கால காலவரையறைகளுக்கு அத்தகைய திருத்தியமைத்தல் தாக்கமேற்படுத்துமாயின் திருத்தியமைத்த காலவரையறைக்கும் எதிர்கால காலவரையறைகளுக்கும் ஏற்பிசைவுசெய்யப்படும்.

நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகள்மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றி கணிசமானதுறைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஊ) **நடப்புத் தொழில்முயற்சி (இடையறா வழியுரிமை)**

நடப்புத் தொழில்முயற்சி என்ற வகையில் இடையறா வழியுரிமை கொண்டதாக இயங்க சபைக்குள்ள ஆற்றல் பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றைச் செய்துள்ளது. எனவே நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்படுகின்றன.

## 2. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

### 2.1ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

### (அ) ஏற்பிசைவு செய்தலும் கணிப்பீடுசெய்தலும்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினங்கள் சேர்க்கப்பட்ட தேய்மானம் மற்றும் சேதங்களும் நட்டங்களும் கழிக்கப்பட்டு கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுக்கிணங்கவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயமானது திரண்ட தேய்மானம் அல்லது பெறுமதியின் திரண்ட சேதமடைதல் கழிக்கப்பட்டு கிரயத்திலேயே முதலில் அறிவிக்கப்பட்டுள்ளது. சொத்தொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் கழிக்கப்படும். ஆதனமொன்றின் சாதனமொன்றின் அல்லது பொறித்தொகுதியொன்றின் கணிசமான பகுதிகள் ஏதேனும் கால இடைவெளியில் மீள்நிறுவப்படவேண்டிய அவசியமேற்பட்டால் மீள்நிறுவப்பட்ட பகுதிகள் ஏற்பிசைவு செய்தலிலிருந்து நீக்கப்பட்டு புதிய பகுதியை அதனைச்சார்ந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் சகிதம் நிறுவனத்தினால் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்துவிதமான

பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புகள் கிரயம் உறப்பட்ட செலவினமாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ரூ. 26,313,350.60 மொத்த வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி என்பதன்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**(ஆ) கிரயம்**

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியின் கிரயமானது அவற்றின் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட ஆதனத்தை அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்கான ஏதேனும் நேரடியாக உறப்பட்ட கிரயத்தையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிரந்தரமான தன்மையுடைத்தான சொத்துக்களைக் கொள்ளல், விரிவாக்கல் மற்றும் முன்னேற்றகரமாக்குவதற்காக உறப்பட்ட அடுத்தடுத்து வருகின்ற செலவுகள் மூலதன செலவுகளாக கருதப்படுகின்றன.

பிரதான பரிசோதித்தல்களையும் உள்ளிட்டதாக தனிவேறான கணக்குகள் பதியப்பட்டடுள்ள ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் வகையினமொன்றை மீள்நிறுவுவதற்காக உறப்பட்ட செலவினம் மூலதனமயமாக்கப்படும். ஏனைய அடுத்தடுத்து வருகின்ற கிரயங்கள் அப்பகுதிக்குள் உள்ளடங்கிய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவருவதற்கான ஆற்றல் இருப்பினும் வகையினத்தின் கிரயத்தை நம்பத்தகுந்தவகையில் அளவிட இயலுமாயினும் மாத்திரமே மூலதனமயமாக்கப்படும்.

**(இ)மீள்கணிப்பீடு**

ஒரு சொத்தாக எற்பிசைவு செய்தபின்னர், நியாயமான பெறுமதியை நம்பகத்தன்மையுடள் அளவிடக்கூடிய காணி மற்றும் கட்டிடங்கள் ஏதேனும் அடுத்தடுத்து வருகின்றதிரண்ட தேய்மானம் மற்றும் அடுத்துடுத்து வருகின்ற திரண்ட சேத நட்டம் கழிக்கப்பட்டு மீள்கணிப்பீடு செய்யப்பட்ட தினத்தில் மீள்கணிப்பீட்டுப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது. மீள்கணிப்பீடு செய்யப்பட்ட ஒரு சொத்தின் நியாயமான பெறுமதி அறிக்கையிடல் திகதியன்று அதன் கொண்டுசெல்லல் பெறுமதியில் கணியரீதியாக மாற்றமடைவதில்லை என்பதை உறுதிசெய்யும்பொருட்டு மதிப்பீடுசெய்தல்மேற்கொள்ளப்படுகின்றது.

மோட்டார் வாகனங்களை மீள்கணிப்பீடு செய்கையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்பட்ட அதே சொத்தின் ஏதேனும் முற்பட்ட கழித்தல் தீர்க்கப்பட்டாலேயன்றி மீள்கணிப்பீட்டுப் பெறுமதியின் ஏதேனும் அதிகரிப்பு உரிமைப்பங்குகளின் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படும். பெறுமதியின் வீழ்ச்சியானது மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தின் முன்னர் இனங்காணப்பட்ட அதிகரிப்பினை விஞ்சி செல்கின்றவிடத்து இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படும். விற்றொழித்தலின்போது ஏதேனும் துணைநிலை மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து பிடித்துவைத்த ஈட்டல்களுக்கு மாற்றப்படுவதோடு விற்றொழித்தலின்பேரில் இலாபம் அல்லது நட்டத்தை தீர்மானிக்கையில் கணக்குகளுக்கு எடுக்கப்படமாட்டாது.

**(ஈ) தேய்மானம்**

எளிய நேர்கோட்டு அடிப்படையில் கீழே காட்டப்பட்ட வருடாந்த வீதங்களில் அச்சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் அந்த அளவிளை பதிவேடுகளிலிருந்து நீக்குவதற்காக தேய்மானம் விபரமான வருமானக் கூற்றில் செலவுச்சுமையாக காட்டப்படும்.

| | |
|---|---|
| கட்டடங்கள் | **4%** |
| மோட்டார்வாகனம் | **20%** |
| தளபாடங்களும்பொருத்திகளும் | **10%** |
| பிரச்சாரசாதனங்கள் | **10%** |
| சேதத்தடுப்புச்சாதனங்கள் | **10%** |
| அறுவடைச்சாதனங்கள் | **10%** |
| துவிச்சக்கரவண்டிகள் | **20%** |
| நிலஅளவைச்சாதனங்கள் | **10%** |
| எடைத்தராசுகள் | **10%** |
| நலன்புரிச்சாதனங்கள் | **10%** |
| தொலைபேசி | **20%** |
| கணினி | **20%** |
| மோட்டார் சைக்கிள் | **20%** |

## 2.2 அருவச் சொத்துக்கள்

சொத்துக்களுக்கு உடைமையாக்கத்தக்க எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தை நோக்கி பாய்ந்து வரக்கூடிய நிலைமைகள் இருக்குமாயின் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இ.க.நி.-38 அருவச்சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பத்தக்க வகையில் அளவிட இயலுமாயின் அருவச்சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்படும். அதற்கிணங்க இச்சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் அல்லது ஏதேனும் திரண்ட சேதங்கள் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளில் காட்டப்படுகின்றன.

கணினி மென்பொருள்கள் எளியநேர்கோட்டு அடிப்படையில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

## 2.3 சரக்குத் தொக்குகள்

சரக்குத்தொக்குகள் ஆகக்குறைந்த கிரயத்திற்கு அல்லது நிகர தேறிய பெறுமானத்திற்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமானம் என்பது பொதுவான தொழில்முயற்சி நடவடிக்கைகளின்போது மதிப்பீடு செய்யப்பட்ட முழுநிறைவு செய்தலுக்கான மற்றும் விற்பனைச் செலவுகள் குறைக்கப்பட்ட பின்னர் மதிப்பீடுசெய்த விற்பனை விலையாகும். இக்கிரயத்தில் கையிருப்பு பண்டங்களை கொள்ளல் மற்றும் அவை தற்போது உள்ள இடத்திற்கு அல்லது நிலைக்கு கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்கும்.

## 2.4 நிதிசார் சொத்துக்கள்

இ.க.நி. 39 இல் விடயப்பரப்பில் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமான வகையில் இலாபம் அல்லது நட்டம், கடனும் வருமதிகளும், முதிர்ச்சி வரை தடுத்துவைக்கப்பட்டுள்ள முதலீடுகள், விற்பனை செய்யப்படவுள்ள நிதிசார்சொத்துக்கள் அல்லது எதிர்கால இழப்புக்காப்பாக பெயரிடப்பட்ட பெறுதிக் கருவிகள் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.

தனது நிதிசார் சொத்துக்களின் அடிப்படை ஏற்றுக்கொள்ளலின்பேரில் பணிப்பாளர் சபையானது அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கின்றது.

நிதிசார் சொத்துக்கள் அனைத்தும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாக சொத்துக்கள் நியாயமான பெறுமதியாக அமையாத

சந்தர்ப்பங்களில் நேரடி உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயத்திற்கும் தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடன் மற்றும் வருமதிகளும் வைப்புக்களும் அவை தொடங்கப்பட்ட தினத்தில் ஏற்பிசைவுசெய்யப்படும். ஏனைய நிதிசார்சொத்துக்கள் அனைத்தும் (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு குறிப்பிட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளிட்டதாக) அளிப்புப் பத்திரத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கே தொடக்கத்தில் ஏற்பிசைவுசெய்யப்படும்.

ஏதேனும் சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்வுகள் மீதுள்ள உடன்படிக்கை செய்யப்பட்ட உரிமை நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமான அளவில் கையளிக்கப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின் மீது உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்குரிய உரிமையானது அது கையளிக்கப்படுகின்ற வேளையில் சபையின் நிதிசார் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுதலை நீக்கும். கையளிக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றில் சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்பிசைவுசெய்யப்படும்.

நிதிசார்சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு நிதி அளவினை எதிரீடுசெய்ய சபைக்கு சட்டமுறையான உரிமை உள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலவுஈடுசெய்ய அல்லது சொத்துக்களை தேறவைத்து பொறுப்பினை சமாந்தரமாக செலுத்தித்தீர்க்க கருதப்படின் மாத்திரம் தேறிய பணஅளவு நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு மற்றும் குறுங்கால முதலீடுகளும் வர்த்தக மற்றும் பிற வருமதிகளும் உள்ளடங்கும்.

**(அ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிசார்சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமானபெறுமதிக்கு நிதிசார்சொத்துக்களுக்கு வர்த்தகத்திற்காக தடுத்துவைக்கப்படுகின்ற நிதிசார்சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின்பேரில் பெயர் குறிக்கப்பட்ட நிதிசார் சொத்துக்களும் உள்ளடக்கப்படும். நிதிசார் சொத்துக்கள் கிட்டிய

நடப்பு விற்பனை அல்லது மீள்கொள்வனவுப் பணிக்காகக் கொள்ளப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் அல்லது நிதிசார் செலவில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயமான பெறுமதியின் மாற்றங்களைக் கொண்டதாக நியாயமான பெறுமதியில் நிதிசார் நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன.

**(ஆ) கடனும் வருமதியானவையும்**

கடனும் வருமதியானவையும்முனைப்பான சந்தையொன்றில் விலை மட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்பொறுப்புக்களாகும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் அத்தகைய நிதிசார்சொத்துக்கள் சேதம் கழிக்கப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பீடு செய்யப்படும். கொள்ளப்பட்ட வேளையில் ஏதேனும் தள்ளுபடி அல்லது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட மற்றும் பயனுறுதிமிக்க வட்டிவழிமுறையின் உள்ளடங்கிய பகுதியான கட்டணம் அல்லது கிரயத்தைக் கருத்திற்கொண்டே மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம் கணிப்பீடுசெய்யப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை விபரமான வருமானக் கூற்றின் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாக தோன்றுகின்ற நட்டங்கள் நிதிக்கிரயத்தின் விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவுசெய்யப்படும்.

வர்த்தக வருமதிகள், ஊழியர்கடன், வைப்புக்கள், முற்பணம், ஏனைய வருமதியான காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பவற்றினையே கடனும் வருமதிகளும் உள்ளடக்குகின்றது.

**(இ) பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள்**

நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களும் நிலையான முதிர்ச்சியடைதல்களும் முதிர்ச்சிடையும்வரை தடுத்துவைத்துக் கொள்வதற்கான ஆக்கமுறையான நோக்கமும் ஆற்றலும் சபைக்கு உள்ளவிடத்து அவை பருவ முதிர்வு வரை தடுத்துவைக்கப்பட்டவையாக கருதப்படும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் பருவ முதிர்வு வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள் சேதம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி வழிமுறை பயன்படுத்தப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம்செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிக்கப்படும். பயனுறுதிமிக்க

வட்டிவழிமுறை மதிப்பிறக்கம்செய்தல் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாகத் தோன்றுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

அரசாங்க பிணையங்களிலும் நிலையான வைப்புக்களிலுமான முதலீடுகள் பருவ முதிர்வு வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) **விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்**

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது விற்பனைக்காக உள்ளவையென பெயர்குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனும் நிதிசார் சொத்துக்கள் பிரிவில் வகைப்படுத்தப்பட்டிராத பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களாகும். ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேதநட்டங்கள் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படும். விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதிமிக்க வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றினை ஏற்றுக்கொள்வதை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படும்.
ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின்பேரில் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபையானது எந்தவொரு நிதிசார் சொத்தையும் சபையானது பெயர்குறிக்கவில்லை.

## 2.5 நிதிசார் சொத்துக்களின் சேதம்

ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைந்தமைக்கான பலனால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவாவென கம்பெனி மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் இடம்பெற்றிருப்பின் சொத்தின் எடுத்துச்செல்லும் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சேதத்தின் அளவு கணிப்பீடு செய்யப்படும்

## 3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

நிதி நிலைமை பற்றிய கூற்றின் பேரில் நடைமுறைப் பொறுப்புக்களென வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக அமைவது கேள்வியின் பேரில் அல்லது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்படவேண்டியதாக உள்ளவையாகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக அமைவது அறிக்கையிடல்

திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டியுள்ள மீதியாகும். இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் வெளிநோக்கி பாய்ந்துசெல்வதை தேவைப்படுத்த இடமுள்ளவிடத்தும் ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.1 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 – " இளைப்பாற்று நன்மைக் கிரயம்" மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் அமைந்தொழுகக்கூடிய வகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காக சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததில் இருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக் காலம் நிறைவடைவதிலிருந்து மாத்திரமே ஊழியருக்கான பொறுப்பு தொடங்குகின்றது. பொறுப்புக்களுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

### 3.2 மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்.

பொருளாதார நன்மைகளின் சாட்டுதல் நிகழ்வதற்கான இடமற்ற அல்லது நம்பிக்கையான வகையில் அளவிட இயலாத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத எதிர்கால நிகழ்வுகள் அல்லது நடப்புக் கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமையை உறுதிப்படுத்துகின்ற கடப்பாடுகளே எதிர்பாராத பொறுப்புகளாகும்.

சபையின் மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புகள் நிதிக் கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**உரிமைகோரல்களுக்கான ஏற்பாடுகள்**

செலுத்தப்படாத இழப்பீடுகளுக்கான ஏற்பாடுகள் பயிர்களின் அபாயநேர்வுக் காரணிகள் மற்றும் காப்புறுதி பெறுனரின் விடயத்தின் மீது தங்கி இருப்பதோடு 2019 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்ட அட்டணையில் காட்டப்பட்டுள்ளன.

| **காப்புறுதி விடயம்** | **இழப்பீடுக்கான ஏற்பாடுகள் (ரூ.)** |
|---|---|
| கொத்தட்ட அருண | 2,000,284,021.00 |
| கால்நடை | 7,000,000.00 |
| சுவசெத மற்றும் விவசாய உபகரணங்கள் | 5,000,000.00 |
| உபஉணவுப் பயிர்கள் | 2,000,000.00 |
| அசைவுள்ள ஆதனங்கள் | 23,559,605.00 |
| | **2,033,405,726.00** |

**மூன்றாந்தரப்பு காப்புறுதி இழப்பீடுகளுக்கான ஏற்பாடுகள்**

அடுத்தடுத்து வருகின்றமூன்று வருடங்களின் வருமானத்தில் 15% நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்திலேயே மூன்றாந்தரப்பு ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. அந்த 15% வீதத்தில் முறையே 7%, 5% மற்றும் 3% நடப்பு வருடத்தின் வருமானம், முந்திய வருடத்தின் வருமானம் மற்றும் முந்திய வருடத்திற்கு முந்திய வருடத்தின் வருமானத்திற்காக விகதாசார அடிப்படையில் ஒதுக்கப்படும்.

**3.2 அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடுகள்**

ஐயக்கடனுக்கான ஏற்பாடுகள் அறவிடமுடியாக் கடன்படுனர் மீதிகளின் 5 % அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

**4. விபரமான வருமானக் கூற்று**

**4.1 வருமானம்**

1.சபையின் வருமானம் காப்புறுதி தவணைப்பணம், திறைசேரி உண்டில்கள் மற்றும் ஊழியர் கடனுக்கான வட்டி வருமானம் மற்றும் பிற வருமானங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

2.அனைத்து வருமானமும் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

3. கமக்காரர்களின் சார்பிலான மானியம் என்றவகையிலேயே காப்புறுதித் தவணைகள் கிடைத்துள்ளன.

4.மூலதனச் செலவினங்களுக்காக கிடைத்த அரசாங்கக் கொடைகள் படிப்படியான அடிப்படையில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

1. காப்புறுதி தவணைப்பண வருமானம் காப்புறுதி செய்யப்பட்ட காலத்திற்காக ஏற்பிசைவு செய்யப்பபடுகின்றது.

**2.**மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையில் அமைவதோடு ஏற்புடைய செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

**3.**வட்டிவருமானம் கால அடிப்படையில் அட்டுறு நிலையடையும்.

### 4.3 அரசாங்க கொடைகளுக்கான கணக்கீடு

உறப்பட்ட செலவினங்களுக்காக சபைக்கு செலுத்தப்படுகின்ற கொடைகள் அச்செலவுகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட காலஎல்லைக்குள்ளேயே விபரமான வருமானக் கூற்றில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்கு நட்டோத்தரவாதம் அளிக்கின்ற கொடைகள் இணைந்த சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் படிப்படியான அடிப்படையின்பேரில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 4.4 செலவுகள்

உறப்பட்ட கிரயம் மற்றும் திட்டவட்டமான செலவு வகையின ஈட்டல்களுக்கிடையிலான நேரடியான தொடர்பின் அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும். சபையினைப் பேணிவருகையிலும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனுடையதாக பேணிவருகையிலும் உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் வருடத்திற்கான மிகையினை தயாரிக்கையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது

401/4 இலக்கமும்2008.10.15 ஆந் திகதியும் கொண்ட பணிப்பாளர் சபை பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவுகள் .

| **செலவினம்** | **வீதம்** |
|---|---|
| சம்பளம், ஊசேநி, ஊநநி, பணிக்கொடை | 50% |
| மருத்துவச் செலவினம் | 50% |
| மதியுரைக் கட்டணம் | 60% |
| நலனோம்பல் | 50% |
| சீருடைகள் | 50% |
| களியாட்டம் | 60% |
| அச்சிடல் | 60% |
| சட்டக் கட்டணம் | 40% |
| சபை உறுப்பினர் படிகள் | 60% |
| வாடகை | 55% |
| தொலைபேசி | 55% |
| தபால் கட்டணம் | 40% |
| மின்சாரம் | 55% |
| பிரயாணச் செலவு,மேலதிகநேரப்படி | 50% |
| நீர்க் கட்டணம் | 55% |
| நாளாந்தப் படி | 50% |
| பாதுகாப்பு | 75% |
| பிரதான அலுவலக உபகரணங்கள் | 75% |
| வாகனப் பராமரிப்பு | 57% |
| கணினிச் செலவுகள் | 75% |
| எரிபொருள் செலவுகள் | 68% |
| காகிதாதிகள் | 50% |
| கட்டடப் பராமரிப்பு | 55% |
| பிரச்சாரமும் பயிற்சியும் | 80% |

**4.5 மிகைநிலை**

அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட பின்னர் மிகைநிலை கணிப்பிடப்படும். ஆதனம், சாதனம் மற்றும் பொறித் தொகுதியில் அறிந்த எல்லா பொறுப்புக்களும் தேய்மானம் செய்யப்படும்.

**4.6 ஒதுக்க நிதியம்**

அவசரவேளை ஒதுக்க நிதியமொன்று 2002 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோடு அவ்வாண்டில் 5% தொழிற்பாட்டு மிகையினை வழங்க நேரிட்டது.

### 4.7 முற் தவணைகள்

முன்கூட்டியே கிடைத்திருப்பின் கால்நடைக் காப்புறுதிக்கான தணைப்பணமும் கெத்தட்ட அருணவும் முற்தவணைகளாக கருதப்படும்.

## 5 காசுப் பாய்வுக் கூற்று

திட்டத்தின் காசுப்பாய்வுக்கூற்றுநேரில் முறையைபயன்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளன. அது இலங்கை கணக்கீட்டுக் கொள்கை -7 “காசுப் பாய்வுக் கூற்று” இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

## 6 அறிக்கையிடல் தேதிக்குப் பின்னரான சம்பவங்கள்

அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் இடம்பெறுகின்ற சம்பவங்களின் புலனுணர்வுசார்ந்த தன்மையைக் கருத்திற் கொண்டுள்ளதோடு அவசியமான இடங்களில் கணக்குகளில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சபைக்கு திறைசேரியிடமிருந்து 600 மில்லியன் ரூபா காப்புறுதிக் தவணைப்பணமாகவும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து 646 மில்லியன் ரூபாவும் கிடைத்தது. இந்த கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பு 2.3 மற்றும் 2.3  இல் வருமதிகளில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது.

## 7. சார்ந்த தரப்பினர்களின் வெளிப்படுத்தல்

கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் மற்றும்  கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினராக கருதப்படும். இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்  நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன.  கமத்தொழில் காப்புறுதித்திட்டம்  கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்திற்கு ரூ. 295, 230, 441.79 பெறுமதியான கடன்தொகையினை வழங்கியுள்ளது.

**8. முந்திய ஆண்டுக்கான சீராக்ககங்கள்**

அறிக்கையிடும் காலப்பகுதியில் முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள் எதுவுமே கிடையாது.

**9. மறுகாப்புறுதி செலுத்துதல்கள்**

எச்லெப்கம்பெனியிடமிருந்தும்(குறிப்புப் பதியப்பட்டுள்ள தரகர் என்றவகையில்) தேசிய காப்புறுதி நிதியத்திடமிருந்தும் நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சோயா மற்றும் மிளகாய் போன்றவற்றுக்காக 2018 மார்ச்சு 31 தொடக்கம் 2019 மார்ச்சு 31 வரையான காலப்பகுதிக்காக மறுகாப்புறுதிக் காப்பீடு பெறப்பட்டுள்ளது. ரூ. 675,760,000 ஆக அமைகின்ற மறுகாப்புறுதி தவணைப்பணம் முறையே 70% மற்றும் 30% என்றவகையில் எச்லெப் கம்பெனிக்கும் தேசிய காப்புறுதி நிதியத்திற்கும் இடையில் செலுத்தப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்ட இரண்டு போகங்களும் தவிர்ந்ததாக 2019 சிறு போகத்திற்காக தேசிய காப்புறுதி நிதியத்திடமிருந்து மறுகாப்புறுதிக் காப்பீடு பெறப்பட்டுள்ளது.

**10. எதிர்பாராத சந்தர்ப்பங்கள்**

எட்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றின் நிகழ்கால நிலைமை கீழேயுள்ள அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**<u>க.க.கா.ச. வழக்கு விசாரணைகளின் நடப்பு நிலைமை</u>**

| | **நீதிமன்றம்** | **வழக்கு எண்** | **மனுதாரர் / பிரதிவாதி** | **விடயம்** | **நடப்பு நிலைமை** |
|---|---|---|---|---|---|
| **1** | கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | 21843 MR<br>21844 MR<br>21845 MR | க.க.கா.ச *எதிர்* இலங்கை வங்கி | முதலீடுகளும் முதலீட்டு வட்டியும் | மீள் புலனாய்வு செய்வதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது |
| **2** | அநுராதபுர நீதவான் நீதிமன்றம் | B/2171/2002 | பொலிஸ் *எதிர்* திரு. கே.ஏ. ஹீன்பண்டார | கமக்காரர் ஓய்வூதிய தவணைப்பண மோசடி | வழக்கு கீழ்ப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| **3** | அநுராதபுர நீதவான் நீதிமன்றம் | B/520/2013 | பொலிஸ் *எதிர்* திரு. கே.ஜீ. சுதத் பண்டார | கமக்காரர் ஓய்வூதிய தவணைப்பண மோசடி | சட்டத்துறை தலைமை அதிபதியிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது |
| **4** | அநுராதபுர நீதவான் நீதிமன்றம் | 61467 | பொலிஸ் *எதிர்* திரு. ரீ.ஏ. ரத்னசிறி மற்றும் திரு. கமல் உடுவன | சட்டவிரோத பிரமிட் திட்டங்களில் ஈடுபடுதல் | விசாரிக்கப்பட்டு வருகின்றது. 2016 சனவரி 20 ஆந் திகதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது. |
| **5** | கொழும்பு மேல் நீதிமன்றம் | 3/8/2 M. C./2006 | பொலிஸ் *எதிர்* கககாச | மாவிலாறு பயர்ச்சேத இழப்பீடு | சட்டத்துறை தலைமை அதிபதியிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது |

| | நீதிமன்றம் | வழக்கு எண் | மனுதாரர் / பிரதிவாதி | விடயம் | நடப்பு நிலைமை |
|---|---|---|---|---|---|
| **6** | எல்பிடிய நீதவான் நீதிமன்றம் | 91838 | பொலிஸ் *எதிர்* திரு. பி.எம்.டி. தம்மிக்க சந்திரநாத் | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்து | விசாரிக்கப்பட்டு வருகின்றது |
| **7** | கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் | CA(writ) 269/2019 | செலிங்கோ பிஎல்சீ *எதிர்* க.க.கா.ச. | விவசாயத் துறையல்லாத தவர்களுக்கான மூன்றாந் தரப்புக் காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பானது | விசாரிக்கப்பட்டு வருகின்றது |
| **8** | மாவனெல்ல மாவட்ட நீதிமன்றம் | 2436 | திருமதி ரீ.எம் டபிள்யு. குமுதினி *எதிர்* க.க.கா.ச. | மூன்றாந்தரப்பு காப்புறுதித் திட்டத்திற்கானஇழப்பீடு | விசாரிக்கப்பட்டு வருகின்றது |

## கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

## கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

## கணக்குகளுக்கான குறிப்புகள்

## 2019 திசெம்பர் 31 இல்

குறிப்பு 1 - நடைமுறையல்லாச் சொத்துக்கள்

ரூ.

| சொத்துக்கள் | 2018.12.31 திகதியில் கிரயம் | 2019.01.01 திகதியில் சொத்துக்கள் மீள்கணிப்பீடு | மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு கையளித்த திரண்ட சேதம் | கிரயத்திற்கு சேர்த்தவை | 2019.12.31 இல் கிரயம் | 2018.12.31 திகதியில் திரண்ட தேய்மானம் | மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு கையளித்த திரண்ட சேதம் | ஆண்டுக்கான தேய்மானம் | 2019.12.31 திகதியில் திரண்ட தேய்மானம் | 2019.12.31 திகதியில் பதிவழித்த பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தளபாடம், பொருத்திகள் | 11,335,703.80 | - | | 2,021,729.06 | 13,357,432.86 | 8,696,414.40 | - | 574,693.78 | 9,271,108.18 | 4,086,324.68 |
| அலுவலக உபகரணங்கள் | 12,334,526.38 | - | | 50,135.52 | 12,384,661.90 | 9,547,248.66 | - | 452,322.92 | 9,999,571.58 | 2,385,090.32 |
| மோட்டார் வாகனம் | 58,832,592.28 | 58,129,166.66 | (49,341,758.94) | 399,310.00 | 68,019,310.00 | 49,341,758.94 | (49,341,758.94) | 13,570,586.17 | 13,570,586.17 | 54,448,723.83 |
| நலன்புரி சாதனங்கள் | 705,981.00 | - | | 11,500.00 | 717,481.00 | 466,578.04 | - | 40,752.17 | 507,330.21 | 210,150.79 |
| கணினி உபகரணங்கள் | 16,025,614.58 | - | | 4,727,905.72 | 20,753,520.30 | 9,618,715.33 | - | 2,784,097.03 | 12,402,812.36 | 8,350,707.94 |
| தொலைபேசி | 1,510,807.50 | - | | - | 1,510,807.50 | 1,502,776.08 | - | 8,031.42 | 1,510,807.50 | - |
| மோட்டார் சைக்கிள் | 146,300.00 | - | | - | 146,300.00 | 146,300.00 | - | - | 146,300.00 | - |
| கட்டிடங்கள் | 8,079,299.28 | - | | - | 8,079,299.28 | 4,469,503.72 | - | 250,711.31 | 4,720,215.03 | 3,359,084.25 |
| பிரச்சார சாதனங்கள் | 2,012,819.29 | - | | - | 2,012,819.29 | 1,794,712.65 | - | 80,456.16 | 1,875,168.81 | 137,650.48 |
| துவிச்சக்கர வண்டிகள் | 137,839.20 | - | | 18,925.00 | 156,764.20 | 123,814.20 | - | 7,185.00 | 130,999.20 | 25,765.00 |
| அறுவடைச் சாதனங்கள் | 60,371.00 | - | | - | 60,371.00 | 60,371.00 | - | - | 60,371.00 | - |
| நட்டத் தடுப்புச் சாதனங்கள் | 41,280.00 | - | | - | 41,280.00 | 41,280.00 | - | - | 41,280.00 | - |
| நிலஅளவை உபகரணங்கள் | 4,399.00 | - | | - | 4,399.00 | 4,399.00 | - | - | 4,399.00 | - |
| எடைத் தராசுகள் | 1,036.35 | - | | - | 1,036.35 | 1,036.35 | - | - | 1,036.35 | - |
| நொராட் சாதனங்கள் | 344,423.50 | - | | - | 344,423.50 | 344,423.50 | - | - | 344,423.50 | - |
| | **111,572,993.15** | **58,129,166.66** | **(49,341,758.94)** | **7,229,505.30** | **127,589,906.18** | **86,159,331.87** | **(49,341,758.94)** | **17,768,835.96** | **54,586,408.89** | **73,003,497.29** |

குறிப்பு

ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளில் 2019 திசெம்பர் 31 திகதியில் இன்னமும் பாவனையில் உள்ள ரூ. 26,313,350.59 மொத்தப் பெறுமதி கொண்ட முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட சொத்துக்கள் அடங்குகின்றன.

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**<u>2019 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்கான குறிப்புகள்</u>**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 2 - நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| | | |
| **குறிப்பு 2.1 - கையிருப்பு** | | |
| | | |
| அச்சிடல் பொருட்கள் | 4,967,197.32 | 3,649,599.17 |
| காகிதாதிகள் | 944,441.60 | 1,447,099.27 |
| | **5,911,638.92** | **5,096,698.44** |
| **<u>குறிப்பு 2.2 - வருமதிகள்</u>** | | |
| | | |
| பணியாளர் கடனும் முற்பணமும் | 40,707,858.26 | 43,476,587.79 |
| மோட்டார் சைக்கிள் கடன் | 1,904,604.84 | 1,572,637.53 |
| வருமதியான சம்பளம் | 342,023.38 | 342,023.38 |
| பணியாளர் விசேட கடன் -2004 | 4,800.00 | 4,800.00 |
| வருமதியான ஆயுட் காப்புறுதி தவணைகள் | 229,485,744.00 | 212,449,360.00 |
| பல்லின கடன்படுனர் | 51,542.75 | 51,542.75 |
| சதொச நிறுவனத்திடமிருந்து வருமதியான பணம் | 256,520.00 | 256,520.00 |
| கமத்தொழில் அமைச்சு - விவசாயக் கட்டுப்பாட்டு நிலையம் | 1,947,160.40 | - |
| தே.கா.ந.பொ.நி. - பயிர் வரி | 793,310,000.00 | 200,000,000.00 |
| மறுகாப்புறுதி உரிமைகோரல் | 312,000,000.00 | - |
| மோட்டார் சைக்கிள் செலவுகள் ( பணியாளர் ) | 2,566.70 | 2,566.70 |
| கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் (நிருவாகம் ) | 115,174,191.83 | 116,771,772.45 |
| கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் | 40,070,084.52 | 34,353,102.71 |
| கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் (மூலதனம் ) | 1,178,329.84 | 1,191,587.68 |
| கமக்காரர் ஓய்வூதியத் திட்ட முற்பணம் | 480,304,114.75 | 442,880,695.94 |
| அறவிடமுடியாக் கடன்படுனருக்கான ஏற்பாடுகள் | (2,035,392.92) | (2,173,829.39) |
| Vehicle Sale proceeds | - | - |
| | **2,014,704,148.35** | **1,051,179,367.54** |
| **<u>குறிப்பு 2.3 - வருமதியான தவணைகள்</u>** | | |
| ஊடு பயிர்கள் | - | 529,484.39 |
| கால்நடை வளம் | 392,480.50 | 1,033,245.20 |
| சுவசெத மற்றும் தனியாள் | 91,165.00 | 60,322.50 |
| காப்புறுதி தவணை - திறைசேரி பங்களிப்பு | 2,113,619,152.00 | 1,762,120,000.00 |
| | **2,114,102,797.50** | **1,763,743,052.09** |
| | | |
| **<u>குறிப்பு 2.4 - வைப்புக்களும் முற்செலுத்துதல்களும்</u>** | | |
| | | |
| வைப்புகள் - (எரிபொருள்) | 150,000.00 | 150,000.00 |
| வைப்புகள் - (போக்குவரத்து) | 5,000.00 | 5,000.00 |
| காப்புறுதி | 688,949.63 | 50,877.56 |
| மறு காப்புறுதி | - | 427,981,000.00 |
| வாடகை | 4,755,202.57 | 4,677,922.00 |
| | **5,599,152.20** | **432,864,799.56** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்கான குறிப்புகள்**

| | | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 2.5 - முற்பணம்** | | | |
| | | | |
| பிரயாண முற்பணம் | | 8,000.00 | 12,000.00 |
| எரிபொருள் முற்பணம் | | 39,570.65 | 41,626.95 |
| சம்பள முற்பணம் | | 50,261.41 | 50,261.41 |
| நானாவித முற்பணம் | | 18,561.00 | 1,035.00 |
| மூலதன முற்பணம் | | 565,800.00 | 565,800.00 |
| மாவட்ட நிருவாகக் கணக்கு | | 205.63 | 709.13 |
| | | **682,398.69** | **671,432.49** |
| | | | |
| **குறிப்பு 2.6 பருவமுதிர்வு வரை தடுத்துவைத்த நிதிச் சாதனங்கள்** | | | |
| | | | |
| திறைசேரி உண்டியல்கள் | | 1,130,984,036.50 | 173,841,742.35 |
| நிலையான வைப்புகள் - மக்கள் வங்கி | | 167,885,723.85 | 168,080,178.10 |
| நிலையான வைப்புகள் - இலங்கை வங்கி | | 580,000,000.00 | 750,000,000.00 |
| | | **1,878,869,760.35** | **1,091,921,920.45** |
| | | | |
| **குறிப்பு 2.7 - வங்கியிலுள்ள பணம்** | | | |
| | | | |
| இலங்கை வங்கி கணக்கு - 164811 | | 487,521.99 | 1,530,799.21 |
| இலங்கை வங்கி கணக்கு - 164667 | | 1,131,573.94 | 1,422,336.06 |
| இலங்கை வங்கி கணக்கு - 164693 | | 808,618.31 | 1,013,699.89 |
| இலங்கை வங்கி கணக்கு - 1622 | | 33,390.11 | 440,465.90 |
| இலங்கை வங்கி கணக்கு - 1616 | | 370,166.52 | 92,223.06 |
| இலங்கை வங்கி கணக்கு - 8600879 | | 426,266.27 | 125,134.91 |
| இலங்கை வங்கி கணக்கு - 8600818 | | 258,814.16 | 258,814.16 |
| மக்கள் வங்கி கணக்கு - 112352 | | 313,564.91 | 247,267.80 |
| மக்கள் வங்கி கணக்கு - 112343 | | 86,166.80 | 90,119.30 |
| மக்கள் வங்கி கணக்கு - 100440112349 | | 74,505.69 | 74,505.69 |
| மக்கள் வங்கி கணக்கு - 100260112349 | | 53,040.00 | 53,040.00 |
| மக்கள் வங்கி கணக்கு - 100350112349 | | 27,871.88 | 156,799.62 |
| மக்கள் வங்கி கணக்கு - 100170112349 | | 833,594.62 | 392,948.34 |
| மக்கள் வங்கி கணக்கு - 3355100190008791 | | 760,599.03 | 381,247.40 |
| மக்கள் வங்கி கணக்கு - 3355100280008791 | | 459,062.81 | 858,021.08 |
| மக்கள் வங்கி கணக்கு - 100530112349 | | 3,702,675.67 | 1,250,865.21 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி கணக்கு - 134010103277 | | 41,623,730.72 | 30,581,801.42 |
| | | **51,451,163.43** | **38,970,089.05** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்கான குறிப்புகள்**

| | | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் |
| | | | |
| **குறிப்பு 3 - க.க.கா.ச. திரண்ட மிகைநிலை** | | | |
| | | | |
| முன்கொண்டுவந்த மீதி | | 1,288,286,716.11 | 367,207,363.28 |
| **கூட்டுக :** | | | |
| ஆண்டுக்கான மிகைநிலை (பற்றாக்குறை) | | 652,339,936.00 | 921,079,352.83 |
| | | | |
| 2019.12.31 இல் மீதி | | **1,940,626,652.11** | **1,288,286,716.11** |
| | | | |
| **குறிப்பு 4 - மூலதனம்** | | | |
| | | | |
| **மூலதனத்திற்கான அரசாங்கக் கொடை** | | | |
| 2019.01.01 இல் மீதி | | 9,956,993.57 | 11,798,919.21 |
| **கூட்டுக :** | | | |
| ஆண்டுக்கான மூலதனம் | | - | 2,000,000.00 |
| அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம் | | (4,665,107.63) | (3,841,925.64) |
| அரசாங்கக் கொடை - மூலதனம் | | **5,291,885.94** | **9,956,993.57** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்கான குறிப்புகள்**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| | | |
| **குறிப்பு 5 - க.கா.ச. திரண்ட நிதியம்** | | |
| | | |
| 2019.01.01 இல் மீதி | 100,397,962.35 | 43,161,365.93 |
| **கூட்டுக :** | | |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 43,902,996.30 | 57,236,596.42 |
| | | |
| 2019.12.31 இல் மீதி | **144,300,958.65** | **100,397,962.35** |
| | | |
| | | |
| | | |
| | | |
| **குறிப்பு 6 - கமக்காரர் இறப்பு பணிக்கொடை நிதியம்** | | |
| | | |
| 2019.01.01 இல் மீதி | 956,861,044.93 | 878,651,396.82 |
| **சேர்க்க :** | | |
| இறப்புப் பணிக்கொடை தவணை | 19,016,134.00 | 19,853,880.00 |
| வட்டி வருமானம் | 54,776,414.56 | 60,379,413.11 |
| | 73,792,548.56 | 80,233,293.11 |
| **கழிக்க :** | | |
| இறப்புப் பணிக்கொடை செலுத்துதல் | 1,878,750.00 | 2,023,645.00 |
| ஏலாமை நன்மை செலுத்துதல் | 101,000.00 | - |
| | 1,979,750.00 | 2,023,645.00 |
| 2019.12.31 இல் மீதி | **1,028,673,843.49** | **956,861,044.93** |
| | | |

## கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

## கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

## 2019 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்கான குறிப்புகள்

| | | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 7 - நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| **குறிப்பு 7.1 - முற்தவணைக் கிடைப்பனவுகள்** | | | |
| முற்தவணை – கால்நடை வளம் | | 2,854,241.59 | 2,960,947.18 |
| முற்தவணை – கெத்தட்ட அருண | | 23,038,765.05 | 27,313,322.85 |
| | | **25,893,006.64** | **30,274,270.03** |
| **குறிப்பு 7.2 – பிற சென்மதியான பணம்** | | | |
| ஊழியர் படிகளுக்கான ஏற்பாடு | | 4,500,000.00 | 1,560,000.00 |
| சேர் பெறுமதி வரி | | 1,513,805.00 | - |
| மீளச் செலுத்தப்படும் டெண்டர் வைப்புகள் | | 426,870.60 | 471,030.60 |
| கோரப்படாத இழப்பீடுகள் | | 70,800,200.00 | 70,800,200.00 |
| | | **77,240,875.60** | **72,831,230.60** |
| **குறிப்பு 7.3 – அட்டுறு செலவினம்** | | | |
| நிருவாகச் செலவுகள் | 7.3.1 | 12,380,713.31 | 5,184,154.29 |
| ஊக்குவிப்புப் படி - பயிர்க் காப்புறுதி | | 671,833.13 | 7,949,964.97 |
| ஊக்குவிப்புப் படி - அசையும் ஆதனங்கள்- மூன்றாந் தரப்பு | | 2,718,751.26 | - |
| அசையும் ஆதனங்கள்- பணியாளர் ஊக்குவிப்புப் படியும் பதவியுர்வுகளும் | | 11,755,982.24 | - |
| தனியாள் விபத்து மற்றும் சுவசெத | | 76,530.85 | 1,504,097.01 |
| தொழிற்பாட்டுச் செலவு - கால்நடை வளம் | | 131,837.99 | - |
| | | **27,735,648.78** | **14,638,216.27** |
| **குறிப்பு 7.4 – நட்டோத்தரவாத ஏற்பாடு** | | | |
| கால்நடை வளம் | | 7,000,000.00 | 8,000,000.00 |
| சுவ செத | | 500,000.00 | 500,000.00 |
| அசையும் ஆதனங்கள் – மூன்றாந் தரப்பு | | 23,559,605.00 | 11,975,723.00 |
| ஊடு பயிர்கள் | | 2,000,000.00 | 15,000,000.00 |
| கெத்தட்ட அருண (கட்டாய பயிர்க் காப்புறுதி) | | 2,000,284,021.00 | 1,105,000,000.00 |
| | | **2,033,343,626.00** | **1,140,475,723.00** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**<u>2019 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்கான குறிப்புகள்</u>**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| | | |
| **<u>குறிப்பு 7.3.1 - அட்டுறு செலவினம்</u>** | | |
| | | |
| மின்சாரம் | 214,898.10 | 3,663.15 |
| பாதுகாப்பு சேவைகள் கட்டணம் | 7,500.00 | 7,500.00 |
| வாடகை | 1,055,516.00 | 1,039,516.00 |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 537,145.00 | 149,940.00 |
| பிரயாண மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி | 1,004,959.00 | 283,721.00 |
| சம்பளம் | 1,421,622.02 | 1,106,137.07 |
| ஊ.சே.நி. | 74,935.09 | 92,851.69 |
| ஊ.ந.நி. | 18,733.77 | 23,212.92 |
| பிரச்சாரம் | 94,500.00 | 24,972.00 |
| காகிதாதிகள் | 218,892.50 | 419,017.66 |
| தொலைபேசி | 307,377.49 | 62,642.42 |
| நீர்க் கட்டணச் சிட்டைகள் | 150.00 | 10,801.86 |
| கணக்காய்வுக் கட்டணம் | 5,213,846.00 | 1,540,444.00 |
| எரிபொருள் | 304,340.00 | 160,208.10 |
| சீருடைகள் | 7,200.00 | - |
| நலனோம்புகை | 4,780.00 | - |
| உழைப்புக் கட்டணம் | 5,750.00 | - |
| போக்குவரத்துச் செலவு | 1,600.00 | - |
| மொழிபெயர்ப்புக் கட்டணம் | 1,085.00 | - |
| வங்கிக் கட்டணம் | 2,310.00 | 3,310.39 |
| சென்மதியான கட்டிடப் பராமரிப்பு | - | 16,590.00 |
| சென்மதியான அச்சிடல் பணிகள் | 308,594.68 | 1,500.00 |
| சென்மதியான தபால் கட்டணங்கள் | 36,050.00 | 3,511.00 |
| பல்லின கடன்கொடுனர் | 162,880.03 | 162,880.03 |
| சென்மதியான அலுவலக உபகரணங்கள் | 2,500.00 | 17,735.00 |
| சென்மதியான உபசரிப்புச் செலவு | 5,255.00 | - |
| சென்மதியான செய்தித்தாள் செலவுகள் | 28,170.00 | - |
| சென்மதியான சட்டக் கட்டணம் | - | 54,000.00 |
| விவசாய கட்டுப்பாட்டு நிலையக் கருத்திட்டம் | 1,340,123.63 | - |
| | **12,380,713.31** | **5,184,154.29** |
| | | |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான**

**<u>வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்</u>**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 8 - வருமானம்** | | |
| **குறிப்பு 8.1 - தவணைகள் (காப்புறுதி )** | | |
| | | |
| கால்நடை வளம் | 7,866,194.77 | 10,591,321.75 |
| சுவசெத காப்புறுதி /தனியாள் விபத்து | 9,419,321.45 | 6,343,970.00 |
| ஊடு பயிர் | 3,046,588.59 | 8,037,615.80 |
| அசையும் ஆதனங்கள் | 220,153,223.24 | 137,852,780.34 |
| கெத்தட்ட அருண (கட்டாயப் பயிர்க் காப்புறுதி) | 58,067,963.40 | 119,965,311.95 |
| | **298,553,291.45** | **282,790,999.84** |
| | **298,553,291.45** | **282,790,999.84** |
| | | |
| **குறிப்பு 8.2 - வட்டி வருமானம்** | | |
| | | |
| வட்டி - திறைசேரி உண்டியல்கள் (பயிர்களும் பிறவும்) | 123,164,439.13 | 123,548,217.07 |
| ஊழியர்களுக்கான கடன் | 1,858,133.67 | 1,847,805.29 |
| | **125,022,572.80** | **125,396,022.36** |
| **குறிப்பு 9 - தொழிற்பாட்டுச் செலவு** | | |
| **குறிப்பு 9.1 - நட்டோத்தரவாதம் - காப்புறுதி** | | |
| | | |
| கால்நடை வளம் | 5,136,019.50 | 4,993,850.25 |
| சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி | 44,690.00 | 466,762.89 |
| அசையும் ஆதனங்கள் | 11,583,882.00 | 7,175,723.00 |
| ஊடு பயிர் | 2,099,657.00 | 26,354,304.80 |
| கெத்தட்ட அருண (கட்டாயப் பயிர்க் காப்புறுதி) | 2,155,030,832.79 | 2,930,635,667.20 |
| | **2,173,895,081.29** | **2,969,626,308.14** |
| **<u>குறிப்பு 9.2 - பிற தொழிற்பாட்டுச் செலவுகள்</u>** | | |
| | | |
| காப்புறுதி ஊக்குவிப்புப் படி | 509,605.41 | 14,769,388.73 |
| அசையும் ஆதனங்கள் - மூன்றாந் தரப்பு காப்புறுதி ஊக்குவிப்புப் படி | 30,729,803.66 | 17,588,783.00 |
| அசையும் ஆதனங்கள் - பணியாளர் ஊக்குவிப்புப் படிகளும் பதவியர்வுகளும் | 11,755,982.24 | - |
| சுவசெத ஊக்குவிப்புப் படி | 153,272.49 | 254,820.09 |
| நிருவாகப் படி | 14,040.00 | 18,720.00 |
| பயிர் மதிப்பீடு | 4,355,573.43 | 2,224,594.60 |
| கால்நடை வளம் | 1,238,616.59 | 1,516,256.38 |
| | **48,756,893.82** | **36,372,562.80** |
| **<u>குறிப்பு 10 - பிற வருமானம்</u>** | | |
| | | |
| நிலையான சொத்துக்கள் விற்றொழித்தல் | - | 28,653.96 |
| அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம் | 4,198,249.79 | 3,324,992.83 |
| பல்லின வருமானம் | 65,201.52 | 283,672.37 |
| அறவிடமுடியாக்கடன்மிகை ஏற்பாடு | 138,436.47 | - |
| வங்கியின் சேவைகள் கட்டணம் | 4,741,300.00 | 359,600.00 |
| | **9,143,187.78** | **3,996,919.16** |
| | | |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான**

**வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 11 - நிருவாகச் செலவுகள்** | | |
| | | |
| சம்பளமும் ஊதியமும் | 80,683,797.20 | 77,970,730.52 |
| ஊ.சே.நி. உதவு தொகை | 8,791,903.79 | 8,323,757.47 |
| ஊ.ந.நி. உதவு தொகை | 2,197,974.70 | 2,080,963.91 |
| பிரயாணமும் வாழ்க்கைச் செலவுப்படியும் | 3,535,580.63 | 3,275,166.51 |
| மேலதிக நேரம் | 2,543,693.73 | 2,064,278.80 |
| நாட் சம்பளம் | 405,277.40 | 212,681.52 |
| மருத்துவச் செலவுகள் | 592,911.00 | 627,795.00 |
| பணிப்பாளர் சபை செலவுகள் | 331,500.00 | 189,660.00 |
| பணிக்கொடை | 4,540,217.82 | 4,982,837.14 |
| நலனோம்புகை | 997,640.24 | 1,138,534.21 |
| ஊழியர்களுக்கான படிகள் | 7,276,000.00 | 6,651,440.44 |
| எரிபொருள் | 5,697,201.70 | 5,835,268.05 |
| காகிதாதிகள் | 3,188,018.48 | 3,899,518.76 |
| உபசரிப்புப் படி | 210,498.08 | 206,867.45 |
| சட்டக் கட்டணம் | 397,349.86 | 287,892.00 |
| போக்குவரத்து | 373,923.33 | 284,358.82 |
| அச்சிடல் | 7,433,058.53 | 7,915,544.97 |
| பிரச்சாரமும் பயிற்சியும் | 5,963,611.81 | 10,229,546.54 |
| சீருடைகள் | 153,324.05 | 155,010.75 |
| வாடகை | 7,800,248.70 | 7,989,010.02 |
| தொலைபேசி | 3,101,601.34 | 3,997,671.52 |
| தபால் கட்டணம் | 1,070,240.82 | 961,407.44 |
| நீர் | 253,709.07 | 269,478.72 |
| செய்தித்தாளும் அறிவித்தல்களும் | 235,690.00 | 515,734.00 |
| பாதுகாப்புச் சேவைகள் | 702,525.00 | 719,962.50 |
| மின்சாரம் | 1,780,961.29 | 1,922,237.28 |
| பராமரிப்பு - வாகனங்கள் | 7,315,419.65 | 5,767,793.53 |
| பராமரிப்பு - கட்டிடங்கள் | 808,840.54 | 300,364.90 |
| பராமரிப்பு - அலுவலக உபகரணங்கள் | 315,416.82 | 312,564.09 |
| தொழிலாளர் கட்டணம் | 419,916.05 | 300,746.95 |
| மொழிபெயர்ப்புக் கட்டணம் | 203,930.00 | 114,860.00 |
| கணினிச் செலவுகள் | 131,906.25 | 75,149.24 |
| பல்லினச் செலவுகள் | - | 25,120.00 |
| தேய்மானம் | 17,768,835.96 | 8,744,992.83 |
| அறவிடமுடியாக் கடன் | - | 60,174.86 |
| கணக்காய்வுக் கட்டணம் | 3,673,402.00 | 600,000.00 |
| வெளிநாட்டுப் பயணங்கள் | 3,369,708.03 | 33,500.00 |
| மதியுரைக் கட்டணங்கள் | - | - |
| | **184,265,833.87** | **169,042,620.74** |
| **குறிப்பு 12 - நிதிசார் கட்டணங்கள்** | | |
| வங்கிக் கட்டணம் | 750,367.41 | 690,340.26 |
| | **750,367.41** | **690,340.26** |
| | | |

# 2019 டிசம்பர் 31 அன்று வெளியிடப்பட்டது

# விவசாய விசுராம ஊதியம் மற்றும் சமூக பாதுகாப்பு சலுகைகள் திட்டம்

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**கமக்காரர்ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று**

| | | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|---|
| சொத்துக்கள் | குறிப்பு | ரூ. சதம் | ரூ. சதம் |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| ஆதனம், சாதனம், பொறித்தொகுதி | 1 | 3,458,328.80 | 1,191,586.64 |
| | | **3,458,328.80** | **1,191,586.64** |
| பருவமுதிர்வு வரை தடுத்துவைத்த முதலீடுகள் | | | |
| திறைசேரி முறிகள் | | 1,055,048,182.56 | 1,053,000,000.00 |
| | | **1,055,048,182.56** | **1,053,000,000.00** |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| கையிருப்பு | 2 | 2,421,388.03 | 3,916,331.12 |
| வருமதிகள் | 3 | 19,331,022.20 | 14,733,099.20 |
| பருவமுதிர்வு வரை தடுத்துவைத்த முதலீடுகள் | 4 | 167,887,669.04 | 78,661,138.76 |
| வருமதியான வருமானம் | 5 | 2,312,963.48 | 2,364,790.50 |
| வங்கியிலுள்ள பணம் | 6 | 2,225,694.22 | 2,401,246.99 |
| | | **194,178,736.97** | **102,076,606.57** |
| | | . | . |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,252,685,248.33** | **1,156,268,193.21** |
| உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும் | | | |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | | | |
| கமக்காரர் ஓய்வூதிய நிதியம் | 7 | (75,433,313,129.80) | (71,616,681,986.31) |
| மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் | | 2,850,000.00 | - |
| குழுமக் காப்புறுதி பங்களிப்பு | | 1,000,000.00 | 1,000,000.00 |
| | | **(75,429,463,129.80)** | **(71,615,681,986.31)** |
| நடைமுறையல்லாப் பொறுப்புகள் | | | |
| ஓய்வூதிய பொறுப்பு | | 70,252,869,112.00 | 66,508,205,596.00 |
| திறைசேரி முறிகள் மீதான அரசாங்கக் கொடை | | 1,081,488,000.00 | 1,081,488,000.00 |
| பணியாட்டொகுதி பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 54,643,566.14 | 47,395,858.33 |
| | | **71,389,000,678.14** | **67,637,089,454.33** |
| நடைமுறை பொறுப்புகள் | | | |
| மூலதனத்திற்கான அரசாங்கக் கொடை | 8 | 1,178,329.84 | 1,191,587.68 |
| மொத்த சென்மதிகள் | 9 | 5,286,510,760.49 | 5,128,869,061.35 |
| அட்டுறு செலவினங்கள் | 10 | 5,458,609.66 | 4,800,076.16 |
| | | **5,293,147,699.99** | **5,134,860,725.19** |
| **மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்** | | **1,252,685,248.33** | **1,156,268,193.21** |

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

………………..……………………..

நிதிப் பிரிவுப் பிரதானி

இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர்சபை பொறுப்புக்கூற வேண்டும் பணிப்பாளர் சபையின் சார்பில் கையொப்பமிட்டது:

| | |
|---|---|
| ……………………. | …..………………………. |
| பணிப்பாளர்சபை அங்கத்தவர் | பணிப்பாளர்சபை அங்கத்தவர் |
| கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை | கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**கமக்காரர்ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**விரிவான வருமானக் கூற்று**

**2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூ. சதம் | ரூ. சதம் |
| வருமானம் | | | |
| வட்டி வருமானம் | | 119,044,408.64 | 97,556,670.29 |
| கமக்காரர் பங்களிப்பு | | 17,332,237.96 | 19,982,355.64 |
| ஓய்வுபெறுனர்களின் பங்களிப்பு | | 94,327,403.00 | 91,373,300.00 |
| ஆயுட் காப்புறுதி தவணைக்கான கமக்காரர்களின் பங்களிப்பு | | 2,775,690.00 | 3,047,070.00 |
| | | **233,479,739.60** | **211,959,395.93** |
| | | | |
| செலவுகள் | | | |
| உதவுதொகை மீளளிப்பு | | (11,917,037.98) | (12,905,393.00) |
| தேறிய வட்டி மீளளிப்பு | | (8,544,418.02) | (8,503,036.00) |
| ஏலாமை பணிக்கொடை செலுத்துதல் | | (1,206,876.00) | (1,228,863.00) |
| குழுமக் காப்புறுதி தவணை | | (19,016,134.00) | (19,853,880.00) |
| ஓய்வூதியம் செலுத்துதலும் தரகுத் தொகையும் | | | |
| - ஓய்வூதியம் செலுத்துதல் | | (3,217,332,522.00) | (3,059,370,767.00) |
| - தரகு செலுத்துதல் | | (13,196,218.00) | (12,792,199.00) |
| **மொத்தச் செலவு** | | **(3,271,213,206.00)** | **(3,114,654,138.00)** |
| | | | |
| **தொழிற்பாட்டு மிகை /(பற்றாக்குறை )** | | **(3,037,733,466.40)** | **(2,902,694,742.07)** |
| | | 3,065,000,000.00 | 2,725,000,000.00 |
| | | **27,266,533.60** | **(177,694,742.07)** |
| | | | |
| **அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம்** | | 466,857.84 | 516,932.81 |
| | | **27,733,391.44** | **(177,177,809.26)** |
| வருமானம் – நிருவாகத்திற்கானது | | | |
| | | | |
| நிருவாகச் செலவுகளுக்கான கமக்காரரர் பங்களிப்பு | | 1,387,845.00 | 1,523,535.00 |
| நிருவாகச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை | | 138,000,000.00 | 110,000,000.00 |
| பிற வருமானம் | 11 | 18,400.00 | 20,400.00 |
| | | **139,406,245.00** | **111,543,935.00** |
| **செலவுகள்** | | | |
| நிருவாக மற்றும் தாபன செலவுகள் | 12 | (136,894,634.69) | (131,656,887.84) |
| நிதிசார் செலவுகள் | 13 | (88,581,354.56) | (114,007,953.57) |
| சேகரித்தல் முகவர்களுக்கான தரகு | | (647,752.00) | (711,732.00) |
| | | | |
| **மொத்த நிருவாகச் செலவுகள்** | | **(226,123,741.25)** | **(246,376,573.41)** |
| | | | |
| | | **(86,717,496.25)** | **(134,832,638.41)** |
| **ஆண்டுக்கான மிகை / (பற்றாக்குறை )** | | **(58,984,104.81)** | **(312,010,447.67)** |
| | | | |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| பணிக்கொடை இலாபம்/ (நட்டம்) | | (12,983,522.68) | 687,767.03 |
| ஓய்வூதியப் பொறுப்பின் அதிகரிப்பு | | (3,744,663,516.00) | (3,287,507,607.00) |
| | | **(3,757,647,038.68)** | **(3,286,819,839.97)** |
| | | | |
| விரிவான வருமானத்தின் தேறிய மிகை / பற்றாக்குறை | | **(3,816,631,143.49)** | **(3,598,830,287.64)** |
| (கமக்காரர் ஓய்வூதிய நிதியத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டது .) | | | |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**கமக்காரர்ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று**

ரூ.

| | கமக்காரர் ஓய்வூதிய நிதியம் | மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை | குழுமக் காப்பறுதி பங்களிப்பு | மீள் கணிப்பீட்டு ஒதுக்கம் | உ.வி.தா. கொடை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| **2018 சனவரில் 01 இல் மீதி** | (67,774,374,701) | 1,687,840 | 1,000,000 | - | 547,885 |
| முந்திய சீராக்கல்கள் | (244,024,883) | - | - | - | - |
| | | | | | |
| **2018 திசெம்பர் 31 இல் சீராக்கிய மீதி** | **(68,018,399,584)** | **1,687,840** | **1,000,000** | **-** | **547,885** |
| சேர்த்தவை | - | 20,680 | - | - | - |
| அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம் | - | (516,933) | - | - | - |
| ஆண்டுக்கான இலாபம் /நட்டம் | (3,598,830,288) | - | - | - | - |
| | | | | | |
| **2018 திசெம்பர் 31 இல் மீதி** | **(71,617,229,871)** | **1,191,588** | **1,000,000** | **-** | **547,885** |
| கமக்காரர் ஓய்வூதிய நிதியத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்ட உ.வி.தா. கொடை | 547,885 | | | | (547,885) |
| | | - | | | |
| **2018 திசெம்பர் 31 திகதியில் சீராக்கிய மீதி** | **(71,616,681,986)** | **1,191,588** | **1,000,000** | **-** | **-** |
| | - | | | | |
| சொத்துக்கள் சேர்த்தல் | - | 453,600 | - | - | |
| அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம் | - | (466,858) | - | - | |
| சென்மதியான சார்ந்த தரப்பினர்க்கு சாட்டுதல்செய்த மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை | - | (1,178,330) | - | - | - |
| மோட்டார் வாகனங்களிலிருந்து சாட்டுதல் கிரயம் | - | - | - | (2,102,061) | - |
| மோட்டார் வாகனங்களில் திரண்ட தேய்மானம் | - | - | - | 2,102,061 | - |
| மோட்டார் வாகனங்களுக்கு சாட்டுதல் செய்த மீள்கணிப்பீட்டு பெறுமதீ | - | - | - | 2,850,000 | - |
| ஆண்டுக்கான இலாபம்/ நட்டம் | (3,816,631,143) | - | - | | - |
| | | - | - | | - |
| **2019 திசெம்பர் 31 இல் மீதி** | **(75,433,313,130)** | **0.00** | **1,000,000** | **2,850,000** | **-** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**கமக்காரர்ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| | | |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசுப் பாய்வு** | | |
| தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை) | (3,816,631,143) | (3,598,830,288) |
| ***சீராக்கல்கள்*** | | |
| - தேய்மானம் | 1,036,858 | 516,933 |
| - ஆதனம், சாதனம், பொறித்தொகுதி விற்றொழித்தல் மீதான (இலாபம்) | - | (3,150) |
| - முந்திய வருடத்துடன் சம்பந்தப்பட்ட சீராக்கல்கள் | - | (244,024,883) |
| - பணிக்கொடை மீதான இலாபம் /நட்டம் | 12,983,523 | (687,767) |
கடன் மற்றும் வருமதிகளும் வைப்புக்களும் அவை தொடங்கப்பட்ட தினத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிதிசார்சொத்துக்கள் அனைத்தும் (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு குறிப்பிட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளிட்டதாக) அளிப்புப் பத்திரத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கே தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஏதேனும் சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்வுகள் மீதுள்ள உடன்படிக்கை செய்யப்பட்ட உரிமை நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமான அளவில் கையளிக்கப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின் மீது உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்குரிய உரிமையானது அது கையளிக்கப்படுகின்ற வேளையில் சபையின் நிதிசார் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுதலை நீக்கும். கையளிக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றில் சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்பிசைவுசெய்யப்படும்.

நிதிசார்சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு நிதி அளவினை எதிரீடுசெய்ய சபைக்கு சட்டமுறையான உரிமை உள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலவு மீளளிப்பு செய்ய அல்லது சொத்துக்களை தேறவைத்து பொறுப்பினை சமாந்தரமாக

செலுத்தித்தீர்க்க கருதப்படின் மாத்திரம் தேறிய பணஅளவு நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு மற்றும் குறுங்கால முதலீடுகளும் வர்த்தக மற்றும் பிற வருமதிகளும் உள்ளடங்கும்.

**(அ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமானபெறுமதிக்கு நிதிசார்சொத்துக்களில் வர்த்தகத்திற்காக தடுத்துவைக்கப்படுகின்ற நிதிசார்சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்பிசைவு செய்தலின்பேரில் பெயர் குறிக்கப்பட்ட நிதிசார் சொத்துக்களும் உள்ளடக்கப்படும். நிதிசார் சொத்துக்கள் கிட்டிய நடப்பு விற்பனை அல்லது மீள்கொள்வனவுப் பணிக்காகக் கொள்ளப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் அல்லது நிதிசார் செலவில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயமான பெறுமதியின் மாற்றங்களைக் கொண்டதாக நியாயமான பெறுமதியில் நிதிசார் நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன.

**(ஆ) கடனும் வருமதியானவையும்**

கடனும் வருமதியானவையும் முனைப்பான சந்தையொன்றில் விலை மட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்பொறுப்புக்களாகும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் அத்தகைய நிதிசார்சொத்துக்கள் சேதம் கழிக்கப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பீடு செய்யப்படும். கொள்ளப்பட்ட வேளையில் ஏதேனும் தள்ளுபடி அல்லது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட மற்றும் பயனுறுதிமிக்க வட்டிவழிமுறையின் உள்ளடங்கிய பகுதியான கட்டணம் அல்லது கிரயத்தைக் கருத்திற்கொண்டே மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம் கணிப்பீடுசெய்யப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை விபரமான வருமானக் கூற்றின் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாக தோன்றுகின்ற நட்டங்கள் நிதிக்கிரயத்தின் விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்புகள், முற்பணங்கள், பிற வருமதிகள் மற்றும் காசு மற்றும் காசுக்குச் சமமானவை என்பவற்றையே கடனும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

**(இ) பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள்**

நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களும் நிலையான முதிர்ச்சியடைதல்களும் பருவ முதிர்வுவரை தடுத்துவைத்துக் கொள்வதற்கான ஆக்கமுறையான நோக்கமும் ஆற்றலும் சபைக்கு உள்ளவிடத்து அவை பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்டவையாக கருதப்படும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள் சேதம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி வழிமுறை பயன்படுத்தப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க

கணிக்கப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை மதிப்பிறக்கம் செய்தல் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாகத் தோன்றுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

அரசாங்க பிணையங்களிலும் நிலையான வைப்புக்களிலுமான முதலீடுகள் பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(ஈ) விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்**

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது விற்பனைக்காக உள்ளவையென பெயர்குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனும் நிதிசார் சொத்துக்கள் பிரிவில் வகைப்படுத்தப்பட்டிராத பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களாகும். ஆரம்ப ஏற்றுக்காள்ளலின் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேதநட்டங்கள் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படும். விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதிமிக்க வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றினை ஏற்பிசைவு செய்வதை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படும்.

ஆரம்ப ஏற்பிசைவு செய்தலின்பேரில் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாகசபையானது எந்தவொரு நிதிசார் சொத்தையும் பெயர்குறிக்கவில்லை.

**2.5 நிதிச்சொத்துக்களின் சேதங்கள்**

ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைந்தமைக்கான புலனால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவாவென கம்பெனி மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் இடம்பெற்றிருப்பின் சொத்தின் எடுத்துச்செல்லும் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சேதத்தின் அளவு கணிப்பீடு செய்யப்படும்.

## 3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

கேள்வியின்பேரில் அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட உள்ளவையே நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட உள்ள சொத்துக்களாக அமையும். அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டியுள்ள மீதிகளே நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக அமைகின்றன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறிந்த எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. இறந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டரீதியான அல்லது உடன்பாடு ரீதியான கடப்பாடு உள்ளவிடத்தும் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் வெளியே பாய்ந்துசெல்வதை அவசியப்படுத்த இடமுள்ளவிடத்தும் ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.1 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 – “ இளைப்பாற்று நன்மைக் கிரயம்” மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் அமைந்தொழுகக்கூடிய வகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காக சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததில் இருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக் காலம் நிறைவடைவதிலிருந்து மாத்திரமே ஊழியருக்கான பொறுப்பு தொடங்குகின்றது. பொறுப்புக்களுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

### 3.2 மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாரா பொறுப்புகளும்

பொருளாதார நன்மைகளை சாட்டுதல்செய்ய வாய்ப்பற்ற அல்லது நம்பகத்தன்மையை அளவிட இயலாத நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமையை உறுதிப்படுத்துகின்ற உள்ளார்ந்த கடப்பாடுகளாகும்.
சபையின் மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாரா பொறுப்புக்களும் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.3 கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியத்தின் பொறுப்புகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் நிதியத்தின் பொறுப்புகள் 2007 இல் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டின் பேரில் நிகழ்கால பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்டு நிதிக்கூற்றுகளில் கணக்குப் பதியப்பட்டுள்ளது.

## 4 விபரமான வருமானக் கூற்று

### 4.1 வருமானம்

**அ)** சபையின் வருமானம் காப்புறுதி தவணைப்பணம், திறைசேரி உண்டில்கள் மற்றும் ஊழியர் கடனுக்கான வட்டி வருமானம் மற்றும் பிற வருமானங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.
**ஆ)** தவணைகளைச் சேகரித்ததன் மூலமாக கிடைத்த அனைத்து வருமானமும் காசு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

**அ)** ஓய்வூதிய தவணை வருமானம் சேர்த்துக்கொள்ளப்பட்ட காலத்திற்காக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**ஆ)**மேற்படி வருமானம் காசு அடிப்படையில் அமைவதோடு ஏற்புடைய செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.
**இ)** அட்டுறு வருமானம் கால அடிப்படையில் அட்டுறு நிலையடையும்.

### 4.3 அரசாங்கக் கொடைகளுக்கான கணக்குப் பதிவுகள்

உறப்பட்ட செலவினங்களுக்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் அச்செலவுகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட காலவரையறையில் வருமானமாக விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் சார்ந்த சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் ஒழுங்குமுறையான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 4.4 செலவுகள்

உறப்பட்ட செலவினங்களுக்கும் தனித்துவமான வருமான வகையினங்களின் ஈட்டல்களுக்குமிடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் செலவுகள் ஏற்பிசைவு செய்யப்படும். சபையின் செயற்பாடுகளை நெறிப்படுத்துகையிலும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறன்மிக்க நிலைமையில் பேணிவருவதிலும் உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான மிகைநிலை அல்லது பற்றாக்குறையினை நெருங்குகையில் அட்டுறு அடிப்படையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

401/4 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவுகள் பின்வருமாறு

| செலவினம் | வீதம் |
|---|---|
| | |
| வாடகை, தொலைபேசி | 5% |
| தபால், நீர்க்கட்டணம் | 5% |
| மின்சாரம் | 5% |
| தலைமையக உபகரணம் | 5% |
| கட்டடப் பராமரிப்பு | 5% |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 3% |
| எரிபொருள் | 2% |
| காகிதாதிகள் | 2% |
| சீருடைகள் | 2% |
| பாதுகாப்பு | 5% |
| கணினிச் செலவுகள் | 5% |

**5. காசுப் பாய்வுக் கூற்று**

திட்டத்தின் காசுப்பாய்வுக்கூற்று "**நேரில் முறையை"**பயன்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளன. அதுஇலங்கை கணக்கீட்டுக் கொள்கை -7 "காசுப் பாய்வுக் கூற்று" இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

**1. அறிக்கையிடல் தேதிக்குப் பின்னரான சம்பவங்கள்**

அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் இடம்பெறுகின்ற சம்பவங்களின் புலனுணர்வுசார்ந்த தன்மையைக் கருத்திற் கொண்டுள்ளதோடு அவசியமான இடங்களில் கணக்குகளில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**7 சார்ந்த தரப்பினர்கொடுக்கல் வாங்கல்கள்**

கமத்தொழில் காப்புறுதித்திட்டமும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டமும் கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படுவர். இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான பெறுமதியின்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்திற்கு ரூ. 518, 000, 000 பெறுமதியான கடனை வழங்கியுள்ளது.

**8. எதிர்பாரா சந்தர்ப்பங்கள்**

**கிடைக்கவேண்டிய வட்டி**

1996 இல் திறைசேரி உண்டியல் மீதான முதலீட்டு வட்டியை இழந்தமை தொடர்பாக இலங்கை வங்கிக்கு எதிராக சபை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளது.

| வழக்கு இலக்கம் | தொகை (ரூ.) |
|---|---|
| MR 21843 | 1,454,670.84 |
| MR 21844 | 1,172,602.46 |
| MR 21845 | 2,784,657.55 |

மேன்முறையீடு கிரயத்திற்கு கட்டுப்பட்டதாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலான**

**<u>கணக்குகளுக்கான குறிப்புகள்</u>**

**<u>குறிப்பு - 01</u>**

| விபரம் | அலுவலக உபகரணம் | நலன்புரிச் சாதனம் | தளபாடம், பொருத்திகள் | கணினி | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| 2019 சனவரி 01 இல் கிரயம் | 528,648.50 | 1,325.00 | 78,876.92 | 264,945.00 | 873,795.42 |
| சேர்க்க | - | - | - | - | - |
| **2018 திசெம்பர் 31 இல் கிரயம்** | **528,648.50** | **1,325.00** | **78,876.92** | **264,945.00** | **873,795.42** |
| தேய்மான வீதம் | 10% | 10% | 10% | 20% | |
| திரண்ட தேய்மானம் 2019 சனவரி 01 இல் | 403,552.96 | 1,325.00 | 61,064.42 | 261,870.92 | 727,813.30 |
| ஆண்டுக்கான தேய்மானம் | 14,792.00 | - | 2,850.00 | 1,994.00 | 19,636.00 |
| **மொத்த தேய்மானம்** | **418,344.96** | **1,325.00** | **63,914.42** | **263,864.92** | **747,449.30** |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **110,303.54** | **-** | **14,962.50** | **1,080.08** | **126,346.12** |

ரூ. 686,080.42 வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட இன்னமும் பாவனையில்உள்ள முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் அடங்குகின்றன.

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான**

**வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 02 - கையிருப்பு** | | |
| அச்சிடல் பொறுப்புகள் | 105,756.95 | 160,745.22 |
| | **105,756.95** | **160,745.22** |
| **குறிப்பு 03 - வருமதிகள்** | | |
| கமக்காரர் ஒய்வூதியக் கடன் | 564,335,972.90 | 613,222,811.96 |
| இறப்புப் பணிக்கொடை முற்பணம் | 50,000.00 | 50,000.00 |
| | **564,385,972.90** | **613,272,811.96** |
| **குறிப்பு 04 - பருவமுதிர்வு வரை தடுத்துவைத்த நிதிச் சாதனங்கள்** | | |
| திறைசேரி உண்டியல்கள் - இலங்கை வங்கி | 133,916,454.67 | 95,698,669.85 |
| | **133,916,454.67** | **95,698,669.85** |
| **குறிப்பு 05 - வங்கியிலுள்ள பணம்** | | |
| கணக்கிலக்கம் 164790 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ் | 324,626.90 | 399,609.07 |
| கணக்கிலக்கம் 164795 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ் | 507,735.60 | 735,036.82 |
| சேகரித்தல் கணக்கு | 175,244.00 | 92,633.00 |
| | **1,007,606.50** | **1,227,278.89** |
| **குறிப்பு 06 - கடற்றொழிலாளர் ஓய்வூதிய திரண்ட நிதியம்** | | |
| முன்கொண்டு வந்த மீதி | (2,947,929,044.87) | (2,656,607,634.50) |
| ஆண்டில் சேர்த்தவை | | |
| ஆண்டுக்கான மொத்த மிகைநிலை /(பற்றாக்குறை) | (341,011,663.10) | (291,321,410.37) |
| | **(3,288,940,707.97)** | **(2,947,929,044.87)** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**
**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**
**2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான**
**வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| | | |
| **குறிப்பு 07 - இறப்புப் பணிக்கொடை நிதியம்** | | |
| | | |
| முன்கொண்டுவந்த மீதி | 26,661,514.70 | 25,315,774.70 |
| சேர்க்க: | | |
| ஆண்டுக்கான பங்களிப்புத் தொகை | 1,769,100.00 | 1,775,740.00 |
| கழிக்க: | | |
| இறப்புப் பணிக்கொடை செலுத்துதல் | (368,000.00) | (430,000.00) |
| | (368,000.00) | (430,000.00) |
| | 1,401,100.00 | 1,345,740.00 |
| | | |
| | 28,062,614.70 | 26,661,514.70 |
| | | |
| **குறிப்பு 08 - சென்மதிகள்** | | |
| | | |
| சென்மதியான - ஓய்வூதியம் செலுத்துதல் | 254,423.00 | 2,793,811.00 |
| சென்மதியான - கமத்தொழில் காப்புறுதித் திட்டம் | 40,070,084.53 | 34,353,102.71 |
| சென்மதியான - மீளச் செலுத்தவேண்டிய உதவுதொகை | 90,746.00 | 32,195.00 |
| சென்மதியான - இறப்புப் பணிக்கொடை | 98,000.00 | 58,000.00 |
| சென்மதியான - ஊக்குவிப்புப் படி | 325.00 | 325.00 |
| சென்மதியான - உதவுதொகை மீதான மீளளிக்கின்ற வட்டி | 122,596.00 | 35,219.46 |
| சென்மதியான கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் | 91,367.00 | |
| | 40,727,541.53 | 37,272,653.17 |
| | | |
| **குறிப்பு 9 - அட்டுறு செலவினம்** | 570,092.50 | 590,000.00 |
| சட்டக் கட்டணம் | 17,000.00 | 17,000.00 |
| கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் | 1,432,702.00 | 1,232,702.00 |
| | | |
| | 2,019,794.50 | 1,839,702.00 |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான**

**வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| | | |
| **குறிப்பு 10 - நிருவாகச் செலவினம்** | | |
| சம்பளமும் ஊதியமும் | 2,661,894.51 | 2,454,758.47 |
| ஊ.சே.நி. உதவுதொகை | 316,414.29 | 278,793.14 |
| ஊ.ந.நி. உதவுதொகை | 79,106.06 | 69,649.20 |
| விசேட படி | 418,404.00 | 449,034.00 |
| பணிக்கொடை | 207,637.66 | 149,926.31 |
| எரிபொருள் | 167,564.76 | 171,625.53 |
| காகிதாதிகள் | 161,870.74 | 155,980.75 |
| அச்சிடல் | 223,420.27 | 137,023.95 |
| சட்டக் கட்டணங்கள் | 409,000.00 | 401,500.00 |
| பணியாளர் சீருடைகள் | 6,132.96 | 6,200.43 |
| வாடகை | 709,113.52 | 726,273.64 |
| தொலைபேசி | 281,963.76 | 363,424.68 |
| தபால் கட்டணம் | 133,780.10 | 120,175.93 |
| நீர்க் கட்டணச் சிட்டை | 23,064.46 | 24,498.07 |
| பாதுகாப்பு | 46,835.00 | 47,997.50 |
| மின்சாரம் | 161,905.57 | 174,748.84 |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 385,022.09 | 303,568.08 |
| கட்டிடப் பராமரிப்பு | 73,530.96 | 27,305.90 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | 21,027.79 | 20,837.61 |
| கணினிச் செலவுகள் | 291,693.75 | 94,259.95 |
| தேய்மானம் | 19,636.00 | 19,636.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 200,000.00 | 150,000.00 |
| | **6,999,018.25** | **6,347,217.98** |
| | | |
| **குறிப்பு 11 - நிதிசார் கட்டணங்கள்** | | |
| | | |
| வங்கிக் கட்டணங்கள் | 7,500.00 | - |
| | **7,500.00** | **-** |

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

எனது இலக்கம்: ஏஜீஎல்/ஈ/ ஏஏஐபீ/01/19/15 திகதி: 2020 ஓகத்து 28

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் பிற சட்டமுறையான அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**.......................................................................................................................**

மேற்படி அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம் /டப்ளிவ். பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்: 01.செயலாளர் , கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை

அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள்

அபிவிருத்தி அமைச்சு

02. செயலாளர் , நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**எனது இலக்கம் : ஏஜீஎல் /ஈ /ஏஏஜபீ/ 01 /19/15 திகதி : 2020 ஓகத்து 28**

**தலைவர்,**

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.**

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**.............................................................................................................................................**

**I. நிதிக் கூற்றுகள்**

**I.I அபிப்பிராயம்**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச்சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ)** இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்கள் இனங்காணல் மற்றும் ஆயுட் கணிப்பு மதிப்பீடு காலத்துடன் நேரொத்ததாக மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருப்பினும் அவ்வாறு செய்யாமல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியத்திற்காக ரூ. 19, 016,134 நிதியேற்பாடுகள் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ)**மகியங்கனை, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகியமாவட்டங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களில் திட்டத்திற்குச் சொந்தமான 76.6 பர்ச்சஸ் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுகணக்குகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதைப்போலவே 1986 இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இறையிலிச் சொத்துரிமையாக கையளிக்கப்பட்டிருந்த எம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ இல்லத்தின் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வுக் தரங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின்கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவைஎனவும் உசிதமானவை எனவும் நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமாகின்ற உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளை தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்க கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுகள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் அளவுசார்ரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்டுத்தக்கூடுமென்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள்அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வு இனங்காணப்படுகையிலும் மதிப்பீடு செய்யப்படுகையில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலமாகவும் மோசடிகள் அல்லது தவறுகள் மூலமாக தோன்றக்கூடிய அபாயநேர்வுகளை தவிர்த்துக் கொள்ள, போதியளவிலான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக அமைகின்றது. கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, மறை சூழ்ச்சி , போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் உருவாகக் காரணமாக அமைகின்றன.
- சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டபோதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடக் கருதுவதில்லை.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குத்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான

ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதிளவிலான நிச்சயமற்றதன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்குத் தன்மை முற்றுப்பெற இயலும்.

- வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக் கூற்றுகளின் சமர்ப்பணங்கள், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதோடு அற்காக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமான மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந் தரப்பினர் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

**2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட எற்பாடுகள் அடங்கியுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கணக்காய்வுக்காக அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது விசாரணையில் புலனாகின்றவிதத்தில் முறையான நிதியறிக்கைகள் சபையினால் பேணி வரப்பட்டிருந்தது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கையில் 1.2 (அ) மற்றும் (ஆ) அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளது.

கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் பேரிலும் கணியரீதியான மட்டுப்பாடுகளுக்குள்ளேயும் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் அளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் ஆளும் சபையினது எவரேனும் அங்கத்தவருக்கு திட்டத்தில் இணைந்து ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்பு நீங்கலாக ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது திட்டத்தின் ஆளும் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றி உள்ளமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் வளங்களை சிக்கனமாகவும் பயனுறுதிமிக்கவகையிலும் காலப்பகுதிகளுக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஏற்பாடுசெய்து பாவிக்கவில்லையென்பது.

**3. பிற கணக்காய்வு அவதானிப்புகள்**

**(அ)** எம்பிலிபிட்டியவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லம் அவசியமான திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படாமல் 21 வருடங்களுக்கு மேலாக பாவிக்கப்படாமல் இருக்கின்றது.

**(ஆ)** கண்டி, அம்பாறை, மன்னம்பிட்டி மற்றும் மாகோ அகிய பிரதேங்களில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு மாவட்ட அலுவலகங்ளை நிர்மாணிப்பதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக காணிகள் கையேற்கப்பட்டிருந்தபோதிலும் அந்த காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளாமல் அன்றைய தினத்தில் இருந்து 2-12 வருடங்கள் வரையான காலப்பகுதியில் இருந்து அரச மற்றும் பிரத்தியேக வாடகைக் கட்டிடங்களில் அலுவலகங்கள் பேணிவரப்பட்டிருந்தன.

**(இ)** 2008 யூன் 04 ஆந் திகதி தொடக்கம் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தினால் அலுவலக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டத்திற்காக செலுத்தப்பட்டிருந்த ரூ. 565,800 பணத்தொகையை செலவுமீளளிப்பு செய்ய இயலாதென அந்த நிறுவனங்கள் அறிவித்திருந்தபோதிலும் கருத்திட்டம் கைவிடப்பட்டமையால் செலுத்திய பணத்தொகை பொருளாதாரரீதியாக பயனற்றதாக அமைந்தபோதிலும் அது மூலதன முற்பணமாக நடைமுறைச் சொத்துக்களின்கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஈ)** 5 - 25 வருட காலமாக நிலவி வருகின்ற கூட்டுத்தொகை ரூ. 692,302 ஆக அமைந்த ஊழியர் கடனும் முற்பணமும் ஊழியர் பணிக்கொடையிலிருந்து அல்லது பிணைகாரர்களிடமிருந்து பருவரீதியாக அறவிடப்படாமல் கணக்குகளில் முன்னெடுத்து வரப்படுகின்றது.

**(உ)** 5 - 25 வருட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூ. 708,347 செலவுமீளளிப்புச் செய்யவேண்டிய சம்பளம், சம்பள முற்பணம் மற்றும் கலப்புக் கடன்படுனர் மீதிகளை செலுத்தி தீர்த்துக்கொள்ளாமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்படுகின்றது.

**(ஊ)**கமத்தொழில் அமைச்சினால் அமுலாக்கப்படுகின்ற இலங்கைக்கான டிஜிட்டல் பொருளாதார உபாய மார்க்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தின் கீழ் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை ஊடாக ஒருமுகப்படுத்தப்பட்ட கமத்தொழில் தகவல் முறைமையைக் கட்டியெழுப்ப திட்டமிடப்பட்டிருந்தது. கம்பறா மற்றும் பதுளை மாவட்டங்களை முதன்மையாகக்கொண்டு கமக்காரர்களின் தகவல்களை உள்ளட்ட தரவு முறைமையொன்றை கட்டியெழுப்புதல், இலங்கைக்கான கமநிலங்களை இனங்காணல் மற்றும் அவற்றைக் கணினிமயப்படுத்துவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. கம்பஹா மாவட்டத்திற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள தரவுத் தளத்தைப் பிரயோகிக்க எதிர்பார்த்தபோதிலும் சபையினால் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகையில் மேற்படி தரவுத்தளத்தை நேரடியாகவே ஏற்புடையதாக்கிக்கொள்ள இயலாமை சம்பந்தமாக இனங்காணப்பட்ட பலவீனங்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களிடமிருந்து தோன்றிய எதிர்ப்பு மற்றும் தோன்றிய நிதிரீதியான வசதியீனங்கள் காரணமாக கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களில் முறையே 26 கமநல சேவை நிலையங்களில் 80,006 காணித்துண்டுகள் மற்றும் 10 கமநலசேவை நிலையங்களில் 27,139 காணித்துண்டுகளில் 10,825 காணித்துண்டுகளையும் 9,955 காணித்துண்டுகளையும் மாத்திரமே படமாக்கல்செய்து நிறைவுசெய்ய இயலுமாயிற்று. 07 மாத காலம் மாத்திரம் அமுலாகி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள இந்த கருத்திட்டம் வருங்காலத்தில் அமுலாக்கப்பட மாட்டாதெனில் இதற்காக இதுவரை உறப்பட்ட ரூ. 9,610,720 செலவானது பயனற்ற செலவாக ஆகக்கூடுமென்பது அவதானிக்கப்படுகின்றது.

**(எ)** இலவசக் காப்புறுதியின்கீழ் காப்புறுதி உரித்தான கமக்காரர்களுக்கு பயிர்ச்சேத இழப்பீடு வழங்க பொது திறைசேரியினால் கட்டுப்பணத்தொகை வழங்குவதிலான தாமதம் காரணமாக 2017/2018 பெரும்போகம் மற்றும் 2018 சிறு போகத்தின் பயிர்ச்சேத இழப்பீட்டுத் தொகை செலுத்துதல் ஒரு வருடகாலமாக தாமதமாகி 2019 சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதைப்போலவே 2018/2019 பெரும்போகத்திற்காக பயிர்ச்சேதமேற்பட்ட 20,100 பேருடன் தொடர்புடைய ரூ. 598,972,934 இழப்பீடு 2020 பெப்ருவரி அதாவது 2019/2020 பெரும்போகத்திலேயே செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க இலவசக் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தில் ஒருவிதமான வினைத்திறமையீனம் அவதானிக்கப்பட்டது. உரிய காலத்தில் இழப்பீடு கிடைக்காமையால் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை மீது கமக்காரர்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ளமை பொலநறுவை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்ட வெளிக்கள கணக்காய்வு விசாரணைகளின்போது மேலும் வெளிப்பட்டது.

**(ஏ)**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதி நிறுவனத்துடன் கூட்டாக 2016 மே மாதம் 05 ஆந் திகதி தொடக்கம் 2019 மே மாதத்திற்கிடையிலான காலப்பகுதிக்குள் 6 மாவட்டங்களில் சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதி முறையியலொன்றைத் தயாரித்து

நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கைக்கு வந்திருந்தபோதிலும் 2018/2019 பெரும்போகத்தில் வவுனியா , அநுராதபுரம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆராய்ச்சி மட்டத்தில் அது அமுலாக்கப்பட்டிருந்தது. சேத மதிப்பீட்டுக்காக புதிய வழிமுறைகளை அறிமுகஞ்செய்ய சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதி முறையியலை அமுலாக்குவதன் மூலமாக எதிர்பார்த்த போதிலும் வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் இந்த வழிமுறையின்கீழ் இழப்பீடு கணிக்கப்பட்டடிருந்தது.

**(ஐ)**2018 ஏப்பிறல் 01 தொடக்கம் 2019 மார்ச்சு 31 வரை கட்டாயமான 06 பயிர்ச்செய்கைகளுக்காக இலவசக் காப்புறுதியை வழங்குவதற்காக கடந்த பல வருடங்களின் சேத அறிவிப்பிற்கிணங்க செலுத்தப்பட்டிருந்த உச்சக் காப்புறுதிப் பொறுப்பின் பெறுமதி ஏறக்குறைய ரூ. 5,000,000,000 ஆக அமையக்கூடிய காப்புறுதிப் பெறுமதிக்கான மறுகாப்புறுதிப் பெறுமதி ரூ. 3,500,000,000 ஆக அமைந்திருப்பினும் மத்திய வங்கி அறிக்கையில் தரவுகள் சரியாக பிரயோகிக்கப்பட்டமையால் காப்புறுதிப் பொறுப்பின் பெறுமதி 7,500,000,000 என தீர்மானிக்கப்பட்டு ரூ. 5,315,000,000 மறுகாப்புறுதி பொறுப்பினை நிறுவனம் செய்திருந்தமை காரணமாக ரூ. 1,815,000,000 அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிட்ட மறுகாப்புறுதியுடன் தொடர்புடைய உடன்படிக்கையின் பிரகாரம் 2,185,000,000 வரையான இழப்பீட்டுப் பெறுமதி சபையினால் உறப்படவும் ரூ. 1,500,000,000 வரையான இழப்பீடு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பினால் உறப்பட்ட பின்னர் மறுகாப்புறுதிக்குச் செல்வதற்கான உரிமை நிலவுகின்றது. மறுகாப்புறுதி தவணைப்பண பெறுமதியான ரூ. 675,760,000 சபையினால் செலுத்தப்படுவதன் பேரில் ரூ. 4,360,760,000 உள்நாட்டுரீதியாக இழப்பீட்டுக்காக வகிக்கப்படுகின்றது. 2018 சிறுபோகம் மற்றும் 2018/19 பெரும்போகத்திற்காக செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டின் பெறுமதி ரூ. 1,016,824,823 ஆக அமைந்தமையால் வெளிநாட்டு மறுகாப்புறுதி தவணையாக செலுத்திய ரூ. 473,032,000 பணத்தொகை பயனற்ற செலவினமாக அமைந்தது.

**(ஒ)** 2019 சிறு போகத்தில் சாதனைபடைத்ததாக அமையக்கூடிய இழப்பீட்டுப் பெறுமதியான 1,284 மில்லியன் ரூபாவில் ஆரம்ப ரூ. 10,000 ஐ செலுத்துவதற்காக 613 மில்லியன் ரூபா காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து கிடைத்திருந்தது. 2019 சிறுபோகத்திற்காக காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் செய்துகொண்ட மறுகாப்புறுதி உடன்படிக்கைக்கிணங்க இந்த சபையின் பொறுப்பான 359 மில்லியன் ரூபா நீக்கப்பட்ட பின்னர் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து மேலும் பெறப்படவேண்டிய 312 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்ள இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஓ)** மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியான 421 பதவிகளில் பதவிநிலைத் தரத்திலான 19, பதவிநிலையல்லாத 98 பதவிகள் மற்றும் 22 கனிஷ்ட பதவிகள் என்றவகையில் 139 வெற்றிடங்கள் நிலவின. இந்த உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை தலைமையகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் அலுவலக மற்றும் வெளிக்கள கடமைப் பணிகளை வினைத்திறனுடனும் தாமதமின்றியும் ஈடேற்றுவதில் தடையாக அமைந்துள்ளது. இதன் காரணமாக சபை 13 ஒப்பந்த அடிப்படையிலான உத்தியோகத்தர்களையும் 48 பயிலுனர் உத்தியோகத்தர்களையும் ஈடுபடுத்தி நிரந்தர பணியாட்டொகுதியின் செயற்பொறுப்பினை ஈடேற்றிவந்தது.

**ஒப்பம்**

**டபிள்யு. பி.சீ. விக்ரமரத்ன**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

எனது இலக்கம்: ஏஜீஎல்/ஈ/பாமர்ஸ்/01/19/02திகதி: 2020 யூலை 17

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

**........................................................................................................................**

மேற்படி அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம் /டப்ளிவ். பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்: 01.செயலாளர் , கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள் அபிவிருத்தி அமைச்சு

02. செயலாளர் , நிதி அமைச்சு

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

எனது இலக்கம்: ஏஜீஎல்/ஈ/ எப்பிஎஸ்/01/19/02திகதி: 2020 யூலை 17

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

**.....................................................................................................................................**

**1. நிதிக் கூற்றுகள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2019 திசம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புகள், பொழிப்பாக தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரச அரசியலமைப்பின் 154 (3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக திட்டத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும் .

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பானதாக அமைதல்

நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களை இனங்காண்பதற்கான ஆயுட்கணிப்பு மதிப்பீடு காலஇடைவெளியில் மேற்கொள்ளப்படவேண்டியபோதிலும் அவ்வாறு செய்யாமல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலான ஓய்வூதியப் பொறுப்பு அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் ரூ. 70,252,869,112 என நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

### (ஆ)திட்டத்தின் இடையறாத வழியுரிமை

சபையின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூ. 74,347,975,129 எதிர்க்கணியப் பெறுமானத்தைக் கொண்டிருந்ததோடு நடைமுறை சொத்துக்களை விஞ்சியதாக நடைமுறைப் பொறுப்புகள் ரூ. 5,098,968,963 ஆக அமைந்திருந்தது. மேலும் 2014 மார்ச்சு 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலமாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் ஓய்வூதியம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டபோதிலும் பங்களிப்பு பணத்தை அறவிடுதல் 1987 மே மாதம் 07 ஆந் திகதிய 452/12 ஆம் இலக்கமுடைய வர்த்தமானப் பத்திரிகை மூலமாக பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த முறைக்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கிணங்க 2018 மற்றும் 2019 ஆகி ஆண்டுகளில் கமக்காரர்களின் பங்களிப்பு முறையே ரூ. 24,552,961 மற்றும் ரூ. 21,495,773 ஆக அமைந்ததோடு ஓய்வூதியம் செலுத்துதல் முறையே ரூ. 3,059,370,767 மற்றும் ரூ. 3,217,332,522 ஆக அமைந்திருந்தது. ஓய்வூதியம் செலுத்துதல் உயர்வடைந்ததால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 2,725,000,000 மற்றும் ரூ. 3,065,000,000 திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்ததோடு திறைசேரியின் பங்களிப்பு இல்லாமல் திட்டத்தைப் பேணிவர இயலாத நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (ஸ்ரீல.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிவிருத்திக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் உசிதமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமானவகையில் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவாக நிதிக்கூற்றுகளைத்

தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டங்களை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளின்அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் ஸ்ரீலங்கா கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்வோரால்மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்வாண்மை தீர்ப்பளிப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்ததேகங்களுடன் ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடு செய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற அபாயநேர்வுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், போதியளவிலானதும் பொருத்தமானதுமான

கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, மறைசூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் எற்பட காரணமாக அமைகின்றன.

- சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வு பெறப்படுகின்றபோதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி பற்றிய அபிப்பிராயமொன்றை தெரிவிக்க கருதுவதில்லை.
- பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடுசெய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய பொருண்மையான நிச்சமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்றதன்மைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் மறுக்கப்பட்டதாதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.
- வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளில் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதோடு அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களையும் சம்பவங்களையும் உசிதமானதாகவும் நியாயமானவகையிலும் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கிய தன்மையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கட்டுப்படுத்துகின்ற தரப்பினர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

**2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கு இணங்க, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து தோன்றுகின்ற தாக்கங்கள் நீங்கலாக கணக்காய்வுக்கு அவசியமான

சகலவிதமான தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது பரிசோதனைகளில் புலனாகின்ற விதத்தில் முறையான கணக்கறிக்கைகள் சபையினால் பேணி வரப்பட்டுள்ளதென்பது,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கு இணங்க திட்டத்தின் நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றதென்பது,
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கு இணங்க இவ்வறிக்கையின் 1.2 (அ) மற்றும் 1.2 (ஆ) அவதானிப்புகள் தவிர்ந்ததாக முந்திய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளனவென்பது,

கடைப்பிடித்த செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் கணியரீதியான விடயங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டமையால் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுகளை வெளியிடுமளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கு இணங்க திட்டத்தின் ஆளுகைச்சபையின் எவரேனும் அங்கத்தவருக்கு திட்டம் சம்பந்தமாக ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறுவிதமாக பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளதென்பது,
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது திட்டத்தின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றப்பட்டுள்ளதென்பது,

| **சட்டத்திட்டங்கள், ஏற்பாடுகளுக்கான தொடர்பு** | **விபரம்** |
| --- | --- |
| 1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் (அ) பிரிவு 4 | உரிய தகைமைகளைக் கொண்டவரும் வயது 18 வருடங்களுக்கு குறையாதவருமான 59 வருடங்களுக்கு மேற்படாதவருமான கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கமக்காரர்களுக்கு தமது தொழில்சார் பணிகளை மேற்கொள்ள இயலாத அளவுக்கு நிரந்தர பகுதியளவிலான உடலியலாமை அல்லது பூரணமான உடலியலாமை ஏற்பட்டவிடத்து பொருளாதாரரீதியாக உறுதுணையாக அமைவதற்கான கொடுப்பனவினை செலுத்துதல், இறப்பின்போது இறப்புப் பணிக்கொடை செலுத்துதல் மற்றும் வயது 60 வருடங்கள் நிறைவடைந்த பின்னர் காலப்பகுதிக்கிணங்க ஓய்வூதியமொன்றை செலுத்துதல் |

நோக்கமாக அமைந்தபோதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை திட்டத்தில் எந்தவோர் அங்கத்தவரும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரிவு 15 (2), (3) எவரேனும் உதவுதொகை செலுத்துனருக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிப்பத்திரத்தின்கீழ் நன்மைகளை இழந்துள்ள சந்தர்ப்பத்தில் அதனை அறிவித்தலொன்று மூலமாக அந்த உதவுதொகை செலுத்துனருக்கு அறிவிக்கவேண்டும். அவ்வாறு அறிவிக்காமை காரணமாக தவணைகளைச் செலுத்தாமையின்பேரில் செல்லுபடியற்றதாகிய உறுதிப்பத்திரமொன்றை மீளவும் செல்லுபடியானதாக்க உதவுதொகை செலுத்துனருக்குள்ள வாய்ப்பு அற்றுப்போனமையால் மீளாய்வாண்டில் வயது 60 வருடங்களைப் பூர்த்திசெய்த ஓய்வூதியம் பெறுவதற்கான உரித்துடையவரெனக் கருதி ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரங்களை சமர்ப்பித்த 1,863 பேருக்கு கமக்காரர் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்வில்லை.

(இ) பிரிவு 20 மதியுரைக் குழுவுக்காக பதவிவழியாக நியமனம் பெறுகின்ற 06 உறுப்பினர்களும் 06 நியமன உறுப்பினர்களும் என்றவகையில் 12 உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டியிருப்பினும் 2019 திசெம்பர் 06 ஆந் திகதிவரை அனைத்து உறுப்பினர்களையும் நியமித்தல் நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டில் மதியுரைக் குழுக்கூட்டங்கள் நடைபெறவில்லை என்பதோடு இறுதியாக 2016 நவெம்பர் 03 ஆந் திகதியே மதியுரைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதற்கிணங்க 03 வருடங்களாக மதியுரைக்குழுக் கூட்டம் நடைபெறவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிட்டுள்ளஅவசியப்பாட்டுக்கு அமைவாக செயற்றிட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக செயற்றிட்டத்தின் வளங்கள் சிக்கனமாக வினைத்திறன்மிக்கதாக மற்றும் பயனுறுதிகொண்டதாக காலப்பகுதிக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்யப்படவில்லை என்பது,

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**(அ)**1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் பிரகாரம் வயது 60 வருடங்களை பூர்த்திசெய்த திகதியில் இருந்து அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அதற்கு முரணாக நிறுவனத்தினால் ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட தினத்திலிருந்து செலுத்துல்கள் மேற்கொள்ளப்பட்டமையால் 2017 ஏப்பிறல் தொடக்கம் 2019 திசெம்பர் 31 வரை 29,049 கமக்காரர்களுக்கு கூட்டுத்தொகை ரூ. 584,359,397 ஓய்வூதியத் தொகை நிலுவையாக காணப்பட்டது. அதைப்போலவே நிதிசார் சிரமங்கள் காரணமாக 2012 - 2013 காலப்பகுதியுடன்

தொடர்புடையதாக 90,573 கமக்காரர்களுக்கு உரித்தான ரூ. 3,033,329,200 ஓய்வூதியமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** 2012 ஆண்டு நிறைவடைகையில் திட்டத்தின் முனைப்பான உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை 959,254 ஆக அமைந்ததோடு, 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் திட்டத்திலிருந்து விலகிய, எலாமை நிலையுற்ற, இறந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தவணைப்பணம் செலுத்தாமையின் காரணமாக விலகியமை பற்றிய தகவல்கள் இற்றைப்படுத்தி பேணிவரப்படவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் முனைப்பான உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை, வருடாந்தம் சேர்கின்ற பங்களிப்புத் தொகை மற்றும் செலுத்தவேண்டிய சரியான ஓய்வூதியப் பெறுமதி எவ்வளவு என்பதை கணிப்பிட இயலாதநிலை காணப்பட்டது.

**(இ)** 2014 சனவரி தொடக்கம் அமுலாக்கப்படுகின்ற புதிய ஓய்வூதியத்திட்டத்தில் சேர்ந்த கமக்காரர் உதவுதொகை செலுத்துனர்களின் உயிர்த் தரவுத் தகவல்களை உள்ளிட்டதாக முறைமையை இற்றைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டுமென 2015 ஓகத்து 25 ஆந் திகதி நடாத்தப்பட்ட மதியுரைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூ. 1,726,875 செலவிட்டு 08 மாவட்டங்களில் மாத்திரம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஏனைய மாவட்டங்களிலும் துரிதமாக மேற்படி பணிகளை நிறைவுசெய்து தரவு முறைமையை இற்றைப்படுத்த சபை நடவடிக்கை எடுத்திராமையால் அதற்காக உறப்பட்ட செலவு பயனற்றதாக அமைந்திருந்தது.

**(ஈ)** தற்போது நிலவுகின்ற முறைக்குப் பதிலாக கமக்காரர் சமுதாயத்திற்காக புதிய ஒய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்காக புத்திஜீவிகள் குழு 2019 யூலை 01 ஆந் திகதி கூட்டத்தை நடாத்தியதோடு அக்குழுவிற்கு கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 4 மாற்றுத் திட்டங்கள் தொடர்பான கணிப்பீடுகளை மேற்கொள்ளல், அறிக்கைகளைத் தயாரித்தல், மேற்படி 4 திட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட திட்டத்தை தயாரித்தலுடன் தொடர்புடைய தகவல்களை புத்திஜீவிகள் குழுவுக்கு சமர்ப்பித்தல், மேற்படி திட்டங்கள் சம்பந்தமான ஆய்வறிக்கைகளை தயாரித்த பின்னர் ஓகத்து மாதத்தில் திறைசேரி திணைக்களத்திடம் சமர்ப்பித்தல் மற்றும் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இணைப்பாக்கத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அது அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** செலுத்தப்பட்டிராத ஓய்வூதியம் பெறுனர்களின் பணத்தொகை மற்றும் இறந்த ஆட்களின் விபரங்களை இற்றைப்படுத்திக் கொள்வதற்காக தபாலதிபர் நாயகத்தினால் பிராந்திய கணக்கு அலுவலகங்களைச் சேர்ந்த தபால் மற்றும் உபதபால்நிலைய அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 2015 யூலை 07 ஆந் திகதிய கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல் கடிதத்தின் பிரகாரம் சபை ஊடாக வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிகளைப் பாவித்து செலுத்தப்படடிராத ஓய்வூதியம் பெறுனர்களின் விபர அறிக்கை மாதாந்தம் பிராந்திய கணக்கு அலுவலகங்களின் தபால் மற்றும் உபதபால் நிலைய அதிபர்களால் கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட

வேண்டியபோதிலும் மாத்தறை மற்றும் கொழும்பு பிராந்திய கணக்கு அலுவலகங்கள் அவ்விதமாக செயற்படாமை காரணமாக மாத்தறை ரூ. 1,000,000 - ரூ. 1,700,000 மற்றும் கொழும்பு ரூ. 1,000,000 - ரூ. 3,000,000 பணத்தொகைகள் ஆண்டுமுழுவதிலும் கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கும் பிராந்திய கணக்கு அலுவலகங்களுக்கும் இடையில் பரிமாற்றப்பட்டு வந்திருந்தது.

**(ஊ)** கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் 03 வங்கிக்கணக்குகளுடன் தொடர்புடையதாக 1992 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்ற வைப்புச்செய்த போதிலும் தேறாத ரூ. 1,179,624 பெறுமதியான 117 காசோலைகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**ஒப்பமிட்டது /டபிள்யு.பீ.சீ விக்கிரமரத்ன,**

**கணக்காய்வாளர் தலைமையதிபதி**

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

எனது இலக்கம்: ஏஜீஎல்/ஈ/பிஷ் /01/19/02திகதி: 2020 யூலை 17

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

**...............................................................................................................**

மேற்படி அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம் /டப்ளிவ். பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்: 01.செயலாளர் , கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை

அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள்

அபிவிருத்தி அமைச்சு

02. செயலாளர் , நிதி அமைச்சு

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

எனது இலக்கம்: ஏஜீஎல்/ஈ/ பிஷ /01/19/02திகதி: 2020 யூலை 17தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

**........................................................................................................................**

**1. நிதிக் கூற்றுகள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புகள், பொழிப்பாக தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக திட்டத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும் .

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பானதாக அமைதல்**

நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களை மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனர்களின் ஓய்வூதிய பொறுப்புக்கான ஆயுட்கணிப்பு

மதிப்பீடு காலஇடைவெளியில் மேற்கொள்ளப்படவேண்டியபோதிலும் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அது மேற்கொள்ளப்படவில்லை. 2007 ஆண்டுக்கான ஓய்வூதியப் பொறுப்பு ஏற்பாடு ரூ. 1,242,006,539 ஆக அமைந்தபோதிலும் 2019 திசெம்பர் 31 திகதியில் அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 3,915,569,738 என நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2011 சனவரி தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலத்துடன் தொடர்புடையதாக ஓய்வூதியத்தைக் கோரிய 121 கடற்றொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்டிராத ஓய்வூதியத்தின் கூட்டுத்தொகை ரூ. 3,685,792 செலுத்தப்பட்டதாக கருதப்பட்டு சென்மதியான கணக்கில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக சென்மதியான கணக்கு இந்த அளவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**(இ) திட்டத்தின் இடையறாத வழியுரிமை**

மீளாய்வாண்டின் இறுதியில் திட்டத்தின் ஓய்வூதிய பொறுப்பு ரூ. 3,915,569 ஆக அமைந்தேதாடு அது கடந்த வருடத்தைப் பார்க்கிலும் நூற்றுக்கு 9.04 வீத அதிகரிப்பாகும். அதைப்போலவே திரண்ட நிதியத்தின் எதிர்க்கணிய நிலைமை ரூ. 3,288,940,708 வரை அதாவது கடந்த வருடத்தைப் பார்க்கிலும் நூற்றுக்கு 11.58 வீதத்தால் அதிகரித்திருந்தமையால் அதுவும் திட்டத்தின் இடையறாத வழியுரிமைமீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. மேலும் எதிர்வரும் ஆண்டுகளில் இந்த நிலைமை மேலும் வளர்ச்சியடையக் கூடுமென்பதால் அது பற்றி கருத்திற்கொண்டு திட்டத்தை மறுசீரமைத்து நிதிசார் சாத்தியவளம்கொண்டதாக அமுலாக்க நிறுவனம் இற்றைவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (ஸ்ரீல.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிவிருத்திக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் உசிதமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமானவகையில் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவாக நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டங்களை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் ஸ்ரீலங்கா கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்வோரால்மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்வாண்மை தீர்ப்பளிப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்ததேகங்களுடன் ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடு செய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற அபாயநேர்வுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், போதியளவிலானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, மறைசூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய

கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் ஏற்பட காரணமாக அமைகின்றன.

- சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வு பெறப்படுகின்றபோதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி பற்றிய அபிப்பிராயமொன்றை தெரிவிக்க கருதுவதில்லை.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய பொருண்மையான நிச்சமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சமற்றதன்மைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் மறுக்கப்பட்டதாதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.
- வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளில் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதோடு அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களையும் சம்பவங்களையும் உசிதமானதாகவும் நியாயமானவகையிலும் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கிய தன்மையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கட்டுப்படுத்துகின்ற தரப்பினர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

## 2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட எற்பாடுகள் அடங்கியுள்ளன.

- ✓ 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக கணக்காய்வுக்காக அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது விசாரணையில் புலனாகின்றவிதத்தில் முறையான நிதியறிக்கைகள் சபையினால் பேணி வரப்பட்டுள்ளதென்பது
- ✓ 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றதென்பது

- ✓ 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கையில் 1.2 (அ) மற்றும் (ஆ) அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளதென்பது

கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் பேரிலும் கணியரீதியான மட்டுப்பாடுகளுக்குள்ளேயும் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் அளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ)பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் ஆளும் சபையினது எவரேனும் அங்கத்தவருக்கு திட்டத்தில் இணைந்து ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளமை.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்பு நீங்கலாக ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது திட்டத்தின் ஆளும் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றி உள்ளமை.

| **சட்டதிட்டங்கள், எற்பாடுகளுக்கான தொடர்பு 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்** | **விபரம்** |
|---|---|
| (அ) பிரிவு16 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியன்று அங்கத்துவப் பணம் செலுத்துவதை தவறவிட்ட 72 அங்கத்தவர்களின் அங்கத்துவத்தை இரத்துச்செய்ய முன்னராக அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செல்லுபடியற்றதாகிய உறுதிப்பத்திரமொன்றை மீளச் செல்லுபடியாக்க உதவுதொகை செலுத்துனருக்குள்ள உரிமையும் அற்றுப்போகச் செய்யப்பட்டிருந்தது. அங்கத்துவம் இழந்தவர்களுக்கு தேறிய தவணைப்பணம் மற்றும் வட்டியாக மீளாய்வாண்டில் ரூ. 1,293,842 மீளச்செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) பிரிவு 20 | 2019 ஆம் ஆண்டுக்காக சபையின் மதியுரைச் சபையின் அனைத்து உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும் 2016 நவெம்பர் 03 ஆந் திகதிக்குப் பின்னர் எந்தவிதமான கூட்டமும் நடாத்தப்படவில்லை. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிட்டுள்ளஅவசியப்பாட்டுக்கு அமைவாக செயற்றிட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக செயற்றிட்டத்தின் வளங்கள் சிக்கனமாக வினைத்திறன்மிக்கதாக மற்றும் பயனுறுதிகொண்டதாக காலப்பகுதிக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்யப்படவில்லை என்பது,

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**(அ)** மீளாய்வாண்டில் 100 உதவுதொகை செலுத்துனர்களையச் சேர்த்துக்கொண்டதன் மூலமாக ரூ. 307,000 உதவுதொகையைப் பெற்றுக்கொள்ளக் கருதியிருந்தபோதிலும் மீளாய்வாண்டில் எந்தவோர் உதவுதொகை செலுத்துனரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதோடு இறப்பு, ஏலாமைநிலை மற்றும் முறைப்படி தவணைகளை செலுத்தாமையின் நிமித்தம் 96 உதவுதொகை செலுத்துனர்கள் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

**(ஆ)** மீளாய்வாண்டுக்காக திட்டத்திற்கான மொத்த பங்களிப்பு ரூ. 340,189 ஆக அமைந்தபோதிலும் ஓய்வூதியம் செலுத்துதல் ரூ. 63,346,699 உம் தேறிய தவணைப்பணம் செலுத்துதல் ரூ. 1,293,842 உம் இறப்பு, ஏலாமை நன்மைகளை செலுத்துதல் ரூ. 368,0000 ஆகவும் அமைந்தமையால் கிடைத்த உதவுதொகையை விஞ்சியதாக நிதியத்திலிருந்து ரூ. 64,668,352 திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ)** வயது 60 வருடங்களை பூர்த்திசெய்த திகதியில் இருந்து ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டியிருப்பினும் திட்டத்தினால் அது தயாரிக்கப்பட்ட தினத்தில் இருந்து செலுத்தப்பட்டமை காரணமாக 129 மீனவர்களுக்கு உரித்தான ரூ. 3,940,215 அளவிலான ஓய்வூதியம் மீளாய்வாண்டின் இறுதியிலும் அட்டுறுவாக்கப்பட்டிருந்தது.

ஒப்பமிட்டது /டபிள்யு.பீ.சீ விக்கிரமரத்ன,

கணக்காய்வாளர் தலைமையதிபதி

எமது இலக்கம்: 2019/4/5/ஓ/ഠ/2 திகதி: 2020.07.22

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2019 ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித்திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக பதிலளித்தல்</u>**

எனக்கு அனுப்பிவைக்கப்பட்ட AGL/AAIB/01/19/15 ஆம் இலக்கமுடைய 2020/06/11 ஆந் திகதி கொண்டதாக 2019 ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித்திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை சம்பந்தமானது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக தயாரித்த பதில் அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எமது தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்வருங்காலத்தில் அத்தவைய வழுக்களைத் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் அறிவிக்க விரும்புகிறேன்

ஒப்பமிட்டது/

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**2019 ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித்திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக பதிலளித்தல்**

1. நிதிக் கூற்றுகள்

**1.1 அபிப்பிராயம்**

**1.2முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) கமக்காரர்களின் இறப்பு மற்றும் ஏலாமை பணிக்கொடை செலுத்துவதற்காக ஒதுக்கீடுசெய்தல் கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தினால் கணிப்பிடப்பட்டு கமக்காரர்களின் இறப்பு மற்றும் ஏலாமை பணிக்கொடை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதோடு அதனோடு தொடர்புடைய தகவல்கள்நாளேட்டுக் குறிப்பு இலக்கம் 12 மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் புதிய உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்ளாமல் அமுலாக்கப்பட்டு வருவதால் ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதோடு எதிர்காலத்தில் ஓய்வூதியத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டதும் ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை உரியவகையில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) மஹியங்கனை, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ இல்லக் காணிகளின் பெறுமதி மற்றும் எம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுதியை மதிப்பீடுசெய்தல் சம்பந்தமாக இன்றளவில் மாவட்டப் பிரதி /உதவிப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதோடு துரிதமாக அந்த பணிகளை நிறைவுசெய்து மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்குப்பதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்புகள்.**

**1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு**

**2 பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை**

**3ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**(அ)** 2021 ஆம் ஆண்டில் எம்பிலிபிட்டியவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லங்களில் அவசியமான திருத்தவேலைகளை மேற்கொண்டு பாவனைக்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஆ)** கண்டிக் காணியில் சிக்கலான நிலைமையொன்று காணப்பட்டதால்நிலஅளவைத் திணைக்களத்திடமிருந்துமீண்டும் நிலஅளவைசெய்து எல்லைகளை அடையாளமிடுவதற்காக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு அதன்பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அம்பாறை, மன்னம்பிட்டி மற்றும் மாகோ ஆகிய பிரதேசங்களில் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீண்டும் புலனாய்வுக்கு உட்படுத்தி எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**(இ)** எதிர்வரும் ஆண்டில் சபையின் தலைமையகத்தை கட்டியெழுப்புவதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு சம்பந்தப்பட்ட நிலப்பரப்பினை ஒதுக்கிக்கொண்ட பின்னர் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திசெய்தல் கூட்டுத்தானத்தினால் பூர்வாங்க நிலப்பகுதியை அமைத்துக்கொடுப்பதை ஈடேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். பணிகள் ஈடேறும்வரை அது மூலதன முற்பணமாக காட்டப்பட்டுள்ளது.

**(ஈ)** சபையின் சேவையிலிருந்து நீங்கிச்சென்ற இளைப்பாறிய/ உத்தியோகத்தர்களின் தவணைகளை செலுத்தத்தவறிய கடன் மீதிகள் மற்றும் வட்டித் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்காக கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு அதன்படி செலுத்துதல்களை மேற்கொள்ளாவிடின் எதிர்காலத்தில் அதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் இவ்விதமாக செலுத்தத்தவறிய பெரும்பாலான உத்தியோகத்தர்களின் கடன்மீதிகள் அவர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தை பெற்றுக்கொள்வதற்காக அவசியமான கடிதங்களை பெற்றுக்கொள்வதற்காக சபைக்கு வரும்போது அறவிட்டுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு ஏனைய உத்தியோகத்தர்களின் கடன்மீதிகளை பிணைகாரர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(உ)** சபைக்கு பல்வேறு தரப்பினர்களிடமிருந்து வருமதியான ரூ. 708,347 ஆக அமைந்த இந்த மீதியை சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(ஊ)** இக்கருத்திட்டங்களை நிறுத்திவிடல் இடம்பெறவில்லை என்பதோடு கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க கருத்திட்டங்கள் (Feasibility Study) மூலமாகப் பெறப்பட்ட அனுபவங்களுக்கிணங்க இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நாடளாவியரீதியில் நடாத்த எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு அவசியமான கருத்திட்ட முன்மொழிவுகள் ஏற்கெனவே அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(எ) துரிதமாக இழப்பீடுகளை செலுத்துவதற்காக பொது திறைசேரியிடமிருந்து நிதி கோரப்பட்டுள்ளதோடு பணம் கிடைத்ததும் உடனடியாக கமக்காரர்களுக்கு இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2020 யூலை மாதமளவில் 2019/20 பெரும்போகத்தையும் உள்ளிட்டதாக அந்த போகத்தில் நிராகரிக்கப்பட்ட கமக்காரர்களின் இழப்பீடுகள் தவிர்ந்த அதற்கு முந்திய போகங்களுக்காகவும் இழப்பீடு செலுத்துதல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**(ஏ)** இன்றளவில் கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித் திட்டத்தின்கீழ் இழப்பீடு கணித்தல் தொடங்கப்பட்டுள்ளது. அதைப்போலவே சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித் திட்டத்தின்கீழ் கமக்காரர் அடையாள அட்டைகளை வழங்க இதுவரை திட்டமிடப்படவில்லை. வருங்காலத்தில் முறைசார்ந்த கமக்காரர் அடையாள அட்டைகளை வழங்குதல் சம்பந்தமாக இன்றளவில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(ஐ)** நிலவிய காலநிலை நிலைமைக்குள் தீவிரமாக அபாயநேர்வு நிலவியமையாலும் இந்த நிலைமையை முன்னர் நிலவிய போகங்களுடன் ஒப்பிடுகையில் தீவிரமான அபாயநேர்வு நிலவுகின்றமையால் மறுகாப்புறுதி பெறப்பட்டுள்ளது. காப்புறுதி நடவடிக்கைமுறைக்கு அமைவாக எதிர்வுகூறப்பட்ட பொறுப்பே இந்த மறுகாப்புறுதிக்கு அடிப்படையாக அமைந்தது. அவ்விதமாக எதிர்பார்த்த வகையிலான சேதம் ஏற்பட்டிருப்பின் மறுகாப்புறுதி மூலமாக நட்டோத்தரவாதம் அளிக்கக்கூடியதாக அமையும். இந்த மறுகாப்புறுதியை பெற்றுக்கொள்கையில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கேள்விச்சபையொன்று மூலமாகவும் துறைசார்ந்த தேர்ச்சிபெற்றவர்களை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவொன்று மூலமாகவும் இதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு காப்புறுதித் திட்டத்திற்கமைவாக செயலாற்றிய இந்த தவணைப் பணத்தை பயனற்ற செலவாக இனங்காண இயலாது. சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வானிலை மற்றும் பிற சேதங்கள் சம்பந்தமாக மிகவும் சரியான எதிர்வுகூறலை செய்வதற்கான இயலுமை கிடையாதென்பதாலும், எதிர்பார்த்தவகையில் பயிர்ச்சேதம் ஏற்படாமையாலும் மறுகாப்புறுதியிடமிருந்து எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கவில்லை.

**(ஒ)** 2019 சிறுபோகத்திற்கான மறுகாப்புறுதியின் கீழ் கிடைக்கவேண்டிய காப்புறுதி இழப்பீட்டுத் தொகைககளைச் செலுத்துமாறு பலதடவைகள் அவர்களுக்கு வாய்மொழி மூலமாகவும் எழுத்திலும் அறிவிக்கப்பட்டுள்ளதோடு இது சம்பந்தமாக பொது திறைசேரியுடனும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்போது இதுதொடர்பாக எதிர்காலத்தில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**(ஓ)** பாராளுமன்ற தேர்தலின் பின்னர் இந்த வெற்றிடங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு பதவிநிலைத் தரங்களைச்சேர்ந்த பதவிகளுக்காக சீக்கிரமாக ஆட்சேர்ப்பு செய்வதற்காக செய்தித்தாள் அறிவித்தல்களை பிரசுரிக்க தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோடு வெற்றிடங்கன் சம்பந்தமான செய்தித்தாள் அறிவித்தல்களை பிரசுரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

.................................................................................................................................

எமது இலக்கம்: 2019/4/5/මු/ගො/2 திகதி: 2020.06.22

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2019 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக பதிலளித்தல்</u>**

எனக்கு அனுப்பிவைக்கப்பட்ட AGL/FPS/01/19/02 ஆம் இலக்கமுடைய 2020/05/26ஆந் திகதி கொண்டதாக 2019 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை சம்பந்தமானது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக தயாரித்த பதில் அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பமிட்டது/

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**2019 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக பதிலளித்தல்**

1. நிதிக் கூற்றுகள்

**1.1 அபிப்பிராயம்**

**1.2முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாக அமைதல்**

2007 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதியத் திட்டம் சுயநிதியீட்டல் அடிப்படையிலானதாக அமையாததால் எதிர்காலத்தில் இந்த செயற்றிட்டத்தை மறுசீரமைத்து முறைப்படி பொறுப்பினை மதிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றளவில் ஓய்வூதியத் திட்டத்தை விரிவாக்குவதன் மூலமாக நியாயமான பங்களிப்பினை ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க எதிர்காலத்தில் அது சம்பந்தமாக முறைசார்ந்தவகையில் புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்துக்கொள்ள இயலுமென கருதப்படுகின்றது.

**(ஆ) திட்டத்தின் இடையறாத வழியுரிமை**

1853/49 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு சுயநிதியீட்டல் அடிப்டையில் பேணிவரக்கூடிய புதிய ஓய்வூதியத் திட்டமொன்று அதன்மூலமாக அறிமுகஞ்செய்யப்பட்டது. கமக்காரர் ஓய்வூதிய நிதியம் பூச்சியநிலையை அடைந்தாலும் ஓய்வூதியம் செலுத்துவதற்காக திறைசேரி நிதியேற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தோன்றியுள்ள ஓய்வூதியப் பொறுப்புடன் சார்புரீதியாக நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்காக பொது திறைசேரிக்கு ஏற்கெனவே அவசியமான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு பொதுதிறைசேரியின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்புகள்.**

**1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு**

## 2 பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

**சட்டதிட்ட ஏற்பாடுகளுக்கான தொடர்பு**

**(அ) பிரிவு 4**

2014 மார்ச்சு 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஓய்வூதியம் செலுத்தப்பட்டபோதிலும் இந்த செயற்றிட்டத்தின்கீழ் செலுத்தவேண்டிய தவணைப்பணம் உயர் பெறுமானத்தைக் கொண்டதாக அமைந்தமையால் இது சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி இந்த செயற்றிட்டத்தை அமுலாக்குவதற்காக அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குமாறு நிதி அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதோடு அதற்கிணங்க இந்த செயற்றிட்டத்திற்கு சேர்த்துக்கொள்வதை தாமதிக்கவேண்டி நேரிட்டது. 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அரச கொள்கை மாற்றத்துடன் புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ் செய்யுமாறு சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைவாக செயலாற்றி புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கமத்தொழில் அமைச்சிற்கு அனுப்பப்பட்டு அமைச்சரவைப் பத்திரம் அங்கீகாரத்தின் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டது. இதன்போது இந்த செயற்றிட்டம் நிபுணத்துவ குழுவொன்றிடம் ஆற்றுப்படுத்தப்பட தீர்மானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் ஆட்சிபீடமேறிய புதிய அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ்செய்ய முன்மொழியப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ) பிரிவு 15 (2) (3)**

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள கமக்காரர்கள் தொடர்ச்சியாக 5 தவணைகளுக்கான பணத்தைச் செலுத்துவதை தவறவிட்டால் அவர்களின் உறுப்பாண்மை அற்றுப்போவதுடன் அது பற்றி அவர்கள் திட்டத்தில் சேர்ந்துகொள்ளும் தருணத்திலேயே அவசியமான விழிப்புணர்வூட்டல் செய்யப்படுவதோடு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தவணைப்பண பதிவுக்குறிப்பேட்டிலும் உறுதிப் பத்திரத்திலும் அது பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விதமான உறுப்பாண்மையை இழந்த கமக்காரர்களின் செலுத்தப்பட்ட தவணைப்பணம் அவர்களின் வயது 60 வருடங்கள் பூர்த்தியடைகின்ற வேளையில் வட்டியுடன் செலவுமீளளிப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ) பிரிவு 20**

கமக்காரர் ஓய்வூதிய மதியுரைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்க ஆவன செய்யவும் துரிதமாக மதியுரைக்குழுக் கூட்டத்தை நடாத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) 20,000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கைகொண்ட கமக்காரர்கள் ஓய்வூதியம் பெறுவதற்காக காத்திருக்கைப் பட்டியலில் இருந்தமையால் மேற்படி கமக்காரர்களுக்கு துரிதமாக ஓய்வூதியம் செலுத்துவதற்காக ஓய்வூதியப் பதிவேட்டில் உள்ளடக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் காத்திருக்கைப் பட்டியலில் இருந்த 20,503 பேருக்கு ஓய்வூதியம் செலுத்த இயலுமை கிடைத்துள்ளது. வருங்காலத்தில் எந்தவிதமான நிலுவையும் ஏற்படாதவண்ணம் ஓய்வூதியத்திற்கான உரித்தினை பெறுகின்ற வேளையிலேயே ஓய்வூதியப் பதிவேட்டில் உள்ளடக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலுவைத் தொகைகளை திறைசேரி ஏற்பாடுகளுக்கிணங்க வருங்காலத்தில் படிப்படியாக செலுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதோடு நிலுவையான ஓய்வூதியம் நிதிக்கூற்றுகளில் சென்மதியான ஓய்வூதியமாக கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்சொன்ன பொறுப்பில் இருந்து நீக்கப்படும்.

(ஆ) திட்டத்தின் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களை இனங்காண்பதற்காக பிற்பட்ட தவணைகளை கணினிமயப்படுத்தும் பணிகள் இன்றளவில் தொடங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தொடர்ச்சியாக பிற்பட்ட தவணைகளை கணினிமயப்படுத்துகின்ற செயற்பாங்கினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதோடு இன்றளவில் பயிலுனர்கள் மூவர் முழுநேர அடிப்படையில் பிற்பட்ட தவணைகளை கணினிமயப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இந்த தரவுகளை உள்ளீடுசெய்யும் கொள்திறனை மேலும் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்றிட்டத்திலிருந்து நீங்கிய , ஏலாமை நிலையுற்ற மற்றும் இறந்த உதவுதொகை செலுத்துனர்களின் தகவல்களை இற்றைப்படுத்தி பேணிவர அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் உறுப்பாண்மைத் தகவல்களை இற்றைப்படுத்தம் நிகழ்ச்சித்திட்டத்தில் தகவல்களை சமர்ப்பித்திருந்த கமக்காரர்களின் எண்ணிக்கை குறைவான பெறுமானத்தைக் கொண்டிருந்தபோதிலும் கிடைத்துள்ள தகவல்களை மாவட்டவாரியாக கணினிமயப்படுத்தி இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபை எதிர்பார்த்த அளவில் கமக்காரர்கள் மதிப்பாய்வுக்கு உரியவகையில் தகவல்களை சமர்ப்பியாமை காரணமாக சம்பந்தப்பட்ட இலக்குகளை அடைய இயலாதுள்ளதோடு வருங்காலத்தில் இந்த தகவல்களை இற்றைப்படுத்த பொருத்தமான முறையியலொன்றை கடைப்பிடிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஈ) கமக்காரர் மற்றும் மீனவ சமுதாயங்களுக்காக புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ்செய்வதற்காக நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழு 9% முதலீட்டு வீதத்தின் கீழ் கமக்காரர் மற்றும் மீனவ சமுதாயங்களுக்காக ஓய்வூதியமொன்றை தயாரிப்பது பொருத்தமானதென தீர்மானித்தது. மேலும் இந்த செயற்றிட்டங்களுக்காக வருமானத்தைக் கணிப்பீடு செய்கின்ற முறையியல் பற்றிக் கண்டறியவும் தீர்மானிக்கப்பட்டது. பயிர்செய்கை வரி நிதியம் மற்றும் கொவிசெத லொத்தர் வருமானத்தை இதற்காக ஈடுபடுத்த இயலுமென்பது பொதுவாக அவதானிக்கப்பட்டது.

புதிய அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் புதிய கமக்காரர் ஓய்வூதிய திட்டமொன்று பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி அரச கொள்கைக்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(உ) செலுத்தப்பட்டிராத ஓய்வூதியத் தொகைகளை மீளச் செலுத்துதல் பற்றி தபாலதிபர் தலைமை அதிபதியால் வெளியிடப்பட்ட 2015 யூலை 07 ஆந் திகதிய அறிவுறுத்தல் கடிதத்தின் பிரகாரம் பிராந்திய கணக்காளர் அலுவலகங்கள் செயலாற்றவில்லை என்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு பற்றி தபாலதிபர் தலைமை அதிபதிக்கு விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க ஓய்வூதியம் செலுத்துதல் ஒவ்வொரு மாதத்தினதும் 07 ஆந் திகதி தொடக்கம் 15 ஆந் திகதிக்கிடையில் 06 அலுவலக நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல் சம்பந்தமான அனைத்து பொழிப்புகளும் செலுத்தப்பட்டிராத ஓய்வூதியம் பெறுனர்களின் விபரங்களும் எஞ்சிய பணத்தொகையும் அடுத்துறும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்பறுதிச்சபைக்கு கிடைக்க ஆவனசெய்யவேண்டுமெனவும் அது பற்றி பிராந்திய கணக்காளர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டு அரசாங்க கணக்காய்வு மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள தாமதங்களை தவிர்த்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளை மெற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றளவில் மாத்தறை மற்றும் கொழும்பு பிராந்திய கணக்காளர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டு செலுத்தப்பட்டிராத ஓய்வூதிய பணத்தொகைகளையும் பெயர்ப்பட்டியல்களையும் துரிதமாக அழைப்பித்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஊ) இந்த மீதிகள் 15 -25 வருடங்களுக்கு இடைப்பட்ட பழைய மீதிகளாக அமைவதோடு 2003 ஆம் ஆண்டில் இது பற்றி விசாரித்தறிந்து சரிசெய்யக்கூடிய அனைத்து மீதிகளையும் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு அவ்விதமாக தேடிக்கொள்ள முடியாமல் போன மீதிகள் இவ்விதமாக முன்கொண்டுவரப்பட்டுள்ளன. ஒரே காசோலைக்கு இரண்டு தடவைகள் பற்றுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளமையே இந்த நிலைமைக்கு பெரும்பாலும் காரணமாக அமைந்துள்ளது. இது சம்பந்தமாக தொடர்ச்சியாக கண்காய்வுக் குழுக்களின்போதும் பொது திறைசேரியில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தைகளிலும் விடயங்கள் ஆராயப்பட்ட பின்னர் பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அங்கீகாரம் கிடைத்தபின்னர் கணக்குகளிலிருந்து பதிவழிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

.....................................................................................................................................

எமது இலக்கம்: 2019/4/5/ஓ/2 திகதி: 2020.06.22

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2019 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக பதிலளித்தல்</u>**

எனக்கு அனுப்பிவைக்கப்பட்ட AGL/E/Fish/01/19/02 ஆம் இலக்கமுடைய 2020/05/19ஆந் திகதி கொண்டதாக 2019 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை சம்பந்தமானது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக தயாரித்த பதில் அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பமிட்டது/

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

**2019 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக பதிலளித்தல்**

1. **நிதிக் கூற்றுகள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**1.2முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாக அமைதல்**

2007 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒய்வூதியத் திட்டம் சுயநிதியீட்டல் அடிப்படையிலானதாக அமையாததால் எதிர்காலத்தில் இந்த செயற்றிட்டத்தை மறுசீரமைத்து முறைப்படி பொறுப்பினை மதிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றளவில் ஓய்வூதியத் திட்டத்தை விரிவாக்குவதன் மூலமாக நியாயமான பங்களிப்பினை ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க எதிர்காலத்தில் அது சம்பந்தமாக முறைசார்ந்தவகையில் புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்துக்கொள்ள இயலுமென கருதப்படுகின்றது.

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்த கணக்கீட்டுக் குறைபாட்டினை

சரிசெய்ய அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உத்தேச புதிய ஓய்வுதியத் திட்டத்தை தயாரிக்கையில் இந்த வழுக்களை தவிர்த்துக்கொள்ள அவசியமான தொழில்நுட்ப மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறையியல்களை அமுலாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**(இ)திட்டத்தின் இடையறாத வழியுரிமை**

கமக்காரர் மற்றும் மீனவ சமுதாயங்களுக்காக புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ்செய்வதற்காக நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழு 9% முதலீட்டு வீதத்தின் கீழ் கமக்காரர் மற்றும் மீனவ சமுதாயங்களுக்காக ஓய்வூதியமொன்றை தயாரிப்பது பொருத்தமானதென தீர்மானித்தது. மேலும் இந்த செயற்றிட்டங்களுக்காக வருமானத்தைக் கணிப்பீடு செய்கின்ற முறையியல் பற்றிக் கண்டறியவும் தீர்மானிக்கப்பட்டது. பயிர்செய்கை வரி நிதியம் மற்றும் கொவிசெத லொத்தர் வருமானத்தை இதற்காக ஈடுபடுத்த இயலுமென்பது பொதுவாக அவதானிக்கப்பட்டது.

புதிய அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் புதிய கமக்காரர் ஓய்வூதிய திட்டமொன்று பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி அரச கொள்கைக்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

### 1.3 <u>நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்புகள்.</u>

### 1.4 <u>நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு</u>

## 2 <u>பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை</u>

<u>சட்டதிட்ட ஏற்பாடுகளுக்கான தொடர்பு</u>

### (I) <u>பிரிவு 16</u>

தொடர்ச்சியாக 10 தவணைகளைச் செலுத்தாத உதவுதொகை செலுத்துனர்களின் உறுப்பாண்மை இல்லாதொழியும் என்பது திட்டத்தில் சேர்ந்துகொள்கின்ற சந்தர்ப்பத்தில் மீனவர்களுக்கு முன்னறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அத்தகைய உறுப்பாண்மை இழத்தல் பற்றி அறிவித்தல் வழங்குவது கடற்றொழில் திணைக்களத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுவதோடு உறுப்பாண்மை அற்றுப்போன மீனவர்களுக்கு கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள் மூலமாக புதிய உதவுதொகை செலுத்துனராக மீண்டும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துகொள்வதற்கான இயலுமை நிலவுகின்றது.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடைய தகுதிவாய்ந்த அதிகாரியான கடற்றொழில் திணைக்களத்திற்கு கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீண்டும் இடம்பெறாதிருக்க ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு விழிப்புணர்வூட்டப்படுகின்றது.

### (II) <u>பிரிவு 20</u>

கடற்றொழிலாளர் ஓய்வூதிய மதியுரைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்க ஆவன செய்யவும் துரிதமாக மதியுரைக்குழுக் கூட்டத்தை நடாத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. <u>ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்</u>

(அ) இந்த செயற்றிட்டம் கடற்றொழில் அமைச்சுடன் கூட்டாக அமுலாக்கப்படுவதோடு உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ளலை உள்ளிட்ட செயலாற்றுகை கடற்றொழில் திணைக்களம் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றது. வருங்காலத்தில் கடற்றொழில் திணைக்களத்துடன் கூட்டாக இந்த செயற்றிட்டத்தை நிதிசார் சாத்தியவளம்கொண்ட புதிய செயற்றிட்டமாக மறுசீரமைக்க எதிர்பார்ப்பதோடு அதற்கிணங்க மிகவும் பயனுறுதிமிக்க அமுலாக்கல் திட்டத்திற்கிணங்க செயற்றிட்டத்தை வருங்காலத்தில் அமுலாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

உரியவகையில் தவணைப்பணத்தைச் செலுத்தாத மீனவர்கள் திட்டத்திலிருந்து அகற்றப்படுவர் என்பது உதவுதொகை செலுத்துனர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் தருணத்திலேயே விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது. மேலும் இறப்பு அல்லது ஏலாமைநிலை ஏற்பட்டால் இறப்புப் பணிக்கொடை அல்லது ஏலாமை நன்மைகளை வழங்குதல் செயற்றிட்டத்தில் உள்ளடங்கியுள்ளது.

(ஆ) தற்போது நிலவுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் நிதிசார் சாத்தியவளம் கொண்ட செயற்றிட்டமாக அமைவதில்லை என்பதால் புதிய ஆட்சேர்ப்பு ஊக்குவிக்கப்படுவதில்லை. ஆனால் செயற்றிட்டத்தில் சேர்ந்துள்ள மீனவர்கள் வயது 60 வருடங்கள் பூர்த்தியடைவதனால் கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமைகளைப் பெறுவதால் இவ்விதமாக ஓய்வூதியம் செலுத்துதல் வளர்ச்சியடைந்து வெளியே பாய்ந்துசெல்கின்ற நிதியத்தின் அளவு அதிகரித்துள்ளது.

(இ) நீண்டகாலமாக கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் தாமதமாகியுள்ள மீனவர்களுக்கு நிலுவை ஓய்வூதியத்தை செலுத்துகையில் அத்தகைய தாமதத்திற்கான காரணங்களை கண்டறிந்த பின்னர் செலுத்துதல்களை மேற்கொள்கையில் பழைய நிலுவை ஓய்வூதியம் செலுத்துதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் இந்த நிலைமை தோன்றியுள்ளது. யுத்தம் நிலவிய மாவட்டங்களில் ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பிக்கையில் பாரிய தாமதங்களை காணக்கூடியதாக இருந்தமையால் அவ்விதமாக தாமதித்தமைக்கான காரணங்களை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரை உள்ளிட்ட மாவட்ட அரச அலுவலர்களிடமிருந்து அதுபற்றிய உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொண்ட பின்னர் சம்பந்தப்பட்ட பணத்தைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

……………………………………………………………………………………………………………………